அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்

(வட மாகாணம்)



பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

வடமாகாணம்

3/8/10

அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்

வட மாகாணம்

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம்

நூல் விபரப்பட்டியல்

நூலின் பெயர்	:	அண்மைக்கால இலக்கியப் போக்குகள் (வடமாகாணம்)
நூலின் வகை	:	ஆய்வரங்க கட்டுரைத் தொகுப்பு
தொகுப்பாசிரியர்	:	நந்தினி சேவியர்
முதல் பதிப்பு	:	2008
தாளின் வகை	:	70 GSM கடதாசி
பக்கங்கள்	:	80
பதிப்புரிமை	:	பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வட மாகாணம்
அச்சகம்	:	ரெயின்போ மினிலாப் (PVT) லிமிடட் 113, வித்தியாலயம் வீதி, திருக்கோணமலை
வெளியீடு	:	பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வட மாகாணம்

பதிப்புரை

1960களில் தமிழ் இலக்கியப் போக்குகள் பல்வகைத்தனவாக விளங்கின. கலை கலைக்காக, கலையும் இலக்கியமும் மக்களுக்காக, என விவாதங்கள் இடம்பெற்றன. பேரா.சதாசிவம், கனகசெந்திநாதன் குழுவினர் கலை கலைக்காக என்று குரல் கொடுக்க பேரா.க.கைலாசபதி, பேரா.கா.சிவத்தம்பி போன்றோர் மார்க்சிய நிலை நின்று இலக்கியவாதம் புரிந்தனர். இக்காலத்திலேயே எஸ்.பொ.நற்போக்கையும், மு.த.மெய்யுளையும் முன்னிறுத்தி குரல் கொடுத்தனர். இவை 60களில் அண்மைக்கால நவீன இலக்கியப்போக்காகவிருந்தது. பின்னர் 70களில், 80களில், 90களில் என அக்காலத்திற்கு அண்மித்ததான இலக்கியக் குரல்கள் வீறுடன் ஒலித்தன.

ஆனால் இன்றோ நிலமைகளில் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. ஒட்டுமொத்த தமிழ் எழுத்துக்களை ஒரு சேர ஆய்வு செய்யும் காலம் போய் பிரதேசம் சார்ந்த இலக்கியப் போக்குகளை ஆய்வு செய்யும் நிலைக்கு நாங்கள் வந்துள்ளோம். எமது ஆய்வுகள் முழுமையானதுதானா? என அவதானிக்க வேண்டிய கடப்பாடும் நமக்குள்ளது.

நுனிப்புல் மேய்தல், குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓடுதல், நயவுரை கூறுதல், இரசிக மணித்தன்மை, வெறும் பட்டியல் இடுதல், என்பன ஆய்வுகள் அல்ல. புதிய தலைமுறையினரிடமிருந்து நல்ல திறனாய்வாளர்கள், விமர்சகர்கள், ஆய்வாளர்கள் தோன்றவேண்டுமென்பதே எமது விருப்பம். அதற்கான களங்களை மாகாணக் கல்வி அமைச்சானது திறந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக இலக்கிய விழாக்களில் ஆய்வரங்குகளை நடாத்தி அக்கட்டுரைகளை நூலுருவாக்கும் பணியை அது செய்து வருகிறது.

அரச கரும மொழியாக தமிழ், நாட்டாரியல் ஆய்வு, தமிழில் சிறுவர் இலக்கியம், பெண்ணியம், ஈழத்து மரபுவழி தமிழ் புலமையாளர்கள், ஈழத்து

இதழியலின் வரலாறும் மதிப்பீடும், ஈழத்துக் கல்வி அறிவியல்சார் எழுத்துக்கள் எனும் ஆய்வுகளின் தொடர்ச்சியாக வடபகுதியின் "அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்" நூலுருவாகியுள்ளது.

கட்டுரைகளைப் பெறுவதற்கு நாம் பட்ட சிரமங்களைவிட விமர்சனங்களைப் பெறுவதே மிக சிரமமானதாகும். முக்கியமாக இவ்வாய்வுக்கட்டுரைகள் முழுமையடைய உங்கள் ஒவ்வொருவரதும் விமர்சனங்கள் எம்மால் எதிர்பார்க்கப்படுகின்றன.

இவ்வாய்வரங்கை நடத்தவும் நூலுருவில் வெளியிடவும் எமக்கு உறுதுணையாக இருந்த கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்களுக்கும், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி.என்.ஸ்ரீதேவி அவர்களுக்கும் ஆய்வுக்கட்டுரை ஆசிரியர்களுக்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்கள ஊழியர்கள், நூலை அச்சிடும் ரெயின்போ மினிலாப் நிறுவனத்திற்கும் எமது திணைக்கத்தின் சார்பில் நன்றிகள்.

நந்தினி சேவியர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம்

முன்னுரை

இவ்வாண்டு இலக்கிய விழாவில் இரு நூல்கள் வெளியிடப்படுகின்றன. ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில் வெளியான சிறுகதைகளின் முதலாவது சிறுகதைத் தொகுதியான "ஈழநாடு சிறுகதைகள்" மற்றையது 2007ல் வவுனியா இலக்கிய விழா ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட "அண்மைக்கால நவீன இலக்கியப்போக்குகள்" எனும் தலைப்பிலான கட்டுரைகளின் தொகுப்பு.

ஆய்வரங்குகளை நடாத்துவது, நூல்களை வெளியிடுவது என இரு சிரமமான பணிகளை ஒருசேர நிகழ்த்துவது குறித்து உண்மையில் நாம் பெருமை கொண்டாலும் இப்படியான நிகழ்வுகளுக்கு ஆய்வாளர்கள், வளப்பேராளர்கள், பேராளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புக்களே முக்கிய உந்துதலாகும்.

வருடாவருடம் இலக்கிய விழா ஆய்வரங்குகளை ஒழுங்கு செய்யுமுன்னர் துறைசார் அறிஞர்களின் ஆலோசனைகளைப் பெற்றே ஆய்வரங்குக்கான தலைப்புகளையும், ஆய்வாளர்களையும் தேர்வு செய்கிறோம். ஆய்வரங்கின் இறுதியில் கருத்தாடலும் தொகுப்புரையும் நிகழ்த்தப்படுவதோடு ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தோரால் ஆய்வுகள் முழுமையாக்கப் பெற்ற பின்னரே நூலுருவாக்கம் செய்கிறோம்.

கடந்த ஆண்டு வவுனியாவில் நடந்தேறிய இலக்கிய விழா ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகள் பற்றி வேறுவிதமான, அதே நேரம் ஆரோக்கியமான விவாதங்கள் அங்கு முன்வைக்கப்பட்டன. அவற்றினைக் கருத்தில் கொண்டு ஆய்வாளர்களால் செம்மைப்படுத்தப்பட்ட கட்டுரைகளே இங்கும் அச்சுருவாக்கப்பட்டுள்ளன.

பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் இராமர் அணை கட்ட உதவிய அணில் போல் நாம் தமிழுக்கும் தமிழ் பண்பாட்டிற்கும் ஆற்ற முயலும் பணிகளை ஆக்கமும் ஊக்கமும் தந்து உற்சாகப்படுத்தும் அனைவருக்கும் எமது கல்வி அமைச்சின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக நூலின் ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்த ஆய்வாளர்கள், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.ஸ்ரீதேவி மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்கள ஊழியர்கள், நூலை அச்சிடும் ரெயின்போ அச்சக ஊழியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. இளங்கோவன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்

வவுனியா மாவட்டம்

முருகேசு கௌரிகாந்தன்
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற்கல்லூரி,
வவுனியா.

"இலக்கு" என்பதினை அடிப்படை இயல்பாக உடையது இலக்கியம் என்பதாகும். சம்பவங்களைப் பிரதிபலித்துக் காட்டுவது என்றும், அழகுபடுத்திக் கூறுவது என்றும் கொள்ளலாம். இலக்கியத்தினைக் கல்வியுடன் தொடர்புபடுத்திப் பார்ப்போமாயின் கல்வி என்பது நீண்டகாலமாக குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமே உரியதாக இருந்தமை போல இலக்கியமும் குறிப்பிட்டவர்களால் குறிப்பிடப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு காலமும் இருந்தது. "இலக்கியம் என்பது உயர்ந்தோர் மாட்டே" எனும் அடி இதனை நன்குணர்த்தும். இவற்றோடு தமிழகத்திலே எழுந்த இலக்கியங்களுக்கு முதன்மையளிக்கின்ற நிலையும், தமிழகத்தாரிடமும் ஈழத்தவரிடமும் நிலவி வந்தமையினையும் மனதிலே கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். தமிழக இலக்கியங்களை "மகா சமுத்திரம்" எனவும் ஈழத்து இலக்கியங்களை அதன் "ஒரு துளி" என்று எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்த ஒரு களத்தைக் குறிப்பிடலாம். இத்தகையதான பின்புலத்தில் நின்று வவுனியா

மாவட்டத்தின் அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகளைக் கூறிச்செல்வது பொருத்தமானதென்று தோன்றுகிறது.

பொதுவாக இலக்கியங்களை அவை தோன்றிய காலத்தின் அடிப்படையிலே பண்டைக்கால இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள் எனப்பாகுபடுத்தினாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை எமது தமிழ் இலக்கியங்களை மரபு சார்ந்தும் அதன் பிற்ப்பாடு புதிய பல பண்புகளைப் பெற்று நவீனத்துவ இலக்கியங்களாகவும் உருவாகி வளர்ச்சி பெற்று வந்துள்ளமையினைக் காண்கின்றோம்.

மரபிலக்கியமும் நவீன இலக்கியமும்.

நவீன இலக்கியத்தைப்பற்றி விளங்கிக் கொள்வதற்கு இதற்கும் மரபிலக்கியத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். மரபிலக்கியமானது ஐந்திலக்கணத்திலே பாண்டித்திய முள்ளவர்களால், சிறப்பாக யாப்பிலக்கணத்திலே தேர்ச்சி பெற்றவர்களால் இயற்றப்பட்டது. செந்தமிழ் நடை பேணப்படும். அரசர்கள், வள்ளல்கள், வணிகப் பெருமக்கள் – அதாவது சமூக மட்டத்திலே மேநிலையில் உள்ளவர்களும், கடவுளர்களும்தான் பாடப்பட வேண்டியவர்கள் என்ற நிலையிலிருந்தது. பாடியோரும் அவற்றைப் படிப்போரும் வரையறுக்கப்பட்ட தொகையினராகக் காணப்பட்டனர்.

நவீன இலக்கியங்கள் பெரும்பாலும் உரைநடை இலக்கியங்களாக இருக்கும். தற்கால இலக்கியங்கள் அல்லது இக்கால இலக்கியங்கள் என அழைக்கப்படும் நவீன இலக்கியங்கள் "பொது மக்களினால் பொதுமக்களுக்காகப் படைக்கப்படுபவை" எனப்படுகின்றன. இலக்கியச்சுவை புதிதாகவும், பாடுபொருள் புதிதாகவும், எளிமை உடையனவாகவும், மண்வாசனை கொண்டனவாகவும், பொதுநல நாட்டமுடையனவாகவும், மரபு மீறல்களாகவும், ஆய்வறிவுடன் கூடிய முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டனவாகவும் பேச்சோசைப் பண்புடை யனவாகவும் திகழும். இக்காலம் விஞ்ஞான தகவல் தொழில் நுட்ப யுகமாகக் காணப்படுகின்றமையால் இவற்றின் செல்வாக்கு சமூகத்திலே பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற போது அது இலக்கியத்திலும் பிரதிபலிக்கின்றது. இத்தகைய புதுமையான மாற்றங்களை உடைய நவீன இலக்கிய வடிவங்களாக நாவல், சிறுகதை, கட்டுரைகள், ஆய்வுகள், விமர்சனங்கள், நாடகம், புதுக்கவிதை என்பன திகழ்கின்றன.

ஈழத்து நவீன இலக்கியங்கள்

தமிழகத்தைப் போலவே ஈழமும் நீண்டகால தமிழிலக்கிய வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடாகும். ஆயினும் ஈழம் தனது தனித்துவத்தை உணர்ந்து கொண்டது 1950ஆம் ஆண்டின் பின்னர் என்று ஒருவாறு கூறலாம். 1960இல் க.பொ.இரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட "இலங்கையில் இன்பத்தமிழ்" எனும் நூலும் ஆ. சதாசிவம் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்ட "ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" (1966) எனும் நூலும் F.X.C. நடராசா அவர்களின் "ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு" எனும் நூலும் ஆரம்பத்திலே ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியத்தை உணரச் செய்வதிலே பெரும் பங்கு வகித்தது மறக்க முடியாத தொன்று. இத்தோடு 1968 ஆம் ஆண்டளவில் முதன்முதலாக கொழும்பு பல்கலைக்கழகத்திலே ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்று ஒரு பாடம் அறிமுகப்படுத்தப் பட்டமையினையும் குறிப்பிடலாம். இவற்றின் விளைவாக "ஈழத்துத் தமிழ் இலக்கியம்" பிரக்ஞைபூர்வமான தன்மையைப் பெறவே, பிரதேச ரீதியாகவும் இலக்கியங்கள் தோன்றத் தொடங்குகின்றன.

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் வவுனியா மாவட்டம்

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தான் நவீன இலக்கியம் தோன்றி வளர்ந்து வந்திருப்பதாக கைலாசபதி குறிப்பிடுகிறார். இலங்கையில் 1875ஆம் ஆண்டளவில் சித்திலெப்பையின் அசன்.பேயுடைய சரித்திரத்துடன் ஆரம்பிக்கப்பட்டாலும் 1930ஆம் ஆண்டிலிருந்து தான் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஏறக்குறைய 1930களிலிருந்து ஈழத்து நவீன இலக்கியத்திற்கு தனது பங்களிப்பைச் செய்து வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். வவுனியா மாவட்டம் எனும் போது செட்டிகுளம், வவுனியா, நெடுங்கேணி ஆகிய மூன்று பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கியதாகும்.

வவுனியா மாவட்டத்தின் ஆரம்பகால நவீன இலக்கிய கர்த்தாக்கள்

வவுனியா மாவட்டத்தின் ஆரம்பகால நவீன இலக்கிய கர்த்தாக்களாக இருவரைக் குறிப்படலாம். முதலாமவர் பண்டித ஸ்ரீமத். வ.சு. இராஜ ஐயனாரவர்கள். (1899–1954) மற்றவர் வன்னியூர்க் கவிராயர் என்னும் எஸ்.எல். சவுந்தரநாயகம் (1921–1978) அவர்களாவர். இராஜ ஐயனாரவர்கள் பல சிறுகதைகளையும்

கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகளில் எமக்குக் கிடைப்பன "மாயக்குதிரை" (ஈழகேசரி, ஆறாவது ஆண்டு மடல் 1936), "கருங்கற்பொடியும். கருவேலம் பிசினும்" (வித்தியா சமாச்சாரப் பத்திரிகை 1937-1940) எனும் இரண்டுமாகும். இவை இரண்டிலும் கற்பனையே மிகுதியும் உள்ளது. தனித்தமிழ் நடையுடையன.

வன்னியூர்க்கவிராயர் நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை கவிதை கட்டுரை என்பவற்றை எழுதியவர். 1953 ஆம் ஆண்டிலிருந்து எழுதிவந்தவர் 1973 ஆம் ஆண்டு "ஈழத்துக்காவிய தீபகம்" எனும் தலைப்பில் இவரது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. இவரது கவிதைகளும் சிறுகதைகளும் "அமுதகங்கை" எனும் பெயரில் 2004ஆம் ஆண்டு ஆனிமாதம் வெளிவந்தன. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தைச் சேர்ந்த தமிழ்மணி அகளங்கன் அவர்களும் கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களும் பதிப்பித்தனர். இராஜ ஐயனாரிலும் பார்க்க வன்னியூர்க்கவிராயரின் ஆக்கங்களிலே பல நவீன அம்சங்கள் உள்ளமை குறிப்பிடப்பட வேண்டியதாகும். சமூக சீர்திருத்தக் கருத்துக்கள், பொருளாதா அபிவிருத்திச் சிந்தனைகள், பொதுவுடமைக் கருத்துக்கள், மண்வாசனை முதலாம் பல அம்சங்கள் இவரின் எழுத்துக்களில் உள்ளன. வன்னிப் பிரதேசத்திலே பல நவீன இலக்கிய எழுத்தாளர்கள் உருவாகுவதற்கு இவரது ஆக்கங்கள் வழிகாட்டியுள்ளமை மறக்கப்பட முடியாததாகும்.

வவுனியா மாவட்டத்தின் அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகளை நோக்குவதற்கு முன்னர் நவீன இலக்கியங்களின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்த நிறுவனங்களைப் பற்றியும், களம் அமைத்துக் கொடுக்கும் சஞ்சிகைகள் மலர்கள் பற்றியும் சுருக்கமாகவேனும் கூறவேண்டிய தேவையுள்ளது. 1960ஆம் ஆண்டின் பின்னர் வவுனியா மாவட்ட மக்களின் கல்வி அறிவை விருத்தி செய்வதில் பாடசாலைகள் பெரும் பங்காற்றியிருக்கின்றன. அறுபதாம் ஆண்டிற்கு முன்னர் விரல் விட்டெண்ணத்தக்க கல்விமான்களாகிய இராஜ ஐயனார், பொன். பூலோகசிங்கம் போன்றோர் யாழ்ப்பாணம் சென்று கற்றுப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகள் மட்டுமன்றி 1993ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் என்பன அறிவுவிருத்திக்குப் பெரும்பங்காற்றின. வவுனியா இலக்கியவட்டம், வவுனியா முத்தமிழ்க்கலாமன்றம், வன்னி இலக்கிய கலாமன்றம்,

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா தமிழ்ச்சங்கம், பிரதேச செயலகம், வவுனியா நகரசபை என்பன இலக்கியக் கருத்தரங்குகள் ஆண்டு விழாக்கள் நூல் வெளியீட்டு விழாக்கள் என்பவற்றை மேற்கொண்டு இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்தி வருகின்றன. வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம், வன்னி இலக்கிய கலாமன்றம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் என்பன மேற்குறிப்பட்ட செயற்பாடுகளுடன் நூல்வெளியீடுகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நவீன இலக்கியக் கருத்தாக்களை வளர்த்தெடுப்பதில் முக்கியபங்கு வகிக்கும் சஞ்சிகைகள், மலர்களையும் குறிப்பிட்டாக வேண்டும். இவற்றை மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் வெளியிட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வித்தியா தீபமும் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து கதிராளியும், சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலிருந்து பிரகாசமும், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியிலிருந்து ஆசிகளும், விபுலானந்தா கல்லூரியிலிருந்து விபுலமும், பெரிய கோமரசன் குளத்திலிருந்து சிகரமும், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து பிறையும், நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்திலிருந்து கலை ஒளியும், புதுக்குளம் மகாவித்தியாலயத்திலிருந்து அறவொளியும் வெளியிடப்பட்டு வருகின்றமையினைக் குறிப்பிடலாம். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் "மாருதம்" என்றொரு இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது. இதுவரை ஏழு இதழ்கள் வெளிவந்துள்ளன சுதாகர் என்பவர் நிலம் என்ற சஞ்சிகை மூன்றினை வெளியிட்டுள்ளார். வவுனியா பூந்தோட்டம் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம் "சமதளம்" எனும் சஞ்சிகையை வெளியிட்டுவருகிறது. வவுனியா பிரதேச செயலகம் மாவட்ட செயலகம், நகரசபை என்பனவும் சஞ்சிகைகளை வெளியிட்டு வருகின்றன. கவிச்சரம் என்ற பெயரில் கவிதைச் சஞ்சிகை வெளிவருகிறது. இவ்வாறான சஞ்சிகைகள் அண்மைக் காலங்களிலே தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றமையால் நவீன இலக்கியங்கள் தோன்றி வளர்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்.

1990ஆம் ஆண்டை அண்டிய காலப்பகுதியிலிருந்து உருவாகி வளர்ந்து வந்த நவீன இலக்கியங்களையே அண்மைக்கால நவீன இலக்கியமென்று கொள்ள

வேண்டியுள்ளது. 1998ஆம் ஆண்டு வெளிவந்த ஒ.கே. குணநாதன் அவர்களது "வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்" எனும் நூலும் 1999 ஆம் ஆண்டு சித்திரைமாதம் "பண்பாடு" இதழில் வெளிவந்த சுப்பிரமணியம் ஜெயச்சந்திரனது "வன்னிப்பிரதேச சிறுகதைகள் – ஒரு தொகுதி நிலை ஆய்வு" எனும் கட்டுரையும் அக்கால வரையிலான வவுனியா மாவட்ட நவீன இலக்கியங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு உறுதுணையாக அமைகின்றன.

வவுனியா மாவட்ட நவீன இலக்கிய கர்த்தாக்கள் எனும் போது இம்மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு எழுதியோரையும், வேறிடங்களிலிருந்து வந்து வவுனியாவை வாழிடமாகக் கொண்டு எழுதியோரையும், வவுனியா மாவட்டத்தில் பிறந்து பிற இடங்களில் வாழ்ந்து எழுதியோரையும், கொள்ள வேண்டியிருக்கிறது. இனி வவுனியா மாவட்டத்து நவீன இலக்கிய வடிவங்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் நோக்குவோம்.

நாவல்கள் (Novels)

உரைநடை இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகிய நாவல் சதாராண மக்களையும் கவரும் தன்மை வாய்ந்ததாகும். சிறிதளவு நேரத்தில் படித்து பயன் பெறவிரும்புவோருக்கு சிறுகதையும் நீண்ட நேரமெடுத்து படித்துமுடிக்க இருப்போருக்கானது நாவல் என்றும் கூறுவர். வவுனியா மாவட்டத்திலே புதுக்கவிதைகள் சிறுகதைகள் முதலானவை எழுந்த அளவுக்கு நாவல்கள் எழவில்லை என்றே கூறவேண்டும். இம்மாவட்டத்திலே தோன்றிய முன்னோடி நாவல்களாக செங்கை ஆழியானால் எழுதப்பட்ட "காட்டாறு" (1977) என்ற நாவலையும் யானை (1978) எனும் நாவலையும் குறிப்பிடலாம். காட்டாறு வவுனியாப் பிரதேச சமூக விவரணமாக அமைகின்ற நாவலாகும். யானை புவியியற் செய்திகளின் பின்னணியில் பழிவாங்கல் தீங்கானது என்ற அறக்கருத்தைக் கூறுவது.

செங்கை ஆழியானை முன்னோடியாகக் கொண்டு அண்மைக் காலத்தில் (1990) வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த யாமினி சிவராமலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட நாவல் "நிலவே நீ மயங்காதே" என்பதாகும். இந்த நாவலை இவர் வன்னியூர் இந்திரா பிரிதர்ஷினி எனும் புனைபெயரில் எழுதியுள்ளார். மீரா பிரசுரமாக வெளிவந்த இந்த சமூக நாவல் 124 பக்கங்களைக் கொண்டது. இந்த நாவலுக்கு அவர் உண்மையில் வைப்பதற்கு இருந்த பெயர் "பெண்கள் யாக்கிரதை" என்பதாக இருந்தது. என்று யாமினி அண்மையில் என்னிடம் தெரிவித்திருந்தார். "நிலவே நீ

மயங்காதே" கதைக்கு அவர் (யாமினி) கொடுத்திருந்த தலைப்பு வேறு. நான் தான் பெயரை மாற்றிவிட்டேன் என்று பதிப்புரையில் அதன் பதிப்பாசிரியர் டேவிட்லிகோரி கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. "பெண்கள் போலி வேடங்களைக் கண்டு மயங்கி தங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்ளக்கூடாது" என்பதாகக் கதை அமைகிறது. இக்கதையிலே "பிரியம்வதா" என்ற பெண் உட்பட பல" பெண்களின் வாழ்க்கையைச் சிதைத்த ஆரூரன் என்பவன் பிரியம்வதா மூலமாகவே சிறை செல்கின்றான். இக்கதையில் வரும் காஞ்சனா சிவராமன் என்பவள் வவுனியாவிலே சேவைகள் பல செய்து வவுனியாவைப் பல வழிகளாலும் புதுப்பொலிவு பெறச் செய்து இறந்து போகும் ஓர் ஒப்பற்ற பாத்திரமாகக் காணப்படுகிறது. இதன் மூலம் ஆசிரியரின் மண்மீதான பற்றும் தெரிகிறது.

இதனைத் தொடர்ந்து அண்மையில் (2006) வெளிவந்த நாவல் நீ.பி. அருளானந்தம் அவர்களின் "வாழ்க்கையின் நிறங்கள்" என்பதாகும். கல்கிசை திருமகள் பதிப்பகத்தின் பதிப்பாக வெளிவந்த இந்த நாவல் 319 பக்கங்களைக் கொண்டு இதுவரை வவுனியா மாவட்டத்தில் வெளிவந்த நாவல்களில் மிக அதிகமான பக்கங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இந்த நாவலைத் தாம் எழுதுவாதாயின் ஒரு நூறு பக்கங்கள் எடுத்திருக்கும் என்று திக்வலைக் கமால் அவர்கள் இந்த நாவல்பற்றி அண்மையில் கூறும்போது என்னிடம் தெரிவித்திருந்தார். நாவல் நீண்டுதான் போய்விட்டது. இதன் ஆசிரியர் நீ.பி. அருளானந்தம் அவர்கள் வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் தற்போது வேறோர் இடத்தில் இருந்து கொண்டு நாற்பது வருடங்களுக்கு முற்பட்டதான வவுனியா நகரத்தின் சூழ்நிலைகளையும் அங்கே வாழ்ந்த மக்களின் வாழ்க்கை இயல்புகளையும் காட்டுவதாகக் கதை காணப்படுகிறது. கதையில் தலைமைத் தானத்தைப் பெறுபவர் பொன்னுத்துரை என்பவர் அவரின் குடும்பம் பெரியது. மாட்டுவண்டிச் சவாரியில் அவருக்குள்ள ஈடுபாடு, தேர்ச்சி மனிதப்பலவீனங்கள் என்பனவும் கதையில் காட்டப்படுகின்றன. அவருடையதும் அவருடைய பிள்ளைகளதும் குடும்பத்திலே நிகழும் சம்பவங்களை உணர்வுபூர்வமாகக் கூறும் அதேவேளை ஒரு காலகட்ட வவுனியா நகரத்தின் வரலாற்றுப்பதிவாகவும் நாவல் திகழ்கின்றது. பல சிறுகதைத் தொகுதிகளை எழுதி வெளியிட்ட அனுபவமுள்ள அருளானந்தம் அவர்களின் முதல் நாவல் இது.

இந்த நாவலைத்தவிர பி. மாணிக்கவாசகம் அவர்களால் எழுதப்பட்ட

இருளில் இருவாரங்கள் எனும் குறுநாவலும் (1977) முல்லைமணி அவர்களால் எழுதப்பட்ட வன்னியர் திலகம், கமுகஞ்சோலை, மழைக்கோலம் ஆகிய நாவல்களும் வவுனியாவில் வெளியீடு செய்யப்பட்டன. செல்லையா குமாரசாமி அவர்களால் எழுதப்பட்ட "கூடில்லாக் குஞ்சுகள்" எனும் நாவலும் (2001) சோ. ஜெயச்சந்திரன் அவர்களால் எழுதப்பட்ட "மனசு" என்ற குறு நாவலும் (2005) வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறுகதைகள்.

நாவலிலும் பார்க்க சிறுகதைகளுக்கென்று தனியிடம் உள்ளது. இதன் அளவும் அமைப்பும் கதைப்பொருளும் பெருந்தொகையானோரை இதன்பால் ஈர்க்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். வவுனியா மாவட்டத்திலே நாவலை விடவும் அதிகமாகத் தோன்றியவை சிறுகதைகளே எனலாம். வவுனியா மாவட்டத்திலே நவீன இலக்கியத்தின் இடைக்கால கட்டத்திலே தோன்றிய சிறுகதைகளாக பீ.மாணிக்கவாசகத்தின் "கரைசேராத ஓடங்கள்" (1977), த.ம.தேவேந்திரன் அவர்களின் "எங்களுக்கும் காலம் வரும்" (1977), வவுனியா எஸ்.அப்துல் சமட்டின் "கிழக்கே போகும் விமானங்கள்" (சிரித்திரன் மாசி 1986), அகளங்களின் "இருள் விலகுகிறது" (1977), மீண்டும்கோழையாய் (1978), தீக்குளிப்பு (1981), வேலிகளும் போலிகளும் (1980), வேலைதேடி (1983), மீண்டுமொரு குருஷேத்திரம் (1986), வெயில்மட்டுமா சுடும் (1987), க்ண்டு மணிச்சாமியார் (1983), நாளைக்கும் பூ மலரும் (2001), வழக்குத்தவணை (2006), கொண்டல்ப் பிசின் (2006), யாழ்தேவி (1998), மண்ணின் மைந்தர்கள் (2006), அன்ரனி மனோகரனின் விஷப்பாம்புகள் (1982) என்பன விளங்குகின்றன. இவை அக்கால அரசியல், பொருளாதார சமூக நிலைமைகளை எடுத்துக் காட்டுவன. அரசியல் தொடர்பானவை கிடைக்குமாறும் இல்லை. அப்துல் சமட்டின் கதை முஸ்லிம் ஆசிரியர் பாடசாலை மாணவர் மீது காட்டும் ஈடுபாடும் ஏமாற்றமும் தொடர்பானது. மேற்படிகதைகள் அண்மைக்கால சிறு கதைகளுக்கு முன்னோடிகளாக அமைந்தவை.

உடுவை எஸ்.தில்லைநடராசா அவர்களின் "நிர்வாணம்" சிறுகதைத் தொகுதியின் முதற்பதிப்பு 1991 இலங்கையிலும் இரண்டாம் பதிப்பு 1994 இல் சென்னை நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் இலும் பதிப்பிக்கப்பட்டது. இவர் வவுனியாவில் அரசாங்க அதிபராக இருந்த காலத்திலே 1992 இல் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்திலே அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இத்தொகுதியில் உள்ள

பன்னிரண்டு கதைகளும் 1967ஆம் ஆண்டு தொடக்கம் 1976ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதியில் வெளிவந்த வெவ்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளிலே பிரசுரிக்கப்பட்டவையாகும். எனவே இத் தொகுதியும் ஒரு வகையில் 90 களுக்குப் பிறப்பட்டதான சிறுகதைகளுக்கு முன்னோடியானதாகும். யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குச்சொற்களைச் சிறப்பாக கையாண்டு நகைச்சுவையுடனும் உயிரோட்டமுள்ளதாகவும் கதைகளை ஆசிரியர் எழுதியுள்ளார்.

1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பாடசாலை ஆண்டுச் சஞ்சிகைகளிலே மாணவர்களும் ஏனைய நிறுவனங்களிலிருந்து வெளிவரும் மலர்களிலே ஏனையோரும் எழுதிக் கொண்டுவருகிறார்கள். இப்போதைக்கு வசதி கருதி வவுனியா மாவட்டத்தில் பேசப்படும் சிறுகதை எழுத்தாளர்களுடைய ஆக்கங்களைக் கொண்டு இலக்கியத்தின் போக்கை நோக்கலாம் இவ்வகையில்பெண் எழுத்தாளர்களான யாமினி, விஜயலட்சுமி மற்றும் நிறைமதி ஆகியோரையும் சோ.ஜெயச்சந்திரா, பீ.ஏ.சீ.ஆனந்தராஜா, நீ.பி.அருளானந்தம், க.ஐயம்பிள்ளை என்போரையும் குறிப்பிடலாம்.

யாமினி பத்துக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். அவற்றில் துவாரகா, கனகாம்பரம், தாலி என்பன குறிப்பிடத்தக்கன. யாமினியினதும் நிறைமதியினதும் கதைகள் பெரிதும் பெண்ணியம் சார்ந்ததாகக் காணப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. யாமினியின் "தாலி" எனும் சிறகதையிலும் இது ஓரளவு பிரதிபலிப்பதனை அவதானிக்கலாம். பிரியதர்ஷினி என்பவள் தந்தையை இழந்தவள். அவளுக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. யார் தாரை வார்த்துக் கொடுப்பது என்ற பிரச்சினை. கணவனை (தாலியை) இழந்தவர் இதனை மேற்கொள்ளக்கூடாது என்ற சம்பிரதாயத்தைக் காட்டி பிரியதர்சினியின் தந்தையின் சகோதரியான சாம்பவி தானும் தன் கணவரும் தான் அதனை மேற்கொள்ள வேண்டும் என்ற போது அதனைத் தனது எதிர்ப்பின் மூலம் மாற்றிப்புரட்சி ஏற்படுத்தினாள் பிரியதர்ஷினி. "மூடுவாயை! என்ன கதைக்கிறது என்று யோசிச்சுக் கதை! உன்ர கொம்மா எப்படி முன்னுக்கு நின்று செய்யுறது? அதுவும் ஒரு நல் விஷயத்தை" – சாம்பவி

"நீங்கள் செய்து சிறக்கிறதைவிட எங்கள் அம்மா செய்தால் இன்னும் கூடச் சிறக்கும். இந்த உலகத்திலேயே என்ர நலனிலையும் சந்தேசத்திலையும் அக்கறையுள்ள ஒரே ஒரு ஆள் என்ர அம்மாதான். நான் சந்தோஷமா, நல்ல படியா

இருக்கவேணும் என்று ஆசைப்படுகிற என் அம்மா என் கல்யாணத்தை முன்னுக்கு நின்று நடத்துறதால என்ர வாழ்க்கை அஸ்தமிச்சுப் போகாது. இருண்டு போகாது. நல்லா, சந்தோஷமாக சகல சுகங்களோடயும் நான் இருப்பேன். ஆனபடியால் அம்மாதான் முன்னுக்கு நின்று சகலதையும் செய்ய வேணும். என்னைப் பெத்து உயிருக்கு மேலாக நினைச்சு இந்த இருபத்தைந்து வருஷமாக வளர்த்து விட்ட அம்மாவை ஒதுக்கிவிட்டுத்தான் நடக்குமென்றால் இந்தக் கல்யாணமே வேண்டாம்" – பிரியதர்சினி

(கலைமருதம் – வவுனியா பிரதேச இலக்கிய விழா மலர் 1995 பக் 45)

பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதனைப் பொருளாகக் கொண்டு எழுதுபவர்களில் நிறைமதியும் ஒருவர். அவர் எழுதிய "மனைவி – மனுசி" என்ற சிறுகதையில் அவரது பெண்ணடிமைத்தனம் தொடர்பான சிந்தனை தெளிவாகத் தெரிகிறது. இக்கதையில் வரும் யசோ என்பவள் ஒரு பட்டதாரி அவள் தொழிலுக்கு செல்லாது வீட்டில் இருப்பவள். அவள் வாழ்க்கையில் சமபங்கெடுத்து வாழும் தனது நண்பி வேணி என்பவளைப் பார்த்துக் கூறுவதைப் பார்ப்போம். "அவருக்கு வலது கரமா இருக்கிறம் எண்டதில சந்தோஷப்பட வேணும் நீர். நான் அவருக்கு மனைவி. ஒரு தாய் அவ்வளவுந்தான்" இன்னோரிடத்தில் யசோ கூறுகின்றாள் "நான் அவருக்கு உண்மையான மனைவியா இருக்கிறது உண்மை. ஆனால் அவரிட்ட ஆணாதிக்க சிந்தனைதான் அதிகம். வாழ்க்கையின்ர பங்காளியா என்னை அவர் நினைக்கேல்லையா எண்டு ஏங்கிறன்நான். கஸ்டங்கள் தான் மட்டுமே சுமக்கிறார். உண்மை. ஆனால் வாழ்க்கையை பங்குபோட வந்தவளுக்கு எல்லாத்திலயும் பங்கிருக்க வேணும் இல்லையா? (கலை மருதம் பக் 95)

அண்மைக் காலத்தில் வெளிவந்த சிறுகதைத் தொகுதியில் வவுனியா குட்செட்வீதியைச் சேர்ந்த செல்வன். சோ.ஜெயச்சந்திரா அவர்களால் எழுதப்பட்ட "இருட்டு ஒளி" சிறுகதைத் தொகுதி (2000) குறிப்பிடத் தக்கதாகும். இதிலே உள்ள பதினான்கு கதைகளும் அர்த்தமுள்ளவை. இத்தொகுதி ஆசிரியரது 21 ஆவது வயதில் எழுதப்பட்டதாக அவரே கூறியுள்ளார். அவரது ஆசிரியர்கள், நண்பர்கள் ஆசியுரை, கருத்துரை வழங்கியிருக்கின்றார்கள். கட்டிளமைப்பருவ உணர்வுகள், இசைக்கலை தொடர்பான ஈடுபாடு, அறிவு, யுத்தம் ஏற்படுத்தும் கொடுமைகள் என்பன இவர் கதைகளில் பிரதிபலிப்பதைக் காணலாம். உதாரணத்திற்கு இவரது அபிராமி என்ற கதையிலும் இப்பண்புகள் காணப்படுகின்றன. வவுனியா – கொழும்பு புகையிரத பயணத்தில் யுத்தத்தின் போது இருகால்களையுமிழந்த அழகுமிகுந்த

அபிராமியுடனான கமலின் உரையாடலில் இப்பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன. "உம்மிடமுள்ளஅந்த றவ் எனக்கு மிகவும் பிடிச்சிருக்கு. அந்த றவ் முகத்தில் இல்லை. உள்ளத்திலேதான் இருக்கு. நீர் தென்னிந்தியத் திரைப்படப்பாடல்களை குறிப்பாக A.R.ரகுமானுடைய பாடல்களை நல்ல தரமான CD செற்றில் அல்லது நல்ல ஒலிநயம் வாய்ந்த சக்தி FM இல் கேட்கும் போது அப்பாடல்களில் வருகிற கிற்றாரில் பேஸ் கோட் லீட் என்று பிரிவுகளுண்டு. அதிலே பேஸ் திக்கானது. றவ் பானது. தடிப்பானது. உறுமும் ஆனால் அது எவ்வளவு இனிமை கூடியதோ அதே போலத்தான் நீரும் (இருட்டு ஒளி பக் 57)

புகையிரத பயணத்தின் போது இன்னும் "ஒருவன் இரண்டு எதிரெதிர் இருக்கைகளுக்கிடையில் நின்று கொண்டிருந்தான். பார்த்தால் சிங்களவன் போலத் தெரிந்தான். சிறிது நேரத்தில் அவர் பக்கத்தில் இருந்த ஆச்சி எழுந்து செல்ல தெரிந்தது அவனுக்கொரு காலில்லையென்று. பாவம் எவ்வளவு நேரம் நின்றிருப்பான். ஒரு கதை சொல்லியிருந்தா இடம் கொடுத்திருக்க மாட்டேனா. எங்கள் மொழிதான் வேறு. மனம் மனிதம் கலந்தது தானே.

"தமிழ் தெரியுமா"

"எனக்கு தமில் மிச்சம் பேச வரும்"

"காலேலாதென்று முதலே சொல்லியிருக்கலாமே.....

என்ன காலில் நடந்தது"

"நான் இராணுவத்தில் இருக்கிறன். யாழ்ப்பாணத்தில இராணுவ நடவடிக்கையொன்றிற்கு தலைமை தாங்கி முன்னாலே சென்ற போது மிதி வெடியில் என்ர கால் போயிற்று"

"யாழ்ப்பாணத்தில இருமாதங்களுக்கு முன் ஆமிக்காறங்கள் செல்லடிச்சதிலே திருநெல்வேலிச்சந்தியில் வைத்து என்னுடைய மகளொருத்தியின் இரண்டு கால்களும் இல்லாமல்ப் போயிற்று என்ன செய்ய. விதி இப்படி எழுதிக்கிடக்கு" – அபிராமியின் தந்தை (இருட்டு ஒளி பக் 59 – 60)

யுத்தம் தோன்றிய பின்னர் விருத்தியடைந்த துறைகளிலே உளவளத்துணை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்துறையிலே பயிற்சிபெற்ற பீ.ஏ.சீ. ஆனந்தராஜா அவர்கள் "அன்புக்கரங்கள் என்ற பெயரிலே 2003 ஆம் ஆண்டு உளவளத்துணை சார்ந்த சிறுகதைகளையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். இதில் வரும் ஒரு கதை. "இந்தப் பொழுது போனால் வராது" என்பது. அக்கதையிலே,

"இந்த மேசைக்கு மேல் ஒன்றையும் வைச்செடுக்க ஏலாம இருக்கு. எழுத வைத்த பேப்பரையும் பேனையையும் காணேல்லை" என்று அடுக்களையிலிருந்த மனைவிக்குக் குரல் கொடுத்தேன். "நான் காணேல்லை ஒரு வேளை ரஞ்சினி எடுத்திருப்பாள் தேடிப்பாருங்கோ" என்று பதில் வந்தது. எனக்குள் சினமும் கொதிப்பும் உயர ஆரம்பிக்கின்றன! பொறுமை, பொறுமை! எனது மேசைமேல் நடாத்தப்படும் ஆக்கிரமிப்பைத் தடைசெய்யக்கூட இந்த மனைவிக்குத் தெரியாதா? பேச்சை வளர்த்துப் பிரயோசனமில்லை! (அன்புக்கரங்கள் பக் 128) தமக்குத்தாமே சீர்மியம் வழங்கும் தன்மையை இதிலே காண்கிறோம்.

வவுனியாவைச் சேர்ந்த நீ.பீ அருளானந்தம் அவர்கள் கபளீகரம் (2003) கறுப்புஞாயிறு (2005) அகதி (2006) போனற சிறுகதைத் தொகுதிகளை எழுதி வெளியிட்டதில் கபளீகரம் சிறுகதைத் தொகுப்பில் உள்ள "ரசனை" என்ற சிறுகதையில் வவுனியா மண்வாசனையை காணலாம்.இவரது சிறுகதைகளில் சமூகப்பார்வை, முற்போக்குச் சிந்தனை, மனித நேய உணர்வு முதலாம் பண்புகளை காணலாம்.

சிறுவர் கதைகள்

சிறுகதை இலக்கிய வடிவங்களைத் தவிர சிறுவர்களுக்கான கதைகளும் அண்மைக் காலத்திலே தோன்றியிருக்கின்றன. இவ்வகையிலே உடுவை எஸ்.தில்லைநடராசா அவர்களின் மந்திரக்கண்ணாடி, கடற்கன்னி (1994) கவிஞர் கண்ணையா அவர்களின் குழந்தை பேசுகிறது (சிறுவர் வளர்ந்தோருக்கான சிறுகதைகள் – 1999) ச.அ.சகாயராஜா அவர்களின் வாழ்வின் அர்த்தம் (2006) என்பவற்றைக் குறிப்பிடலாம். கடற்கன்னி கற்பனை வளம் செறிந்த கதை ஏனைய இரண்டும் பழமொழி, படிப்பினையை அடிப்படையாகக் கொண்ட அறிவூட்டற் கதைகள் பலவற்றின் தொகுப்பாகும். இவற்றோடு ஓ.கே. குணநாதனின் சுதந்திரம், வீர ஆனந்தன், மாயக் கிழவிஆகியவற்றையும் குறிப்பிடலாம்.

கவிதைகள்

வவுனியா மாவட்டத்திலே சிறுகதைகளிலும் பார்க்க அதிகம் தோன்றியவை கவிதைகளே எனலாம். உரைநடை இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்பிருந்தே தமிழிலக்கிய மரபானது கவிதை வடிவில் தோன்றிவளர்ந்து வந்தமையினை அனைவரும் அறிவர்.

வன்னியூர்க்கவிராயர் தமிழ்மணி அகளங்கன், கவிஞர் கண்ணையா. பே.செபமாலை ஆசிரியர், பண்டிதை யோகாசோமசுந்தரம், சிவநெறிப்புரவலர், சீ.ஏ.இராமஸ்வாமி, கண்டாவளைச் கவிராயர், கதிர் சரவணபவன் ஆகியோர் வவுனியா மாவட்டத்திலே யாப்பு வரையறையுடன் கூடிய கவிதை வளர்ச்சிக்குப் பணியாற்றியிருக்கிறார்கள். இவர்களுடைய ஆக்கங்களைப் படித்தோ அல்லது இவர்களால் நெறிப்படுத்தப்பட்டோ பலர் கவிஞர்களாக அண்மைக் காலத்திலே உருவாகியிருக்கிறார்கள்.

நவீன கவிதைகளுக்கு முன்னோடியான மரபுக் கவிதைகள் என்ற வகையில்வன்னியூர்க்கவிராயரின் அமுதகங்கை (2004), கவிஞர் கண்ணையா அவர்களின் கவிதைப் பூக்கள் (1993), அகளங்கனின் தென்றலும் தெம்மாங்கும் (1993) அகளங்கன் கவிதைகள் (1996), இசைப்பாமாலை (1998) யாமினியின் நிவேதனம், சக்திப்பிரதாயினி அர்ச்சனைமலர் பே. செபமாலை ஆசிரியர் அவர்களின் குயிலும்மயிலும் (2006) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றின் வழிவந்த நவீன கவிதைத் தொகுப்பு நூல்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். வவுனியா திலீபனின் "எனது இராகங்கள்" (1989) கோகுலதாஸின் "பாலைவனப் பனித்துளி" (2001) "இருவிழிப் பார்வை ஒரு துளி விஷம்" (2004) கனகரவியின் "இந்த மழை ஓயாதோ" (2001) வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரித் தமிழ் மன்ற வெளியீடாகிய "பூந்தோட்ட கவிப்பூக்கள்" (2004) பிரியாவின் "கவலையை மிதித்து ..." (2002). கி.தபோதினியின் "நெஞ்சம் மறக்குமா" (2003), கவிஞர் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் கவிஞர் க.கோகுலதாஸ், கவிஞர் குரும்பையூர் த.ஜங்கரன், கவிஞர் கே.ஆர்.றஜீவன், கவிஞர் சிவநெறிப்புரவலர், சீ.ஏ.இராமஸ்வாமி ஆகியோர் வழங்கிய "சுனாமிப் பேரலையே" என்னும் கவியரங்கக் கவிதைகள் (2005) நெலோமியின் ஆத்மாவின் இராகங்கள்(2005) காண்டீபன் த. தம்பையா அவர்களின் "சிலதுளி அருவி" (2006) ஸ்ரீஸ்கந்தராஜா "அருணனின்ஸ்பரிசம்" (2007) அ.போனாட்டின் "என் இனிய தமிழே (2007) மானிலாவின் "பூபாளத்துப் பூக்கள்" (2001), தர்மினி பத்மநாதனின் "உணர்வுக்கலசம்" (2000) என்பனவே அவையாகும். எனது கைகளுக்குக் கிடைத்தவற்றையே தந்திருக்கின்றேன்.

எமது தமிழ்க்கவிதைப் பாரம்பரியத்திலே செய்யுட்களைப் பாடுபவர்கள் முதலிலே தமது இட்டதெய்வம் அல்லது குல தெய்வத்தை வேண்டி காப்புச் செய்யுள்

பாடித் தொடங்குவது மரபு. செய்யுட்களைத் தொகுக்கும் போது கூட முதலில் தமது விருப்பத்திற்குரியோருக்கு சமர்ப்பணம் – காணிக்கை கொடுத்தாலும் பக்திப்பாடல்களையே முதனிலையில் வைப்பார்கள். அகளங்கன் கவிதைகளை எடுத்தால் முதலாவதாக "ஆகி அருளி" என்ற தலைப்பிலான அவரது கவிதை "வினைகள்அகலவரந்தர வேண்டும். விநாயகனே உந்தன் அருள் மழை வேண்டும்" என்ற பல்லவியுடன் தொடங்குகிறது. இவ்வாறே கவிஞர் கண்ணையாவின் கவிதைப் பூக்களை எடுத்தால் "பரமனே ரட்சிப்பாயே" எனும் தலைப்பிலான கவிதையே முதலில் இடம் பெறுகிறது. செபமாலை ஆசிரியரின் குயிலும் மயிலும் தொகுப்பிலும் "கடவுள் வாழ்த்து" முதலில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இப்பண்புகள் அண்மைக்காலக் கவிதைத் தொகுப்பு நூல் எவற்றிலும் இடம் பெறாமை அவதானிக்கத்தக்கது.

அண்மைக்கால கவிதைத் தொகுப்பு நூல்களிலே தம்மை உருவாக்கியவர்களுக்கு, பிறந்த மண்ணை நேசித்து பாடுபட்டு உயிர்நீத்தவர்களுக்கு முதன்மையளித்து சமர்ப்பணம் செய்கின்றமை முக்கியமான அம்சமாகும். எடுத்துக்காட்டாக வவுனியா திலீபன் அவர்களுடைய "எனது இராகங்கள்" கவிதைத் தொகுப்பிலே தமது தந்தையாருக்கு முதலில் "சமர்ப்பணம்" எனும் தலைப்பில் கவிதை எழுதித் தொகுத்திருப்பதனை குறிப்பிடலாம்.

அண்மைக்கால நவீன கவிதை எழுத்தாளர்களில் பெரும் பாலோர் இளைஞர்கள் கட்டிளமைப் பருவத்தைச் சேர்ந்தவர்கள். பாடசாலையில் இவர்களுடைய ஆற்றல்களை நல்வழியில் திசைதிருப்பி விடுவதற்காக மேற்கொள்கின்ற பல்வேறு நடவடிக்கையில் முக்கியமானது கவிதைஎழுதுதல் எனலாம். க.கோகுலதாஸ், ஸ்ரீஸ்கந்தராஜா அருணன், அ.பேனாட் ஆகியோருடைய கவிதைத் தொகுதிகளைப் படித்துப் பார்த்த போது இவ்வாறான தொருகருத்துப் புலப்பட்டது.

கந்தசாமி கோகுலதாஸ் அவர்கள் கல்விகற்கின்ற காலத்திலேயே தமிழ்மொழி மீது பற்றுறுதி கொண்டவராகத்திகழ்ந்திருக்கிறார். அந்தப் பற்றும் இவரைக் கவிதை எழுதத்தூண்டியதனால் இதுவரை அவர் இரண்டு தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார். பாலைவனப் பனித்துளி தொகுப்பில் வரும் "தமிழைத்தாயாக நேசி, தாயைத் தமிழாக நேசி" "தமிழ் பேசுங்கள் தமிழர்களே" "தமிழை மறந்தவனுக்காய்" எனும் கவிதைகள் அவரது தமிழ்ப்பற்றை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

கோகுலதாஸிடம் தமிழ்பற்று மட்டுமன்றி பகுத்தறிவுச் சிந்தனை அதிகம் இருந்திருக்கிறது. இதற்கு வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் ந. ரவீந்திரன் அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பும் காரணமாக இருந்திருக்கலாம். "எப்பொழுது உன் விழிப்பு" எனும் கவிதையில் கேட்கிறார் கோகுலதாஸ்

"அடுத்தவனை
திருத்தும்
நீ
எப்பொழுது
திருந்தப்போகிறாய்?"
"பகவத்கீதை
என்ன
பாவம் செய்தது?
..... சத்தியங்கள்"
ஸ்ரீராம ஜெயம்
எழுதிய
ஏட்டில்
ஏன்
திருட்டு
கணக்கு" (இருவிழிப் பார்வை ஒரு துளிவிஷம் பக் 31-32)

ஸ்பரிசம் கவிதைத் தொகுதி அண்மையில் (2007, பெப்ரவரி) ஸ்ரீஸ்கந்தராஜா அருணன் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் காலத்தில் வெளியிடப்பட்டது. இது அவரின் ஒரு செயற்றிட்டமாகும். இக்கவிதையில் வரும் "பூஞ்சோலையில் நானும் அவளும்" "காத்திருப்பு" (SMS) "எனது காதலிக்கு நான் அனுப்பும் குறுங்காவியம்" என்பன வளரிளம் பருவ உணர்வுகளை வெளிக்காட்டுவன.

"பவளக் கொடி இதழ் மேனியாய் பன்னத்தில் செய்த
சிற்பமாய் அவளுக்கு .....
அவள் சரீரம் சரிந்திருந்தே
சட்டென்று ஓர் சத்தம் என்
மனக்கதவினை எழுப்பியது
கனவுதான்!

வருந்தினேன் அன்று
நான் ஏன் உறங்கினேன் என்று!
"பூஞ்சோலையில் நானும் அவளும்" – ஸ்பரிசம் – பக் 33)

வவுனியாவிலே அண்மைக் காலத்தில் தமிழ் இலக்கியப் பணியினை ஆற்றிவரும் நிறுவனங்களில் தேசிய கல்வியியற் கல்லூரியும் ஒன்று. அங்கே உள்ள மாணவ ஆசிரியர்களும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி "பூந்தோட்டக் கவிப்பூக்கள்" எனும் தலைப்பில் தந்திருக்கிறார்கள். பெருந்தொகையான செயற்பாடுகளை இரண்டு வருட காலத்திலே மேற்கொள்ள வேண்டியிருப்பதால் வளமான கவிதைகளை அவர்களால் வடிக்க முடிவதில்லையோ தெரியவில்லை. ஒரு மாணவ ஆசிரியை தமது சகபாடிகளின் இயல்பை "கல்லூரி வாழ்க்கை" என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் பின்வருமாறு பாடியுள்ளார்.

"ஆசிரிய மாணவர்களோ பலர் -- அவற்றில்
சிலர் நட்புடனும் சிலர் காதலுடனும்
சிலர் சகபாட மாணவர்களாகவும்
பலர் பலவாளிகளுடனும் – இவற்றை
எண்ணியே பார்க்கிறேன்" மா.கீர்த்தியா பக் 35

நாட்டின் அரசியற் பிரச்சினை காரணமாக வவுனியாவிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வோர் பலர் தமது உணர்வுகளை வெளிப்படுத்தி எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகையோரில் வவுனியா சேமமடுவைச் சேர்ந்த காண்டீபன் தம்பையா அவர்கள் தமது மன உணர்வுகளை "சிலதுளி அருவி" என்ற தலைப்பிலே தொகுத்து வவுனியா மல்ரிவிஷன் அச்சகத்திலே பதிப்பித்துள்ளார். இத் தொகுப்பில் இடம் பெறும் "பிரிதல் வாழ்தலுக்கே" எனும் தலைப்பிலான கவிதையும் "நினைவு" எனும் தலைப்பிலான சேமமடுக் கிராம வாழ்க்கை வனப்பு என்பன பற்றிய கவிதையும் பிரிவுத்துயரையும் நாட்டுப்பற்றையும் மண்வாசனையினையும் எடுத்துக் காட்டுவதாகும்.

"நீ அழைக்கும்
குரல் கேட்டு
யாழும்
குழலும்
தற்கொலை
செய்யும்

என் அன்பு மகனே!
அப்பா என்ற உன்
குரல் கேட்க
மெய்தீண்ட
ஓடோடி வருவேன் – இந்த
நாடோடி (பிரிதல் வாழ்தலுக்கே – பக் 58)

அடுத்து கனகரவியின் "இந்த மழை ஓயாதோ" என்பதும் நெலோமியின் 'ஆத்மாவின் இராகங்கள்" என்பதும் சமகால நிகழ்வுகளைச் சித்தரித்துக் காட்டும் கவிதைத் தொகுப்பு நூல்களாகும். இந்த வகைக்குள்ளே சுனாமிப் பேரலையே என்ற கவியரங்கக் கவிதை தொகுப்பு நூலையும் கொள்ளலாம். இந்த மழை ஓயாதோ என்று கனகரவி ஏங்கிக் கேட்பது நாட்டிலே பல கொடுமைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் யுத்த மழையினையே

"தண்ணீர் மழையை ஓயச் சொல்லேன்.
இந்த மழையை ஓயக் கேட்பேன்
அவலங்கள் தந்து
அமைதியை அழித்த
கொடூரங்களைத் தந்து
துயர்களை சுமக்க வைத்த
போர்மழையை ஓயக் கேட்பேன்" (இந்த மழை ஓயாதோ – பக்49)

கவிஞர் நாவண்ணின் மகளான நெலோமியின் "ஆத்மாவின் இராகங்கள்" எனும் கவிதைத் தொகுப்பு நூல் அரங்கில் இசைத்தவை என்றும் அகத்தில் இனித்தவை என்றும் இரு பகுதிகளைக் கொண்டது. இவர் ஓர் ஆசிரியையாகவும் இருக்கின்றமையால் சமூகத்திற்குப் பயன்படும் பலவகையான பொருள்களையும் பற்றிப் பாடியுள்ளார். இவை எல்லாவற்றிலும் கவனத்தை ஈர்த்த வரிகள் வருமாறு

"சாதிச் சண்டை சமயச் சண்டை
மோதுவதால் கண்ணீர்
பெரும்பான்மை சிறுபான்மை
பேதங்களால் கண்ணீர்
இனமென்றும் மொழியென்றும் – இந்
நாட்டவர்கள் கண்ணீர்

தினம் நூறு சண்டைகளால்
தீராத கண்ணீர்
பணமுள்ளோன் ஏழை என்ற
பாகுபாட்டுக் கண்ணீர்
யேசு புத்தர் நபி
என்றும் இங்கு கண்ணீர்
மனம் மாற்றம் இல்லையெனில்
மாறாத கண்ணீர்
சுனாமியின் கண்ணீர் என்ன
இதை விடவா கண்ணீர்"
கடல் காவு தந்த கண்ணீர்" (ஆத்மாவின் இராகங்கள் – பக் 6–7)

சுனாமிப் பேரலையே என்ற நூற் கவிதைகள் சமகால நிகழ்வினை வெறுமனே கூறியது என்றில்லாமல் "மீண்டும் எழுவோம்" என்ற நல்ல வழிகாட்டல் சிந்தனையினையும் கொண்டு விளங்குகிறது.

அ.பேனாட்டின் "என் இனிய தமிழே" என்ற கவிதைத் தொகுப்பு கலித்தொகை, புறநானூறு, குறுந்தொகை ஆகிய சங்க இலக்கியங்களின் சுவையை புதுக்கவிதை வடிவில் தருவதாகும். அத்தோடு இடையிடையே வீறாப்பினையுடைய சமகால நிகழ்வுகளையும் பாடத் தவறவில்லை.

"விடுதலை சிலுவையில் உளது
என்கிறாய்
இயேசுவே – அந்த
விடுதலை
யாருக்கானது
உனக்கானதா
எமக்கானதா" (உத்தானத்தின் சின்னம், என் இனிய தமிழே பக்.10)

என்ற வரிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

நாடகம்

முத்தமிழில் ஒன்றாக விளங்கும் நாடகம் நாவல் சிறுகதையைப் போல எமக்கு புதியது அல்ல. நீண்ட காலமாகவே எம்மிடம் நாடக மரபு இருந்து வந்திருக்கிறது. ஆயின் நவீன நாடகம் எனும் போது அது மேற்கத்தேய நாடக வடிவங்களைப்

பின்பற்றியதாகவோ புதுமைகள் புகுத்தப்பட்ட மரபுவழி நாடகமாகவோ அமைந்து காணப்படலாம்.

வவுனியா மாவட்டத்திலே நவீன நாடகங்களுக்குரிய களத்தை பாடசாலைகளும் திருமறைக் கலா மன்றம், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் முதலான நிறுவனங்களும் வழங்கின. அகில இலங்கை தமிழ் மொழித்திறன் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்த வேண்டிய பொறுப்பும் பாடசாலைகளுக்கு இருந்தமையால் சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் நவீன நாடகத்தின் பாலும் அவை கவனஞ் செலுத்தின.

பாடசாலை மட்டத்திலே மகிழ்ச்சிகரன், வெண்ணிலா, விஜயசுந்தரன், ஸ்ரீகந்தவேள், செபமாலை ஆசிரியர் ஆகியோர் நவீன நாடகங்களை மேடையேற்றிவருகின்றனர்.

நவீன நாடக நூல்கள் என்ற வகையிலே கந்தையா ஸ்ரீகணேசனின் நிதர்சனத்தின் புத்திரர்கள் சர்வதேச அடிமைகள், அகளங்கனின் அன்றில்ப் பறவைகள் (1992) இலக்கிய நாடகங்கள் (1994) கூவாத குயில்கள் (2001) முத்து இராதாகிருஷ்ணனின் மானிடச்சிக்கல் (1998) பி.ஏ.சீ. ஆனந்தராஜா அவர்களின் இருட்டினில் குருட்டாட்டம் (2003) என்பன காணப்படுகின்றன.

யுத்தத்தினால் இடம் பெயர்ந்தும் புலம் பெயர்ந்தும் வாழும் தமிழர்களின் அவலங்களையும் துன்பங்களையும் வெளிக்காட்டுவதாக "சர்வதேச அடிமைகள்" காணப்படுகின்றது.

இராதாகிருஷ்ணனின் நாடகங்கள் பாடசாலை மட்ட நாடகங்களாகும். இவற்றிலே தமிழர் பிரச்சினைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. பொருத்தமான குறியீடுகளுடன் மோடிப்படுத்தப்பட்ட அரங்க முறைமைகள் பயன்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலைத்தேய நாடகங்களை மொழிபெயர்த்து மேடையேற்றி அவற்றையெல்லாம் பின்னர் "இருட்டினில் குருட்டாட்டம்" எனும் தொகுப்பு நூலாக பீ.ஏ.சீ.ஆனந்தராஜா அவர்கள் தந்திருக்கின்றார். இதிலே வரும் 16 நாடகங்களில் ஏழு நாடகங்கள் மொழி பெயர்ப்புகளாகும். இவர் ஒரு உளவளத்துணையாளராகவும் இருக்கின்றமையால் அவை தொடர்பான பண்புகளையும் சில நாடகங்களில்

காணலாம். எடுத்துக்காட்டுக்கு "பாப்பா வீரனல்லோ" என்ற நாடகம் உளவியலாளர் ஜான்சிபரன் அம்மையார் ஆங்கிலத்திலே எழுதிய யானைக்கதையின் தழுவலாகும். இழப்புத் துயரத்தை எவ்வாறு கையாளலாம் என்பது பற்றிய கருவை அது கொண்டுள்ளது. இவ்வாறே "தொடர்புகள் துளிர்க்கின்றன" என்பது கணவன் – மனைவி உறவு பற்றியதாக அமைகின்றது. இனக்கொந்தளிப்பு அடங்குமுன் சாதித்துவேசம் தலைகாட்டுவதனை "குருட்டாட்டம்" விவரணமாகக் காட்டுகிறது.

அகளங்கன் அவர்களுடைய நாடகங்கள் பாடசாலைகளில் நடிக்கக்கூடிய நாடகங்களாகவும் வானொலி நாடகங்களாகவும் விளங்குகின்றன. சமகாலப் பிரச்சினைகளான வெளிநாடு செல்வதால் குடும்பங்கள் மனித உறவுகளில் ஏற்படும் பாதிப்புக்கள் (அம்மா நான் வெளிநாடு போறேன், அன்றில் பறவைகள்) சீதனப் பிரச்சினை, காதல் (ஆற்றில் விழுந்த மலர்) யுத்தம், இடப்பெயர்வுகள், உயிர், உடைமை இழப்புக்கள் தமிழர் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தாமை (மாற்றங்கள் மாற்றவில்லை) முதலான பண்புகளை இவரது நாடகங்கள் கொண்டு விளங்குகின்றன.

மாணிக்கம் ஜெகன் அவர்களும் சமாதானம் யுத்த அனர்த்தம் முதலானவற்றைப் பொருளாகக் கொண்ட குறியீட்டு நாடகங்களை மேடையேற்றிவருகிறார் இவரது "இது கதையல்ல" என்ற நாடகம் சமாதானத்தின் தேவையை வலியுறுத்துகிறது. அருணா செல்லத்துரையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு பங்காற்றியிருக்கிறார்.

இலக்கியக்கட்டுரைத் தொகுப்பு நூல்களும் விமர்சனங்களும்.

உரைநடையில் அமைந்த கட்டுரைகள், விமர்சனங்கள் என்பனவும் நவீன இலக்கியங்களின் பாற்பட்டவையே. இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு நூல்கள் விமர்சனங்கள் பெரும்பகுதியும் மரபிலக்கியங்கள் பற்றியனவாக இருந்தாலும் புதிய கண்ணோட்டத்தில் அவற்றைப் பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு என்ற வகையிலே அகளங்கன் அவர்களுடைய இலக்கியத்தேறல் (1988) "இலக்கியச் சிமிழ்" (1992), செந்தமிழும் நாப்பழக்கம் (1997), இலக்கியச்சரம் (2000), நறுந்தமிழ் (2006) போன்றவையும் முஹம்மது சரீப் – றம் சீன் அவர்களது இஸ்லாமியக் கலைகள் எனும் நூலும் ந. இரவீந்திரனின், பின் நவீனத்துவமும் அழகியலும் (1997), பாரதியின் மெஞ்ஞானம் (2003)

எனும் நூல்களும் பொன் தெய்வேந்திரன் அவர்களது சிலம்பின் செய்தி (2002), முத்தமிழ் (2006) ஆகிய நூல்களும் கனகரவி அவர்களது பொங்கு தமிழ் (2005) எனும் நூலும் எனது பார்வைக்குக் கிடைத்தன.

ஆய்வு அல்லது விமர்சனம் என்ற வகையிலே அகளங்கன் அவர்களது வாலி, மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (1994) கவிஞர் ஜின்னாவற்வின் இரட்டைக்காப்பியங்கள் ஓர் ஆய்வு (1999) பாரதப்போரில் மீறல்கள் (2005) என்பனவும் குறிப்பிடத்தக்கன. பொன் தெய்வேந்திரன் அவர்களும் முல்லைமணி, அருணா செல்லத்துரை, ஒ.கே. குணநாதன் ஆகியோரும் இத்துறையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

முடிவுரை

பாடசாலைகள், அரச மற்றும் சமூக நிறுவனங்களின் பங்களிப்பு, தனிப்பட்ட தமிழறிஞர், பெரியோர்களின் சேவைகள் ஆதரவினால் வவுனியா மாவட்டத்தின் நவீன இலக்கியங்கள் 1990ஆம் ஆண்டிற்குப்பின்னர் முன்னைய காலங்களை விட மிகவும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. இளைஞர்களும், மகளிரும் இந்த வளர்ச்சியிலே பெரிதும் பங்கு கொள்கின்றமையும் இலக்கியத்துறையிலே வாழ்விலே முதிர்ச்சி பெற்றவர்களும் தாமும் எழுதிக் கொண்டு இளைஞர் யுவதிகளுக்கு வழிகாட்டிக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நவீன இலக்கியங்களிலே நாவல் எழுதுவது அரிதாகிச் செல்கின்றது. பலருடைய நவீன கவிதைகளும் வளம் நிறைந்ததாக சமூகத்திலே மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியனவாகவும் இல்லை. அனேகமாக அவை வெறும் சொல்லடுக்குகளாகவும் "எழுத வேண்டும் என்பதற்காக" எழுதப்பட்டனவாகவும் உள்ளன. இவ்வாறு எழுதப்பட்டனவற்றைத் தொகுத்து வெளியிடும் போது விமர்சனத்துக்காக வருபவர்களும் தமது பங்களிப்பைச் செய்வதாகவும் இருப்பதில்லை "நயவுரை" என்ற பெயரில் எழுத்தாளரைத் திருப்திப்படுத்துவதற்காக பேசிவிட்டுச் செல்லும் போக்கும் காணப்படுகிறது. இது தரமான நவீன இலக்கியங்கள் தோன்றுவதற்கான சூழலை ஏற்படுத்தாது. இதற்காகவே கடந்த ஆண்டு (2006) நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்திலே நடைபெற்ற "கலை ஒளி" சஞ்சிகை வெளியீட்டின் போது வருகை தந்திருந்த திக்வல்லைக்கமால் அவர்கள் "காணப்படும் குறைகளையெல்லாம் எடுத்துக் காட்டினால் எதிர்காலத்தில் நிறைவாக

எழுதுவார்கள்" என்ற கருத்தைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் எழுத்துக்களிலே காணப்படும் – கூறப்படும் குறைகளை ஏற்று தம்மை வளர்த்துக் கொள்ளும் பக்குவத்தைப் பெற வேண்டும். இலக்கியங்களை வாசிக்கும் பழக்கமும் அரிதாகிச் செல்கின்றமையும் தரக் குறைவிற்கு ஒரு காரணம் எனலாம். எனவே நிறையவே வாசித்து எழுத முயற்சிக்க வேண்டும். எழுதிச் சாதனை படைத்தவர்களும் சமகாலப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டு எழுதுவதற்கு சூழல் சாதகமாக இல்லை என்பதனைக் காரணமாகக் காட்டி ஒதுங்கியிருக்காது இளம் எழுத்தாளர்களை நெறிப்படுத்தித் தாமும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பு

எழுத்தாளர் முல்லைமணி அவர்கள் அண்மைக்காலத்திலே வவுனியா கூமாங்குளத்தில் வாழ்ந்து கொண்டு நாவல், சிறுகதை, நாடகம், விமர்சனம், சுயசரிதம் முதலானவை தொடர்பாக நிறைய எழுதி நவீன இலக்கியத்துறைக்கு அரும்பணி ஆற்றி வருகின்றார். அவரது ஆக்கங்களின் பெரும்பாலானவை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சார்ந்து காணப்படுகின்றன. அருணா செல்லத்துரை அவர்கள் வன்னி பற்றிய பல ஆய்வு நூல்களை வெளியிட்டு வருகிறார். இவை பற்றியும் விரிவாக ஆராயப்பட வேண்டியுள்ளது.

அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்

வன்னிப் பிராந்தியம்

திரு. சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்
ஆசிரியர் நிலைய முகாமையாளர்
வவுனியா வடக்கு கல்வி வலயம்
புளியங்குளம்

அறிதலும் புரிதலும்

இன்று நாம் பேசிக்கொண்டிருப்பது இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தின் இறுதியில்தான். பேசப்படும் விடயம் "அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்" பேசுவதற்குரிய இடம் எல்லோரும் பேச வேண்டும் என எதிர்பார்க்கின்ற உலக நோக்கிலுள்ள ஒரே ஒரு வழியை மட்டும் தேர்ந்தெடுத்துள்ள திறவு கோலாக உள்ள "வன்னி" பற்றியதாகும்.

ஈழத்து வரலாற்றில்–தமிழர்களின் நீண்டநெடிய பயணத்தில் பன்முகப் பார்வை களோடும் பலமான கருத்தாடல்களை முன் வைத்து உலகப் பந்திற்குப் பறை சாற்றிய காலம் பற்றியே பேசப்படுகின்றது. "ஈழத்தின் ஏழாண்டு கால இலக்கிய வளர்ச்சி – ஓர் அவசரக் குறிப்பு" என்னும் தலைப்பில் மு.தளையசிங்கம் அவர்கள் திறனாய்வு ஒன்றினை மேற்கொண்டு நூலாக வெளியிட்டார். அதே நிலைமைகளே

இன்றும் இங்கு ஏற்பட்டுள்ளது. இதுவும் ஓர் அவசரப் பிரசவம் தான். ஆனால் நிதானமானது.

1980களின் பின் குறிப்பாக "மரணத்துள் வாழ்வோம்" கவிதைத்தொகுப்பின் வருகைக்குப்பின் பிரதேசம் சார்ந்த இலக்கிய முயற்சிகள் மேம்பாடடையத் தொடங்கின.

வன்னி என்பது குறுகிய பகுதியாகப் பார்க்கும் பிரதேசமல்ல. அது நீண்டது நெடியது. வரலாற்றுத் தொன்மை கொண்டது. வன்னி, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் எனப் பிரித்திருப்பதன் மாயைத் தோற்றம் புரியப்படுதல் வேண்டும். வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்த்தீவு தவிர்ந்த எல்லாப்பகுதியும் "வன்னி" என்றும் கிளிநொச்சியும் சேர்த்த முழுமையும் "வன்னிப்பெருநிலப்பரப்பு" என்று குறிப்பிடப்படுவதை நாம் மறுதலிக்கவியலாது.

"எமது நிகழ்காலம் கொடூரமான இராணுவ அடக்குமுறைகளின் உச்சங்களையும் அவற்றுக்கெதிராகப் பல்வேறு வடிவங்களிலும் வெடித்தெழும் போராட்டங்களையும் வரலாறாக்குகின்றது. அநீதி, துயரம் அறிவும் தியாகமும் கூடச் சுமந்து கொள்ள முடியாத அளவுக்குப் படுகொலைகள், தங்களுடைய சொந்த மண்ணிலிருந்து வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு அகதிகளாய் வெளியேறுகின்ற மக்கள், எல்லைப்புறங்களில் எரிந்து கொண்டிருக்கும் எமது வீடுகள், வயல்களில், காடுகளில் என்றும் அடங்காத புகை இன்றும் அடங்காத நெருப்பு – இவையே கூழலின் யதார்த்தம்" (மரணத்துள் வாழ்வோம் : பக்கம் 1 : 1983)

இது 1983ல் சேரனால் கூறப்பட்டாலும் இன்றும் இதுவே யதார்த்தம். நவீனம், பின் நவீனத்துவம் என்பன வளர்ச்சி பெற்றுள்ள உலகப் பந்தினூடே தான்இலக்கியம் தனது அண்மைக்காலப் போக்குகளை கொண்டுள்ளது. குறிப்பாக மார்க்சியம், இருப்பியம், உளப்பகுப்பியம் முதலான அறிக்கைகளுக்கு முதன்மை கொடுப்பதை அவதானிக்கலாம். இவ்வடிப்படையில் இலக்கியத்தின் இயல்புகளாக.

1) மொழியை முன்னணிப்படுத்தல்
2) மொழியினுடைய பகுதிகளின் முழுமையாக்கம்
3) புனைவுபடுத்தல்
4) அழகியல்
5) தற்சுட்டான (self reflexive) கட்டுமானம்

ஆகிய தன்மைகளும் விளைவுகளும் எதிரெதிர் நிலையில் அண்மைய இலக்கிய உலகில் அவதானிக்கலாம். இதனை முன்னிலைப்படுத்தியே ஆய்வு முன் நகர்த்தப்படுகின்றது. இங்கு 2000 – 2007 வரையிலான ஏழாண்டுகளே ஆய்வுக்கு உட்படுகின்றது.

வகைப்பாடு :-

அண்மைக்கால இலக்கியப்போக்குகள் என்னும் போது நவீன இலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய ஆக்க இலக்கியங்களும் இவற்றை வெளியிட உதவிய சஞ்சிகைகள் தொடர்பாகவும் பேசலாம்.

கவிதை :-

கவிதை தன்னுணர்வு சார்ந்த இலக்கியவடிவம் என்பது பொதுவான விடயம். நின்ற இடத்திலேயே ஒருவனை அல்லது ஒருத்தியை நெருப்பாக்கிக் கொதிக்க வைக்கக்கூடிய தன்மை கவிதைக்கே உரித்துடையது. அண்மைக்காலத்தில் வன்னியில் வெளிவந்த கவிதைத் தொகுப்புக்களின் பட்டியல் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் சமாதானமும் போரும் என்ற இருண்மையே இவ் ஏழாண்டுகளில் காண முடிகின்றது. 22.02.2002க்கு முன் போரும், 22.02.2002 முதல் 11.08.2006 வரையில் மௌனமான சமாதானமும் 11.08.2006 பின்னரான காலப்பகுதியில் போரும் என இவ்வேழாண்டு காலப்பகுதியில் போரின் துயரொலியும் அதன் வலியும் வாழ்வின் அவலமும் விடுபடுவதற்காக மெய்யாகவே சமாதானத்தை விரும்பும் மக்களின் இலக்கிய வெளிப்பாடு காணப்பட்டதெனினும் அது அலைக்களிக்கப்படாத சமாதானம், ஏமாற்றப்படாத சமாதானம், கூதற்ற சமாதானம் என்பவற்றையே விரும்பினர் என்பதை சில கவிஞர்களின் கவிதைகளில் காணலாம்.

கருணாகரனின் "ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்" தொகுதியில் "உண்மை முகம்"கவிதையில்,

சொல்லப்படாத சொற்களுள்
பீறிடத் துடிக்கின்றன.
கண்ணீரும் துயரமும்
யாரும் ஆற்றமுடியாக் கோபமும்
எழுதாமல் விடப்படும்

எழுத்துக்களுள்ளிருக்கின்றன
இயல்பும் உண்மையும்
அழகும்
நிலைத்த கோடிக்கதைகளும்
கோடிக்கதைகளுள்ளும்
கோடான கோடி உண்மைகள்
நீங்கள் நம்ப முடியாத உண்மைகள்
பார்த்தீர்களா
பொய்களின் உலகில்
உண்மை நம்ப முடியாத ஒன்றாகிவிட்டதை ....."

இங்கு குறிப்பிடப்படும் அம்சங்கள் அம்மண்ணில் வாழும் மனிதர்களுக்குப் புரியும். அவர்களின் வாழ்வோடு பிணைந்திருக்கிறது. இதே போல் "ஒரு பயணியின் குறிப்புரை" என்ற கவிதையில்,

என்னுடைய புன்னகையைத் தந்துவிட்டு
எல்லோருடைய கண்ணீரையும்
எடுத்துச்செல்கிறேன்.
மாபெரும் சவப்பெட்டியில்
நிரம்பியிருக்கும் கண்ணீரைப் போக்கி விடுகிறேன்
கள்ளிச் செடிகள் இனி இல்லை
எனது புன்னகை
நிலவின் ஒளியாய் இருக்கட்டும்"

கருணாகரனின் "எனது வருகை" சற்று வித்தியாசமான பரிசோதனை முயற்சி எனக் கூறலாம். புதுக்கவிதை அமைப்பும் உரையமைப்பும் சேர்ந்துள்ளது. ஒருவகையில் குறியீட்டுத் தன்மையும் காணமுடிகின்றது. இந்நீள் கவிதையில்,

சரித்திரங்களறிந்த
நிலவுக்குத் தெரியும்
என்ன நடக்கப்போகிறதென்று
காற்றறியும் யாவும்.
தேற்றமுடியாத் துயரின் உளைவை
பசு
மாற்றாது நெஞ்சுள் வைத்துள்ளது.
ஊற்றெடுத்தெரிகிறது தீ

உள்ளே கொதிக்கிறது பழி
கன்றின் குரலை
காற்று அழைத்து வந்து
பசுவின் கனவில் சேர்க்கிறது
பசு அறியும்
காற்றறிந்த சேதியெல்லாம்
ஆட்கள் இன்னும் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள்"

இவ்வகையில் கருணாகரனின் கவிதைகளில் யுத்தத்தை எதிர்கொண்ட வாழ்க்கைச் சூழலிலிருந்தும் வாழ்க்கை நிலைகளிலிருந்தும் எழுதப்பட்டவை என்பது தெரிகின்றது. நீண்டகால அரசியல் மற்றும் வாழ்க்கைநெருக்கடிகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ச்சமூகத்தின் உணர்வு வெளிப்பாடுகளோடும் அறிவுநிலைச் சிந்தனையோடும் மொழிச் செம்மையாக்கத்தோடும் தற்சுட்டான இயல்போடும் அதற்கான அழகியலோடும் கவிதைகள் ஆக்கப்பட்டுள்ளன.

நிலாந்தனின் இரு தொகுதிகள்2002ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளன. ஒன்று வன்னி மான்மியம்" மற்றது "யாழ்ப்பாணமே ஒ..... எனது யாழ்ப்பாணமே". ஈழத்துக் கவிதை வரலாற்றில் இரண்டும் புதிய பரிசோதனை முயற்சிகள். வரவேற்றப்பட வேண்டியவைகள். வன்னி மான்மியத்தில் மண் பட்டினங்கள், பாலியம்மன் பள்ளு, வன்னி நாச்சியாரின் சாபம், மடுவுக்குப் போதல் என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது. இந்த நான்கும் வெவ்வேறு இயல்புடையவை: தனித்தனிவகை கொண்டவை: ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடும் புதிதானவை. இவை தமிழ்க் கவிதை உலகம் இது வரையில் பெற்றிராத புதிய நுட்பமுறைப் படைப்புகள். மண்பட்டினம் நமது நிகழ்காலத்தின் அரசியல் விமர்சனம் எனலாம்.

"ஒரு பட்டினத்துக்குப் பதிலாக
இன்னொரு பட்டினம்
பட்டினங்கள் மீது பட்டினங்கள்
தலைப்பட்டினங்கள் சிறு பட்டினங்கள்
எல்லாமே பாழடைந்த பட்டினங்கள்"

பல்வேறு வரலாற்றுச் செய்திகள் இங்கு தரப்படுவதோடு யதார்த்தம் பேசப்பட்டுள்ளது.

"அகஸ்தியரும் புலஸ்தியரும் செய்த
யாகத் தீயினின்றும்

வன்னியன் பிறந்தான்
பிறந்ததிலிருந்து யாகத் தீ
அவனுடைய விழிமணிகளில்
விடாமலெரிந்து கொண்டிருந்தது.
ஆட்காட்டிகள் அவனிடம்
சொந்தம் பாராட்டின.
வண்ணத்துப்பூச்சிகள்
கதிர்காமம் போகும் வழியில்
அவனையும் துணைக்கழைத்துப் போயின
உடுக்கும் பறையும் அவனை
உருவேற்றின.
அவற்றில்
அவனுடைய நினைவுக்கெட்டாத காலத்து
முன்னோர்களின்
காலடியோசைகள் கேட்டன.

இங்கு வன்னியின் பூர்வீகம் பேசப்படுகின்றது. இதனூடாக மக்களின் பெருமைமிகு வரலாற்று நிகழ்வுகள் வெளிப்படுகின்றன. "பாலியம்மன் பள்ளு"ப் பகுதியில்

மின்மினிப் பூச்சிகளைச் சூடிய
முதுபாலை மரத்தின்
கீழிருக்கிறேன்
முன்னால்
வவுனிக்குளம்
எல்லாளன் கட்டியதென்று
சொல்லுகிறார்கள்.
கனகராயன் குளத்தில்
மழை பெய்தால்
வவுனிக்குளம் நிரம்புமாம்
வவுனிக்குளம் நிரம்பினால்
பாலியாறு பெருகுமாம்
பாலியாறு பெருகினால்
பாலியம்மன் உருக்கொள்வாள்

பாலியம்மன் உருக்கொண்டால்
படை திரளும்
படை பெருகும்
போர் மூளும்.

இது மக்களின் ஐதீகம் இந்த ஐதீகம் இன்றைய வாழ்வியலோடு இணைக்கப் படுகின்றது.

காடு மாறிய பறவைகளே
வீடு திரும்புங்கள்
அரசர்கள்
ஆற்றங்கரையில்
காலாற நடப்பாரினி
அரண்மனை மேட்டில் யானைகள் பிளிறுமினி
வேட்டைக்காரர் வருகிறார்
புதிய வேட்டைப் பாடல்களோடு

நிலாந்தனின் படைப்பு அழகாய் உள்ளது. தமிழரின் வாழ்வாய் உள்ளது. உருவம் வேறன்றி, உள்ளடக்கம் வேறன்றி இரண்டும் ஒன்றாய் உள்ளது. எனவே அண்மைக்கால கவிதைப் போக்குகளில் நிலாந்தன் பெரும் மாற்றத்தை ஊற்றெடுக்க வைத்துள்ளார்.

நிலாந்தனின் "யாழ்ப்பாணமே ஒ..... எனது யாழ்ப்பாணமே" கவிதை நூலும் நெடும்பாடல் அமைப்பில் பரிசோதனை முயற்சியாக அமைந்துள்ளது. இது மூன்று பகுதிகளாகக் கொண்டது. புதிய யாழ்பாடி, யாழ்ப்பாணம் பாலை நிலத்தின் புதிர், கந்தபுராண கலாசாரத்திலிருந்து கரும்புலிகள் வரை என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. இங்கும் யாழ்ப்பாணத்தின் பூர்வீகத் தொன்மை வரலாறு மீட்டப்படுகின்றது.

ஒரு பாடலுக்கு பரிசாக தரப்பட்ட
தரிசு நிலம் நீ
படையெடுத்து வந்த
எல்லாப் பகைவர்க்கும்
கவர்ச்சிப் பொருளாயானாய்
இரு ஆறுகள் விழுங்கிய
பாலை நிலம் நீ

உனது தாகம்
ஒரு புதிய வீரயுகத்தின்
பாடு பொருளாயானது.

இங்கும் யாழ்ப்பாணத்தின் வரலாறுகள் பேசப்பட்டுள்ளதெனினும் கவிதையில் கவிதைக்குரிய மொழியில் பேசப்பட்டிருப்பது சிறப்பாகும்.

நெடுங்கோட்டையில்
தார் உருகும் உனது
சாலைகளின் மருங்கில்
வேலிகளில்
தீச்சுடராய்ப் பளிச்சிடும்
முள்முருக்கம் பூவில்
உனது குணமிருக்கும்
உனது வீரமிருக்கும்
உனது விவேகமிருக்கும்
தந்திரமிருக்கும்.
சுயநலமிருக்கும்
நூதனமானவள் நீ
நகரங்களிற்குள்
நிகரேது மற்றவள் நீ
எப்பொழுதும்
எதிரிக்குப் பொறியாய் மாறியவள்
யாழ்ப்பாணமே
ஓ..... எனது யாழ்ப்பாணமே

யாழ்ப்பாணம் 30.10.1995 என்னும் தலைப்பினூடாக யாழ்ப்பாண இடப்பெயர்வு தந்த துயரம் வெளிப்படுத்தப்படுகின்றது.

அன்பான ஜனங்களே.....
எதிரி
நகரைப் பிடிக்க வருகிறான்
காதுள்ளவன்
கேட்டிருக்கக் கூடாத
வார்த்தைகள் அவை'

கண்ணுள்ளவன்
பார்த்திருக்க கூடாத
காட்சிகள் அவை
ஒரிரவுக்குள்
முதுமை
திடீரென எமைத்தாக்கியது
செம்மணி வெளியில்
சோகமாய் நின்று
நகரின்
வரவேற்பு வளைவைக்
கடந்த அக்கணத்திலேயே
எமது கனவுகள்
நரைக்கத் தொடங்கின
யாழ்ப்பாணமே
ஓ..... யாழ்ப்பாணமே
பாலை நிலத்தின் புதிரே
உன்னைப் பிரிந்தோம்
அன்றுனைப் பிரிந்தோம்
இடிந்த கோட்டையே
எரிந்த நூலகமே
குருட்டு மணிக்கூட்டுக்
கோபுரமே
உன்னைப் பிரிந்தோம்
அன்றுனைப் பிரிந்தோம்
பண்ணைத்துறையே
பறங்கித் தெருவே
பொம்மை வெளியே
உமைப் பிரிந்தோம்
அன்றுமைப் பிரிந்தோம்
யாழ்ப்பாணமே
ஓ..... யாழ்ப்பாணமே

இதற்குள்ளும் பல்வேறு வரலாற்றுச் செய்திகளும் யாழ்ப்பாணம் பற்றிய தொன்மம், ஐதீகம் போன்றனவும் பேசப்பட்டுள்ளது. கந்தபுராண கலாசாரம் பற்றி பேசும் போது

யுத்தம் அவனைச் செதுக்கியது
சுயநலமியாய் சேமிப்பில் வெறியானாய் இருந்தவனை
வீரனாக்கியது
இடம் பெயர்வுகள் அவனைப்
பண்பு மாற்றம் பெற வைத்தன.
கந்தபுராண கலாசாரத்திலிருந்து
அவனைக் கட்டாயமாக இடம் பெயர வைத்தன.
ஒவ்வொரு இடப்பெயர்வும் அவனுக்கு
மனப் பெயர்வாய் மாறியது
பட்டப்படிப்பாய் மாறியது
இப்பொழுதுள்ள யாழ்ப்பாணி
ஒரு யுத்தத்தின் கனி
ஒரு மகா அனுபவசாலி
ஒரு மகா தந்திரசாலி
ஒரு மகா விவேகி
ஒரு மகா அனுபவசாலி
ஒரு மகா தந்திரசாலி
ஒரு மகா விவேகி

எனவே வரலாற்றுத் தொன்மத்தில் தொடங்கி தமிழரின் யதார்த்த வாழ்வியலோடு பிணைத்து விடும் பாங்கு நிலாந்தனில் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது.

அம்புலியின் "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" கவிதைத் தொகுதியும் குறிப்பிடத்தக்கது. போராட்டச்சூழல் பெண்விடுதலை என்பவற்றைப் பற்றியவை

பாதுகாப்பற்ற எம் பூமிக்குள்ளிருந்து
எழுகின்ற சாக்குரல்களை
மேவியொலிக்கிறது என் ஓலம்
ஆநியாயமாய் போனதற்காக
வெதும்பியழுகிறது என் ஆன்மா
கற்றுயர்ந்து வாழ்வதற்கான வேகமும்

கன்னிப் பருவத்துக் கனவுகளும்
தீயிடைப்பட்டுத்
துடித்திறக்கின்றன.

நாடறிந்த கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" மிக முக்கியமான கவிதைத் தொகுதியாகும். "காலம் இன்னும் ....." என்னும் கவிதையில்

"தனக்கென்றதோர் தனிக்கூடும்
கூட்டைச் சுற்றிய
கிடுகு வேலியுமாக
எட்டப்பார்வைக்கு ஒன்றாகவும்
தொட்டுப் பார்த்தால் பலவாகவும்
முட்டைக்குள் கருவாக அந்தரத்திலாடும்
வித்தியாசமானவராகவும் இருந்தோம்
எதிலும் ஒட்டாத தனியுலகம் எமது
சீட்டு
வட்டி
சீதனம்
கிணற்றுப்பங்கு
நடுத்திண்ணை, செம்புத்தண்ணீர்
வாய்நனைத்தல்
தேசவழமைச் சிறைக்குடிகள்....."

என நீண்டு செல்கின்றது. இதனூடாக யாழ்பாணர்களின் இயல்பும் அதனை நினைந்துருகிப்பாடும் துயரமும் வெளிப்படுகின்றது.

எனவே ஈழத்துக் கவிதை வரலாற்றுக்கு அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகளில் வன்னிப் பிரதேசக் கவிதைகள் தனக்குரிய தனித்துவ அடையாளங்களோடு மொழியை முன்னணிப்படுத்தல், மொழியினுடைய பகுதிகளின் முழுமையாக்கம், புனைவுபடுத்தல், அழகியல், தற்சுட்டான (self reflexive) கட்டுமானம் முதலியனவற்றினைக் கொண்டுள்ளதனால் ஈழத்துக் கவிதை வளர்ச்சிக்கு தனது பங்கேற்பினை சிறப்பார்ந்த நிலையில் செய்துள்ளது.

சிறுகதை :-

ஈழத்துச் சிறுகதைகள் தனித்துவமானவை அதிலும் வன்னிப்பிரதேசச் சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு புதிய வரவுகளாகவும் வளம் சேர்த்துள்ளன. அண்மைக்கால இலக்கிய வளர்ச்சியில் சில தடங்களைப் பதித்துள்ளன. பல்முகத் தொகுப்புகளும் மொழிபெயர்ப்புத் தொகுப்பும் வெளி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1) வாசல் ஒவ்வொன்றும் – வெளிச்சம் சிறுகதைகள் இதில் 19 படைப்பாளிகளின் சிறுகதைகள் வெளிவந்துள்ளன.
2) கனவுக்கு வெளியேயான உலகு – வானதி பதிப்பகம் இதில் 12 பெண் படைப்பாளிகள் சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இக்கதைகள் யாவும் பெண் எழுத்தாளர்களால் எழுதப்பட்டவை

நனவோடை உத்தியிலமைந்துள்ள "சுமைதாங்கி" யில் வரும் அம்மா என்ன சராசரி அம்மாவாக தனது பெருமைக்குரிய மாவீர மகளிடம் மணிக்கணக்காகப் பேசிவிட்டு, தான் தகட்டைத் தொலைத்து மீளப்பெற்றதற்கு மன்னிக்க வேண்டுகிறாரே! தன் மகளின் துயிலுமில்லப் பள்ளி சற்றும் குறையாது. தன் சுமையை அவர் காலடியில் சமர்ப்பிக்கும் பாங்கு அற்புதமானது. "அண்ணா இன்றைய இந்தப் பகலைவிட்டா உங்களோட கதைக்க எனக்கு நேரம் வராது..." ஏதோ இன்றிரவு வெளியூர் போய்விடுவேன் என்பது போலச் சர்வசாதாரணமாகச் சொன்னவளை உற்றுப் பார்த்தான். என கடமையுணர்வோடு செயற்படும் இயல்பினைக் காணலாம்.

'கை மாறிய இலக்கு' களில் வரும் தமிழரசியும் மலரவனும் இலக்கை நோக்கி பயணிக்க முன் சாதாரணமாகப் பேசிக்கொள்கிறார்கள் ஆனால் வாசகருக்கு இது எத்தகைய அசாதாரணம் என்பது அவர்களுக்கு புரிய நியாயமில்லைதான். என்றாவது ஒரு நாள் எந்த நிலையிலோ மணாளன் வரலாம். அந்த வரவிற்காக பல அம்மாக்கள் பல உயிர்ப்பான உண்மைகளை அடைகாத்தபடி வாழ்கின்றார்கள். "வராதவனுக்கு கூறவுள்ள சேதிகள் மட்டுமா இங்கு அடைகாக்கப்பட்டு வருகின்றன? எனக்காக சேதிகளும் இங்கு எத்தனையோ உண்டு.

பூமாதேவியின் 'மழை' என்னவோ உள்ளங்காலைக் கூட நனைக்கவில்லை. ஆனால் இடப் பெயர்வு துயரலைகள் மட்டும் வாசகரைத் தலை முழுக வைக்கிறது. "நாங்கள் தீவிலையிலிருந்து இடம் பெயர்ந்து இது நான் அடுப்பெரிக்கிற இருபத்தியாறாவது இடம் பிள்ளை" மழைச்சாலை இரவொன்றில்

தாயின் கூற்று. கேட்பவர்கள் விக்கித்துப் போவதற்கு இது என்ன அந்தத் தாய்க்கு மட்டுமா நிகழ்ந்தது? கதைகளாய்க் காகிதத்தில் எழுதப்படாதவை எத்தனை? "இந்த ஆக்கிரமிப்புப் போரின் முகம் எத்தனை குரூரமானது. வாழ்நாளில் எந்தக் காலத்திலும் சந்தோசத்தை அனுபவிக்காமலேயே அறுபத்தைந்து வயதுவரை வாழ்ந்தாகி விட்டது.

"தாமரைச்செல்வி"யின்' 'அம்மா' இங்கு கதாசிரியரின் ஆதங்கம் மட்டுமா புலப்படுத்தப்படுகின்றது? நெஞ்சை அறுத்தொரு துயர்க்காங்கை மெல்ல மூள்கிறது. பெற்றமக்கள் வசதியாய் வாய்ப்பாய் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்ந்து கொண்டு பாராமுகமாய் கைவிட்ட பெற்றோரைப் பல கதைகளின் கதை மாந்தராய்க் கண்டுள்ளோம். இங்கு மகனுக்காகத் தாயும் தாய்க்காக மகனும் வாய்விட்டுரைக்க முடியாத வறுமைத் துயருக்காய் முதியோர் இல்லம் சேரும் கொடுமை வித்தியாசமானது. தாளாத்துயரை மௌனமாய் விழுங்கி விழியருவி ஆறாய்ச் சொரியும் 'அம்மா' உண்மையிலே இந்த மண்ணில் முதியோரின் பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

மண் வாசனையை அள்ளி வீசும்தமிழ்க்கவியின் சொல்லித்தர அப்பு இல்ல' ஒரிதமான சோக சங்கீதமாய் மனதை வருடி வரும்போதே திடீர் என நெருடச் செய்கிறது. சிவத்தப்போடும்' பெரிய வெள்ளைச்சேவலும்' அற்புதம் என்ற கணமே "உன்னை விட்டிட்டு நாங்கள் தப்பீற்றம் அப்பு" நெஞ்சுமுட்டித் தொண்டை அடைக்க கதைக்கு முத்தாய்ப்பு வைக்கப்படுகிறது.

மலரன்னையின் 'பக்கங்கள் இரண்டில்' அப்பா உங்களுக்கு இது தெரியுமா? சேவல் கூவுறதும் பெட்டக்கோழி முட்டை இடுறதும் இயற்கையின் நியதி... அது அவரவர் கெட்டினத்தனமில்லை இது அப்பாவுக்கு நியாயம் கூறும் மகள் சிந்து. இவள் அப்பாவிடம் மட்டும் பேசவில்லை ஒட்டுமொத்த ஆணாதிக்க மனோ பாவத்திற்கு எதிராகவே குரல் கொடுக்கிறாள். எனினும் இதில் வரும் சமூகத்தில் உயர் நிலையில் மதிக்கப்படும் கல்லூரி அதிபர் என்ற பாத்திரமும் ஆதிலட்சுமியின் 'மனைவி என்றொரு பெண்' ணில் படித்துப் பதவி வகிக்கும் பெண்ணாக வரும் சாருமதியும் தங்கள் வேலைப்பளுவை மட்டுமல்ல மனத்திலுள்ள ஆதங்கங்கள் அனைத்தையுமே மௌனமாக விழுங்கிக்கொண்டு தம்மளவில் அதீத கழிவிரக்கத்தைச் சுமந்து கொண்டு இயந்திரமாய் நடமாடும் பாத்திரங்கங்களாய் தோன்றுகின்றனர்.

என்னதான் பெண் விடுதலையும் சம உரிமைக் கோஷங்களும் ஓங்கி

ஒலிக்கின்ற போதும் தமிழீழப் பெண்கள் பலர் மூடத்தனமான சமூகக்கட்டுக்களை அறுத்து தேசத்துக்காகச் சிறகு விரித்தபோதும் இன்னும் படித்த பெண்களின் வாழ்வைக் கூட இவ்வளவு தான் என்ற கசப்பான உண்மையை கதாசிரியர் காட்ட விளைகிறார். இதில் இத்தகைய பெண்களின் இன்னொரு பரிமாணம் படம்பிடித்துக் காட்டப்படுகின்றது. சற்றுவித்தியாசமான முயற்சி பாராட்டத் தோன்றுகிறது. பெண் படைப்பாளிகளின் ஆக்கங்கள் என்பதால் ஆணாதிக்க ஒடுக்குமுறைகளிற்கு எதிரான சீற்றம் பலமாய்த் தென்படுமே என்ற எதிர்பார்ப்போடு கூடிய வாசகருக்கு ஏமாற்றம் தான் மிகச் சிறிதாகப் 'பக்கங்கள் இரண்டும்' மனைவி என்ற பெண்ணும் தொட்டுப்பார்க்க முயல்வதோடு சரி. ஆகத் தமிழ்ப் பெண்கள் ஆணாதிக்க ஒடுக்கு முறைகளை எரித்துப் பொசுக்கிச் சாம்பலாக்கி விட்டனரா? இல்லையெனில் இத்தொகுப்பின் மகளிர்க்கு 'எரியும் பிரச்சினைகள்' இந்த வட்டத்தையும் கடந்து கனவுகளுக்கப்பால் விரியும் மனிதனேயத்தேடலின் தவிப்பே இச் சிறுகதைகள் உறுதிபடச் சொல்லலாம். எங்கிருந்தோ வந்து தன் காலடியிற் செத்துக்கிடக்கும் சிங்கள இராணுவ இளைஞனை நோக்கி "யார் உன்னை அழைத்தாரில் வரும் போராளி – ஆதங்கத்தோடு – பேசுவது பகை முடிக்கும் சீற்றத்தின் மத்தியிலும் ஊற்றெடுக்கும் மனித நேயத்தின் வெளிப்பாட்டிற்கு ஒரு சிறு எடுத்துக்காட்டு. 'ரணங்கள்' பேசும் மொழியிற் சொன்னால் இவை எம் மண்ணின் கறைபடிந்த அத்தியாயங்கள்: குருதியால் எழுதப்பட்ட வாசகங்கள்: மாற்ற முடியாத ரணங்கள் : துன்பத்தின் எச்சங்கள்.

முடிவாகச் சூரியநிலாவின் அம்மா கூற்றாகச் சொன்னால் "உனது தோழர்களும் தோழியர்களும் இப்போது அருமையாக இலக்கியம் எழுதுகிறார்கள். கீறினால் இரத்தம் வருமளவிற்கு அவர்களின் எழுதுகோல்கள் செய்கின்ற அறுவைச் சிகிச்சைகள் சரியான பலனை அளிக்கும் என்பது எனது கருத்து "இங்கு நாங்கள் கண்ட எழுத்துக்களிலும் கீறினால் இரத்தம் வருமோ என்னவோ! நிச்சயமாக அவை ஆழ் மனத்தை கீறி அங்கு சில அதிர்வலைகளைத் தோற்றுவிக்கத் தவறவில்லை என்பது மட்டும் உறுதி.

எனவே 'கனவுக்கு வெளியேயான உலகு' உண்மையில் உண்மைக்குள் உள்ள நிதர்சன உலகு பற்றிய வெளிப்பாடாகும்.

இவற்றைவிட பல்முகத் தொகுப்பாக

3) எழு சிறுகதைகள்

இதில் 13 படைப்பாளிகளின் சிறுகதைகள் உள்ளன. தொகுப்பிலுள்ள படைப்பாளிடமுள்ள தீவிரமும் உண்மையும் ஒளிர் விடும் நம்பிக்கையும் தனித்துவமானவை. சிறப்பானவை அதேவேளை கூர்மையாகவும் நுட்பமாகவும் ஆழமாகவும் அகலமாகவும் படைப்பாக்கத்திறன் விரிவு பெறவில்லை. எனினும் சொல்லப்படும் செய்த வன்னியின் யதார்த்த வாழ்வியலைப் பேசியுள்ளது இவற்றைவிட

4) அழியாத தடங்களாய் – ரமேஸ்

5) இருட்டு ஒளி – ஜெயச்சந்திரன்

இவர்கள் இருவரும் சிறுகதைகள் என வெளிவந்திருப்பினும் சிறுகதை வளவுக்குள் செல்வதற்கு சில காலங்கள் பயணிக்க வேண்டும்.

மொழி பெயர்ப்பு முயற்சியில் ஒரு சிறுகதைத்தொகுதி வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கில மொழி மூலத்திலிருந்து 7 சிறுகதைகள் சு.மகேந்திரன் அவர்களால் 'தீ நிழல்கள்' எனும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளது. உலகப் போராட்டங்களின் பின்னணியாக இருந்தாலும் இவை தமிழ்தேசியத்துடன் ஒத்துழைக்கக் கூடியவைகள் எனலாம். கோரியா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, அயர்லாந்து, பாலஸ்தீனம், செஞ்சீனா ஆகிய நாடுகளின் பிரபல எழுத்தாளர்களின் கதைகளாகும்.

வன்னிப் பிரதேசச் சிறுகதைகள் அண்மைக் காலங்களில் மூன்று பிரதான வகைப்பட்டனவாக வெளிப்பாட்டைக் காணலாம்.

1. போராடும் களத்திலிருந்து, போராடும் சக்தியின் தளத்திலிருந்து படைக்கப்படும் படைப்புக்கள். இவை தமிழ்த் தேசியப் போராட்டத்தை நடைமுறைப் போராட்ட வாழ்வுடனும் அனுபவங்களுடனும் இணைந்து நின்று வலுவுடன் பேசுபவை
2. போராட்டம் சார்ந்தனவாகவோ பிறவாகவோ பிற இடங்களிலிருந்து வெளிப்படுத்தப்படுபவை. இவற்றில் பெரும்பாலானவை தெளிவான, உறுதியான நிலைப்பாடெடுப்பதில் ஒருவித அமுங்கல் தன்மையைக் கொண்டவை. அரச பயங்கரவாதமும் அதன் அடக்குமுறை அச்சுறுத்தலும் அதற்குள்ளான வாழ்வு முறையும் இதற்குக் காரணமாயிருக்கலாம்.

3. ஈழத்தமிழர்களான புலம்பெயர்ந்தவர்களின் படைப்புக்கள். அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் தமது சூழல் சார்ந்த படைப்புகளை இப்போது அதிகம் வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தாலும் தாயக நினைவுடனும் வேட்கையுடனும் போராட்டம் சார்ந்த படைப்புக்களையும் குறிப்பிடக்கூடிய அளவுக்கு வெளிப்படுத்தினர்.

வெவ்வேறு சூழல் வாழ்க்கை முறை. வாழ்வனுபவங்கள், எனக் கொண்டிருந்தாலும் எல்லாத் தரப்பினரிடையேயும் பொதுவாகப் போராட்டமும் அது சார்ந்த விடுதலையின் வேட்கையை மேன்மேலும் வெளிப்படுத்தும் பெரும் முயற்சி காணப்படுகின்றது. ஏனெனில் ஈழத்தமிழர் எல்லோரும் எங்கும் எதிர்கொள்ளும் நெருக்கடி என்பது இன்று பொதுவானது சுதந்திர தேசத்துக்கான அவசியத்தை உணர்த்துவது, வலியுறுத்துவது அதற்கான குரலாகவே நமது இந்தப் படைப்புகளும் அமைந்துள்ளன.

நாவல் :-

ஈழத்து நாவல் எவ்வாறு மெதுவான வளர்ச்சியுடன் நகர்ந்து செல்கின்றதோ அது போலவே வன்னிப்பிரதேசத்திலும் நாவல் இலக்கியம் மிகக்குறைந்த வரவுகளையே தந்துள்ளது.

குறிப்பாக

1) கமுகஞ்சோலை – முல்லைமணி
2) மழைக்கோலம் – முல்லைமணி
3) மனசு – சோ. ஜெயச்சந்திரன்
4) இனிவானம் வெளிச்சிரும் – தமிழ்க்கவி

இவற்றையே இங்கு நாம் குறிப்பிடலாம். இவற்றுள் முல்லைமணியின் கமுகஞ்சோலை மிக முக்கியமானது. இது ஒரு வரலாற்று நாவல் நாட்டார் இலக்கியமாக இருக்கும் நாட்டார் கதைப்பாடல் 'கமுகம் சண்டை' என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. வரலாற்றுச் சம்பவங்களோடு புனைவும் காணப்படுகின்றது. இதனால் வன்னிப்பிரதேச மக்களின் வாழ்க்கையின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட மாற்றங்களையும் சம்பவங்களையும் சித்தரிக்கின்றது. மக்கள் வாழ்க்கை அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் போராட்டங்கள் வெற்றி தோல்விகள் அடக்குமுறைகள் என்பனவே நாவலின் மைய நிகழ்ச்சியாகும். வன்னியின் பண்பாட்டுக் கோலங்கள் வெளிப்பட்டு

நிற்கிறது. மாட்டுப்பட்டி பெரிய வளவு துப்புரவு செய்தல் வேப்பங்குச்சியில் பல்துலக்குதல் முதலியன குறிப்பிடத்தக்கன. இது வரலாற்று நாவலுக்குரிய அம்சங்களைக் சிறப்பாகக் கொண்டுள்ளது.

எனவே வன்னிப் பிரதேசத்தின் அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகளை முழுமையாகப் பார்க்கின்ற போது போர் தந்த அவலங்கள், துயரங்கள், சாக்குரல்கள், பெண்விடுதலை, மண்விடுதலை, வன்னி மக்களின்வாழ்வியலும் அவர்களின் பண்பாட்டம்சங்களும் நடைமுறையிலுள்ள வெற்றி தோல்விகள் என்பன பேசப்பட்டுள்ளன. சிலர் குறிப்பிடுவது போல வன்னி இலக்கியங்கள் இருண்மைத் தன்மைக்குள் சிக்கித் தவிக்கவில்லை. ஏகத்துவத்துடன் வெளிவருகின்றன. இவற்றுள் கவிதைகள் மிகச் சிறந்த வெளிப்பாட்டு –நுட்பங்களுடனும் பரிசாதனை முயற்சி களுடனும் உள்ளடக்கத்திற்கு முதன்மை கொடுத்து வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

தீர்க்கம்:

எனவே 2000 தொடக்கம் 2007 வரையிலான இலக்கியங்களை பார்க்கும் போது

1. கவிதை ஆழமாகவும் அகலமாகவும் வளர்ச்சியடைந்துள்ளது.
2. சிறுகதை புதிய உத்திகளையும் எடுத்துரைப்புகளையும் காட்டியுள்ளது.
3. நாவல் வளர்வதற்கு மேலும் பயணிக்க வேண்டும்.

எனவே இவ்வடிப்படையில் இலக்கியத்தின் இயல்புகளாக

1. மொழியை முன்னணிப்படுத்தல்
2. மொழியினுடைய பகுதிகளின் முழுமையாக்கம்
3. புனைவுபடுத்தல்
4. அழகியல்
5. தற்சுடட்டான (selt reflexive) கட்டுமானம்

ஆகிய தன்மைகளும் விளைவுகளும் அண்மைய வன்னிப் பிரதேச இலக்கிய வரவில் அவதானிக்கலாம். ஆகவே ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாறு பற்றிச் சிந்திக்கின்ற போது வன்னிப்பிரதேசம் மறுதலிக்க – நிராகரிக்க முடியாததொன்று என்பது நிதர்சனமாகும்.

"கர்ஷம் இனியுமெமக்குக் கருணை செய்யுமெனில் மீண்டும் சந்திப்போம்."

பின்னிணைப்பு 1 கவிதைத் தொகுப்புக்கள்:

1) ஆனையிறவு – தமிழ்த்தாய் பதிகம்
2) செம்மணிகள் – தமிழ்த்தாய் பதிகம்
3) புரவிகள் திரும்புகின்றன – உமாஜிப்ரான்
4) ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல் – கருணாகரன்
5) மனதும் மனதின் பாடலும் – முல்லைக்கமல்
6) காலத்தின் புன்னகை – சித்தாந்தன்
7) புயலை எதிர்க்கும் பூக்கள் – ஆதிலட்சுமி சிவகுமார்
8) என்கவிதை – ஆதிலட்சுமி சிவகுமார்
9) இயல்பினை அவாவுதல் – அமரதாஸ்
10) பூபாளத்துப் பூக்கள் – மானிலா
11) உலைக்களம் – வியாசன்
12) சொல்லின் எழுதிய வாழ்வு – அ.நிஷாந்தன்
13) அனுபவ வலிகள் – இரணையூர் பாலதர்சினி
14) உணர்வுக்கலசம் – தர்மனி
15) இந்தமழை ஓயாதோ – கனகரவி
16) வன்னி மான்மியம் – நிலாந்தன்
17) யாழ்ப்பாணமே ஓ..... எனது யாழ்ப்பாணமே – நிலாந்தன்
18) இருவிழிப்பார்வை ஒருதுளி விஷம் – க.கோகுலதாஸ்
19) நிறங்களாலாகிய ஒரு நிழலின் குரல் – யூ. ஜேம்ஸ் றெஜீவன்
20) அந்த முழு நிலாக்காலம் – சுதாகர்
21) சுனாமிச் சுவடுகள் – நாவண்ணன்
22) எழுதாத உன் கவிதை – வானதி பதிப்பகம்
23) பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் – புதுவை இரத்தினதுரை
24) அந்த நாளை அடைவதற்காய் – கஜந்தன்
25) மீண்டும் துளிர்க்கும் வசந்தம் – அம்புலி
26) வெளிச்சம் கவிதைகள் – வெளிச்சம் வெளியீடு
27) ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள் – கருணாகரன்
28) இப்படிக்கு அக்கா – சுதாமதி
29) குழல் – மொழிபெயர்ப்பு

சிறுகதைகள்:

1) வாசல் ஒவ்வொன்றும்	–	வெளிச்சம் சிறுகதைகள்
2) கனவுக்கு வெளியேயான உலகு	–	வானதி பதிப்பகம்
3) அழியாத தடங்களாய்	–	ச.றமேஸ்
4) எழு சிறுகதைகள்	–	எழு வெளியீட்டகம்
5) இருட்டு ஒளி	–	சோ. ஜெயச்சந்திரன்
6) சமவெளி நோக்கி	–	வளநாடன்
7) தீ நிழல்கள்	–	சு.மகேந்திரன் (மொழிபெயர்ப்பு)

நாவல்

1)	கழுகஞ்சோலை	–	முல்லைமணி
2)	மழைக்கோலம்	–	முல்லைமணி
3)	மனசு	–	சோ.ஜெயச்சந்திரன்
4)	இனி வானம் வெளிச்சிரும்	–	தமிழ்க்கவி

குறிப்பு : பட்டியல் முழுமை பெறவில்லை.

அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்

யாழ்ப்பாண மாவட்டம்

கலாநிதி.செ.யோகராசா
முதுநிலை விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை – செங்கலம்

மேற்படி தலைப்புடைய இவ் ஆய்விற்கு குறுகிய காலப் பகுதியே கவனத்திற் கெடுக்கப்படுகின்றது. அண்மைக்காலம் என்பது 1995 இலிருந்து ஆரம்பிப்பதாகக் கருதப்படுகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இவ் ஆரம்பம் சாலவும் பொருத்தமானதே. ஏனெனில் அவ்வாண்டிலேதான் இப்பிரதேசத்தைப் பொறுத்தளவில் விழுதுகளாய் வேரூன்றியிருந்த இப்பிரதேச மக்களின் வாழ்க்கை வட்டத்தில் ஒரு பெருந்திருப்புமுனை ஏற்படுகின்றது. அதாவது மக்களின் மாபெரும் இடப்பெயர்வு நிகழ்கின்றது. இதன்பின்னர் இப்பிரதேசம் மறுபடி இரானுவக்கட்டுப் பாட்டிற்குள்ளாக நேரிடுகின்றது. இடையில் 2002ல் உருவான போர் நிறுத்த ஒப்பந்தம் சமாதான எதிர்பார்ப்புக்களைத் தூவுகின்றது. மக்கள் பெருமூச்சு விடுகின்றனர். இடம்பெயர்ந்தோர் பலர் திரும்புகின்றனர். சிலர் (வன்னி, திருகோணமலை, கொழும்பு ஆகிய பிரதேசங்களில்) தங்கி விடுகின்றனர். இவ் வாழ்க்கை இன்றுவரை தொடர்கிறது.

மேற்குறித்த சமூகச்சூழலில் உருவான இலக்கியப் படைப்புகள் முற்றிலும் புதிய அனுபவங்களை – புதிய பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றன. பழைய நினைவுகளை மீட்டெடுக்கின்றன. இவ்வாறான சூழலில் முதன்மை பெறுகின்ற விடயமாக 'இடப்பெயர்வு இலக்கியம்' முகிழ்க்கிறது.

இடப்பெயர்வு அனுபவங்களை பதிவு செய்தனவற்றுள் வீதிவழி விருட்சங்கள் என்ற கவிதை (சோ. பத்மநாதன்) குறிப்பிடத்தக்கது. அதன் ஒரு பகுதி பின்வருமாறு "சோளகத்தில் 'அம்பிட்ட' / பஞ்சு சுழல்வது போல் / வாழிடத்தை விட்டு / வழிமாறி வந்தார்கள் / வேர் ஆழப்பாய்ந்த விருட்சங்கள் / வீதி வழி / ஏராளமாக / இடம் பெயர்ந்து வந்தன காண்/ தாக்குவரன / நடையில் தூக்கச் சுமையும் / துயரப் பெருஞ் சுமையும் / ஏக்கச் சுமையும் / எல்லாம் அழுத்த / ஒரு போக்கிடத்தைத்தேடிப் / புலம்பெயர்ந்து வந்தார்கள் / கார் இரையும் / சைக்கிள் கடுகும் / கன இருளில் / ஆர் வரவுக்காக ஆர் காத்திருப்பது வாம் / தூறல் தொடங்கி / மழையாய்த் தொடர்ந்தது / எங்கே ஆறுவது? / யார் யாரை ஆற்றுவது? / அங்கங்கே நின்றால் நெருக்கம் / அதிகரிக்கும் என்பதால் / நின்றார் இருந்தார் தவழ்ந்தார் / நடந்தார்கள் / ஒன்றா இரண்டா / ஓராயிரம் துன்பம் / மரத்தடிகள், கோயில், மடம் / பாடசாலை எலாம் / நிறைந்து நெருங்கி / நீக்கமற நின்றார்கள்.

கார் உருண்டன / வான் உருண்டன / கட்டை வண்டிகள் தாம் உருண்டன / பாரடங்கிலும் ஓடும் வாகனம் / பயணமாகின பாதை நீளமும் /
நாய் குரைத்தன / ஆடு கத்தின / நள்ளிருட்டினில் கொள்ளியோடு போம் / பேய்கள் ஒத்தன வாகனத் தொடர் / பிடறில் மோதுவ, இடறி ஓடுவ /
இவ்விரண்டு பேர் சைக்கிள் ஏறுவர் / இயலுமான தற் கதிகமாகவே / ஒவ்வொருத்தரும் சுமைகள் காவினர் / உயிர்கைக் கொண்டு தாம் ஊர்ந்து போயினர்

குழந்தைகள் பசியால் அரற்றின / குளிரிலே கிழம் நடுநடுங்கின / இழந்த கைகளை எண்ணி எண்ணி நெஞ்சு / ஏங்குவார் அலார் தூங்குவார் இலர்" /

காவியங்களில் இடம்பெறும் வர்ணனையை ஒத்து மேற்கூறிய பகுதி அமைய, கொடுமையான அவல நினைவுகளை உருக்கமான முறையில் வெளிப்படுத்துகின்ற படைப்புகளுமுள்ளன. இவ்விதத்தில் 'காற்றுக்கு வந்த சோகம்" என்ற கவிதையின் (சு.வில்வரத்தினம்) ஒரு பகுதி கவனத்திற்குரியது.
"முற்றுகை / முன்னேறிப் பாய்தல் / காற்றில் எரிகற்களென / சீறி வரும் வேட்டுகள்

/ குண்டு வீச்சுகள் / பீரங்கிகளின் பிளந்தவாயூடே / வந்து விழுகின்றன / எறிகணைகள் / ஐயோ / ஏணைக்குள் குழந்தை / ..... தறிகெட்டும் மிதிபட்டும் நெரிபட்டும் / தப்பியோடுகிற மனிதரிடை / யாருறவு? யார் சுற்றம்?/ அவரவர்க்குத் தம்தம் முயிர் / ஐயோ ஏணைக்குள் குழந்தை / சட்டியோடு பானையெடு / பெட்டி யெடு பேழையெடு / நின்றடுக்கும் பண்ணுதற்குள் / பின்வளவில் எறிகணைகள் / 'அம்மா ஏணைக்கை பிள்ளை' யென / கூவிக்கொண்டோடுகிறாள் / தனக்கும் முன் தாவிவிட்டான் / தன் தாயொன்றியாயப்பேதை / அவரவர்க்குத் தத்தம்முயிர் / தாயே உனக்குமாடி / தெருநீளமெங்கும் இழுபடலையோடி / குருதி கொப்பளிக்கும் / தொப்பூழ்கொடி / ஐயோ ஏணைக்குள் / குழந்தை / அகதி முகாம் / உச்சியில் இடிக்கிறது நுழைவாசல் / தாய் விரிக்கிற கையிரண்டில் / தவழ்கிறது வெறுமை / விறைத்த பார்வையில் / மின்னலாயிரம் / வெட்டு நொடிக்குள் புரிகிறது யாவும் / தாயின் முடிபற்றி / தலையோ தலை மோதுகிறாள் / "பாவியடி" நான் "பாவியடி"/ மாரில் அறைகின்றாள் / போய்ச்சுவரில் மொத்துகிறாள் / பொறிகலங்கும் கபாலத்துள் / விகாரித்தழும் குழந்தைமுகம் / பிரக்ஞையற்று வீழ்கின்றாள் / பிள்ளையினை யார் மீட்பார்?/ ஐயோ / ஏணைக்குள் குழந்தை"

இடம் பெயர்க்கின்றபோது வீட்டில் விட்டுவந்த நாயைச் சித்திரமாக்கியுள்ளது. 'பாவமன்னிப்பு' (திருக்குமரன்). கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும் (செங்கை ஆழியான்) முதியவரொருவரின் மன உணர்வுகளை விவரிக்கின்றது. இடப் பெயர்வுக்குள்ளானோரின்நிலையினை மிக நுணுக்கமாகப் படம் பிடிக்கும் மற்றொரு படைப்பான 'பெயர்வு' (குந்தவை) சிறந்த முத்தாய்ப்பு என்பதுபோல் இவ்வாறு முடிவுகின்றது.

"அவனை மரத்தின் பின்புறம் கொண்டுபோய் நிறுத்திதூக்கி வந்தாள். அழுதன் அவள் தோளில் முகத்தை உராய்ந்து மெல்லச் சினுங்கினான். 'அம்மா பாண் தாங்கோ' அவசரமாக அவனைப் பக்கத்திலிருத்தி, தோல் பையைத் திறந்தாள். பாணில் ஒரு துண்டு பிய்த்து அதில் லேசாகச் சீனி தூவி ஒருவிள்ளலை அவன் வாயருகே கொண்டு போனாள். அவன் ஆவலோடு வாய்திறந்து அதை வாங்கிக்கொள்வதைக் காண மீள ஆற்றாமை பொங்கியழு. சாதாரணமாக சாப்பிடுவதற்கு அடம் பிடிப்பவன், இடியப்பம், சொதி என்றால் மட்டும் நாலுவாய் தின்பவன். இந்த காய்த்துப்போன பாண் துண்டை ஆர்வமாய் சாப்பிடுவதைக் காண, இன்னுமொரு முறை அழுதுவிடுவமோ எனத் தோன்றியது.

கையிலிருந்த துண்டு முடிந்துவிட்டது. அவள் குனிந்து இன்னொரு துண்டைப் பிய்த்தெடுத்தாள். யாரோ பார்ப்பது போலிருந்தது. நிமிர்ந்தாள். அவர்களோடு மரத்தடியைப் பகிர்ந்துள்ள மற்ற குடும்பத்துச் சிறுவன் ஒருவன், சற்றுவிலகி நின்று அவன் கையிலிருந்த பாணைப் பார்த்து நின்றிருந்தான். அமுதனை ஒத்த வயதுதானிருக்கும். மூன்றரை மிஞ்சினால் நாலு. அவளுக்குச் சங்கடமாக இருந்தது.

பாணின் இரு துண்டங்களைப் பிய்த்து நீட்டி அவனை அருகில் கண்களால் கூப்பிட்டாள். சிறுவன் தயக்கமின்றி வந்து வாங்கிக் கொண்டான். அப்பொழுதுதான் அவனின் தாய் அதைப் பார்த்திருக்க வேண்டும். 'என்னத்திற்கு இதெல்லாம்?' என அவள் சொல்ல விரும்பியது போலிருந்தது. ஆனாலும் அவள் சொல்லவில்லை இயலாதவள் போல் நின்றாள். கையிலிருந்த மீதி இரண்டு துண்டும் அமுதனுக்குக் கானும் என நினைத்துக் கொண்டாள். கையில் எடுத்த துண்டும் முடிந்துவிட்டிருந்தது.

மற்றதையும் அவள் எடுத்துக்கொண்ட பொழுது முதுகில் ஏதோ குறுகுறுப்பது போல் இருந்தது. திரும்பினாள்.

பக்கத்து மரத்தடியிலிருந்த வேறொரு குழந்தை தன் தாயின் முதுகிற்குப் பின்னாலிருந்து அவள் கையிலிருந்த துண்டையே பார்த்துக் கொண்டிருந்தது"

இடப்பெயர்வு அனுபவங்களை விவரிக்கின்ற பதிவு செய்துள்ள – நாவல்கள் என்ற விதத்தில் 'மரணங்கள் மலிந்த பூமி (செங்கை ஆழியான்) 'போரே நீ போ' (செங்கை ஆழியான்) 'சிதைவுகள்' (தெணியன்) என்பவை குறிப்பிடத்தக்கவை.

இடம்பெயர்ந்து திருகோணமலை, வன்னி முதலான இடங்களில் வசிப்போரது மன உணர்வுகளை வெளிப்படுத்தும் படைப்புகளும் இக்காலப் பகுதியிலே பெருமளவு எழுந்துள்ளன. இத்தகைய உணர்வுகள் சொந்த ஊர், சொந்த உறவுகள் துறந்து வந்தமை பற்றியே பெருமளவு பேசுகின்றன. பால்ய கால நினைவுகளும் வெளியாகின்றன. இவ்வாறு வெளிவந்தவற்றுள் தனித்தொகுப்பு களுமுள்ளன. இவ்விதத்தில் (வில்வரத்தினத்தின்) "பெயர்வு நிகழ்ந்த பின்னால் பெயர்வுற்றவர்களின் துயரங்கள், துன்பங்களையும் பிறந்ததும் குறித்த ஏக்கங்களையும் காலத்துயர் பிரதிபலிக்கின்றது. காற்று வழிக் கிராமமோ மக்களில்லாத பாலையாகிவிடும். கிராமங்களின் வெறுமை கொண்ட வாழ்வைப் பதிவு செய்கிறது, "இவ்வாறே யாழ்ப்பாண நகரின் வீழ்ச்சியையும் அவ்வழி முன்னைய சிறப்புகளையும் வெளிப்படுத்தும் (நிலாந்தனின்) 'யாழ்ப்பாணம் ஓ..... எனது

யாழ்ப்பாணமே" என்ற நெடுங்கவிதையும் விதந்துரைக்கப்பட வேண்டியது. பூர்வீகத் தொன்ம வரலாறு தொடக்கம் இடப்பெயர்வு வரை யாழ்ப்பாணத்தின் வரலாறு விவரிக்கப்பட்டுள்ள இந்நெடுங்கவிதையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் பகுதியை எடுத்தாள்வது பொருத்தமானது.

"யுத்தம் அவனைச் செதுக்கியது / சுயநலமியாய் சேமிப்பில் வெறியனாய் இருந்தவனை / வீரனாக்கியது / இடம்பெயர்வுகள் அவனைப் / பண்பு மாற்றம் பெற வைத்தன / கந்தபுராண கலாசாரத்திலிருந்து / அவனைக் கட்டாயமாக இடம் பெயர வைத்தன / ஒவ்வொரு இடப் பெயர்வும் அவனுக்கு / மனப் பெயர்வாய் மாறியது / பட்டப்படிப்பாய் மாறியது / இப்பொழுதுள்ள யாழ்ப்பாணி / ஒரு யுத்தத்தின் கனி / ஒரு மகா அனுபவசாலி / ஒரு மகா தந்திரசாலி / ஒரு மகா விவேகி / ....."

தமிழினவுணர்ச்சி மிக்க படைப்பாளிகளிடம் இடப்பெயர்வு என்பது பிரிந்த – பிறந்த – மண்மீது பெருவேட்கை கொள்ளச் செய்கின்றது. இவ்விதத்தில் (வில்வரத்தினத்தின்) 'நெற்றி மண்' என்ற நெடுங்கவிதை மிக முக்கியமானதொன்றாக உள்ளது. (எப்போதே இடம்பெயர்ந்து விட்ட புதுவை இரத்தினதுரையின்) 'பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்' தொகுதியுள்ள கணிசமான கவிதைகளும் இத்தகைய விடயத்தை அடிநாதமாகக் கொண்டுள்ளமை வியப்பிற்குரியதன்று.

மேற்கூறியவாறான இடப்பெயர்வும் அதனோடு இயைந்த விடயங்களும் ஒரு புறமாக, இராணுவ ஆட்சிக்குட்பட்ட காலத்து யாழ்ப்பாணப்பிரதேச இலக்கியப்போக்குகள் பற்றி நினைவுகூர்வது அடுத்த தேவையாகின்றது.

மேற்கூறிய விதத்தில் சமாதான எதிர்பார்புகள் சார்ந்த படைப்புகள் ஒருபுறம் வெளிவருகின்றன. இவை அதிகம் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இக்கால வாழ்க்கை – பல்வேறு இராணுவக் கெடுபிடிகள், பொருளாதாரத் தடைகள், இழப்புகள் பற்றிய ஏக்கங்கள் முற்பட்ட கால நினைவுகூரல்கள் என பலவிதங்களில் சித்திரிப்பிற்குள்ளாகின்றன.

மேற்குறித்தவாறான 'சமகால' வாழ்க்கை நிலைமைகளை அன்றாட குடும்ப வாழ்கையூடாக வெளிப்படுத்துகின்ற சிறுகதைகள் பல பெண் வழக்காளர்களால் எழுதப்பட்டள்ளமை விதந்துரைக்கத்தக்கது. பழைய தலைமுறை சார்ந்த யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சந்திரா தனபாலசிங்கம் முதலானவர்களோடு புதிய

தலைமுறை சார்ந்த, சாரங்கா, தாட்சாயணி முதலானோரும் இவ்விதத்தில் கவனத்திற்குரியவர்களாவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தொடர்ந்து இடம்பெற்றுவந்த உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட பலர் உளவியல் ரீதியான பாதிப்பிற்குள்ளாவதும், அதற்கான வழிகாட்டல் அவர்களுக்கு தேவைப்படுவதும் கண்கூடு. இவ்விதத்தில் இவ்வாறான உள்ளடக்கங்கள் கொண்ட சிறுகதைகள் சில இக்காலத்தில் வெளிவருவதும் கவனிக்கத்தக்கது. (எ.டு. கோகிலா மகேந்திரனது சிறுகதைகள்)

ஒரு சில படைப்பாளிகள், சிங்கள இராணுவ வீரர்களின் செயற்பாடுகளை – மனிதாபிமான நோக்கிலும் (எ–டு: விநோதினி எழுதிய 'அவன்'), உளவியல் நோக்கிலும் (எ–டு: முத்து இராதாகிருஷ்ணனின் 'தர்மசக்கரம்') அணுகி எழுத முற்பட்டுள்ளமையும் விதந்தரைக்கத்தக்கதே. இவ்வேளை முற்கூறியதற்கு உதாரணமாக அவன் என்ற கவிதையை எடுத்துக் காட்டுவது பொருத்தமானது:

"எல்லாரையம் போல்தான் அவனும் / கையில் சுட ஆயத்தமாயிருக்கும் துவக்கு / முதுகில் பென்னம் பெரிய பை / எண்பதுகளில் கண்டது போன்ற முகமில்லை / இது மனித முகம் அழகு முகம் / வயது இருபத்தைந்திற்குள்தான் இருக்கும் / அவனது பெயர் / சிறிலாகவோ பெரேராவாகவோ / அன்றி தர்மசிறியாகவோ இருக்கலாம் / ஏன் பண்டாரவாகக்கூட இருக்கும் / தேர் முட்டியின் கீழ் / எதையோ புதைத்து விட்டு காப்பவன் போல் நிற்பான் / கோடை மழை பொழிந்து / தள்ளிய போதும் / இடம் மாறாது பச்சை நெயின் கோட்டால் தனை மூடிச் / சகடையின் கீழிருப்பான் / யாரிடமும் பேசிக் கண்டதில்லை / நம்மில் யாரும் கூடப் பேச விழைந்ததும் காணேன் / கடமை நேரம் காலை ஆறு முதல் மாலை ஆறுவரை / இட்டலியும் இடியப்பமும் விருப்பம் என்று தெரிந்தது / அவ்வப்போது வீட்டில் சமைப்பதைப் பகிர நினைக்கும் நினைப்பழிய / மழைக்கிதமாய்த் தேநீர் தர எண்ணுதல் நடவாது / ஏதும் இயலா ஏதிலிபோல் பரிதவிப்பேன் / பேசவாகிலும் முடியுமா என்றால் / இல்லை, முடியவே முடியாதொருபோதும் / மனிதம் மறந்து வன்மம் வளர்க்கும் / என் மனமும் பிறமனங்களும் புரியாது / அவன் வருவான் போவான் வருவான் / புதைந்த மனிதத்தைத் தேடும் விதமாய் / வேலைக்குப் போகும் வழியில் படும் / அவன் முகங்கண்டு சிரிக்கப் பதிலுக்கு அவன் தருவதோ / அகங் கனிந்து களிர்த்த மலர்ச்சியை / நாளை அவன் கைக்குண்டுக்குப் பலியாகில் / என் சிரிப்பை ஒரு கணம் எண்ணி / அமைதியுறும் மனதுடன் இறந்து போகக்கூடும் /

அல்லது ஊர் திரும்பல் நிகழலாம் / அவனது காதலிக்கும் தாய்க்கும் / என்னைப்பற்றி ஏதாவது சொல்லவும் கூடும் / அழகு முகங்கொண்ட அந்த அவன் / சிறிலா, பெரேரவா அன்றி ....."

முன்னையகால வாழ்வின் நினைவுகூரல்கள் பலரது படைப்புகளில் சிறப்பான முறையில் வெளிப்பட்டுள்ளன. இவ்விதத்தில் இவ்வாறான பல கவிதைகள் கொண்ட 'பதுங்குகுழி நாட்கள்' தொகுப்பு முக்கியமான கவனிப்பிற்குரியது :

உ +ம் :

"பெரிய வெள்ளி / உன்னைச் சிலுவையிலறைந்த நாள் / அனற்காற்று / கடலுக்கும் தரைக்குமாய் வீசிக் கொண்டிருந்தது / ஒன்றோ இரண்டோ கடற்காக்கைகள் / நிர்மல வானிற் பறந்தன / காற்று பனைமரங்களில் உரசியவொலி / விவரிக்க முடியாத பீதியைக் கிளப்பிற்று / அன்றைக்குத்தான் ஊரிற் கடைசி நாள் / கரைக்கு வந்தோம் / அலை மட்டும் திரும்பிப் போயிற்று / சூரியன் கடலுள் விழுந்த போது / மண்டியிட்டமுதோம் / ஒரு கரிய உருளைஎழுந்து / இரவென ஆயிற்று / தொலைவில் / மயானவெளியில் ஒற்றைப் பிணமென / எரிந்து கொண்டிருந்தது எங்களூர் / பெரிய வெள்ளி / உன்னைச் சிலுவையில் அறைந்த நாள்"/

கிராமமொன்றின் அழிவை வித்தியாசமான முறையில் படம் பிடிக்கின்றது. பின்வரும் கவிதை :-

மனிதர்களற்ற கிராமத்தின் கதை

"தனிமையின் பக்கங்களில் மோதிச் சிதறுகின்றன / கிராமத்தின் ஆத்மாவின் குரல் / மனிதர்களற்ற கிராமம் / ஆதி மொழியின் குருதிச் சிவப்பு வார்த்தைகளை / திரித்து திரித்து தீயாய் பற்றிய துயரில் மிதக்கிறது / மின்மினிப் பூச்சிகள் பற்றிய நினைவுகள் அறுந்து / தனிமையில் புரண்டு புலம்புகிறது / வயல்களை நிறைத்து அதன் கனவுகள் / முட்களில் மூடுண்டு போனது / சூரியன் சந்திரன் இரண்டுமே / கிராமத்தின் கண்களில் எரிந்தன / காற்று வெறுமையைச் சுமந்தலைகிறது / அதனுள் இசையாய் நிறைந்த / ஆயிரமாயிரம் சப்தங்கள் சூனியமாகியதாய் / கிராமத்து ஆத்மாவின் குரல் / அண்டங்களைப் பிளந்து அதிர்கிறது / இருளடர்ந்த காலவெளியில் / மனிதர்களின் சுவடுகளை / சாம்பல் பெருகிச் சிதைத்திருந்தது / இலைகள் உதிர்ந்த மரங்களில் / மிகப் பழையதான இதயம் / குருதிவற்றி / சுருங்கி மரணித்துக்கிடப்பதாய்

/ வார்த்தைகளைத் தொலைத்த பறவையொன்று / அலகுகளுக்குள் குமுறிக் கொதிக்கிறது / அதன் கண்களில் கிராமத்தின் கதை / திரவமாய் பெருக்கெடுத்துப் பரவுகிறது / அவலம், பீதி, துயரம் எல்லாமே கலந்து / பெரிய ஜலப் பிரவாகமாய் / அலைகளை எழும்பிப் பாய்ந்தோடுகிறது.

முற்பட்ட காலக் கிளாலிப் பயணங்களை நினைவுகூர்ந்து திறம்பட வெளிப்படுத்தும் படைப்புகளும் இக்காலத்தில் வெளிவந்துள்ளன. இவ்விதமான சிறுகதைகளுள் 'பயணத்தில் பதிந்த கண்கள்' (முத்து இராதாகிருஷ்ணன்) குறிப்பிடத்தக்கது. அஷ்வகோஷின் தொகுப்பிலுள்ள பல கவிதைகளும் கூட இத்தகையனவே.

மிக முற்பட்ட கால சிறுபராய வாழ்க்கையை நினைவுகூர்கின்றதென்ற விதத்திலும் 'குழந்தை' நிலை நின்று அவற்றை வெளிப்படுத்துகின்றதென்ற விதத்திலும் நெடுங்கதை போன்றுள்ளதென்று விதத்திலும் 'காலம் ஆகி வந்த கதை')2003) என்ற தொகுப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது.

இறுதியாக இவ்விடத்தில் சுட்டப்பட வேண்டிய பிறிதொரு விடயம், சமாதான உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்ட ஆரம்பகாலங்களில் இடம்பெற்ற 'பொங்கு தமிழ் நிகழ்வுகள்' மாவீரர்தின நினைவுகள் என்பனவற்றைப் பொருளாகக் கொண்ட ஆக்கங்களும் பல வெளிவந்துள்ளன என்பதாம். இவ்விதத்தில் பல்லாக்கத் தொகுப்பான 'நெஞ்சு கனலும் நினைவுகள்' (2004) விதந்து குறிப்பிடப்பட வேண்டியதொன்று என்பதில் ஐயமில்லை. எனினும் இதிலுள்ள கவிதைகளுள் பலவும் ஆரம்பகாலக் கவிஞர்களுக்குரிய குறைகள் பலவற்றைக் கொண்டிருக்கின்றன.

மேற்கூறியவாறான சமகால அரசியல்சார் உள்ளடக்கங்கள் கொண்ட படைப்புகள் ஒரு புறமாக, ஏனைய உள்ளடக்கங்கள் சார்ந்த படைப்புகள் பற்றி நோக்கும் போது 'காத்திருப்பு (தெணியான்) 'கானலில் மான்' (தெணியான்) ஆகிய இரு படைப்புகள் பற்றி முதலிற் குறிப்பிடவேண்டும். இவற்றுள் 'காத்திருப்பு' தவறிழைத்த மனைவி அப்பாவிக் கணவன் ஆகிய இருவரையும் சுற்றிச் சுழல 'கானலில் மான்' அன்பிற்காக ஏங்கும் ஒருவர் பற்றியதாக அமைகின்றது. பெண்நிலைவாத நோக்குடைய எழுத்துக்கள் எண்பதுகளின் நடுப்பகுதியில் குறிப்பாக கவிதையூடாக (சொல்லாத சேதிகள் – 1986) யாழ்ப்பாணப்பிரதேசத்திலிருந்து வெளிப்பட்டது. இலக்கிய ஆர்வலர் பலருமறிந்த விடயமே. தொடர்ந்து தளர்ச்சி கண்ட

நிலையில் தொண்ணூறுகளிலேயே இந்நோக்கிலான வெளிப்பாடுகள் முனைப்புறுகின்றன. கவிதைத் துறையிலும் (எ–டு: விநோதினி, ஆகர்ஷியா, தமிழ்நதி) சிறுகதைத் துறையிலும் (தாட்சாயணி, சாரங்கா, நிருபா, ராணிசிறீதரன்) பலர் வெளிப்படுகின்றமை. கவிதைக்கு எ – டு

எங்கள் வீட்டிலொரு பொம்மை

விளையாட வரவில்லை / என்றது பொம்மை / கையில் எப்போதும் / பிடித்திருக்கும் கரண்டி / முடுக்கி விட்ட பொம்மை / நடந்து செல்லும் / குழந்தை சுமக்கும் / உடுப்புத் தோய்க்கும் / சமைக்கும் / மூட்டைகள் தூக்கும் / அவ்வப்போது / பளாரென்று அடியும் வாங்கும் / எங்கள் வீட்டிலொரு பொம்மை / அதற்கு விளையாடத் தெரியாது / தலையை மட்டும் ஆட்டும் / ஆம் ஆம் சரி சரி என்பது போல / நிற்காது சிரிக்காது. யாருடனும் கதைக்காது / வேலைக்கு மட்டும் / வெளியில் போகும் / நேற்றுக்காலை கடைவீதியிலும் கண்டேன் / ஏராளமான பொம்மைகள் / விதம் விதமாய் நிறம் நிறமாய் / கண்களுக்குள் புதைந்து போன கனவுகளுடன்" – ஆகர்ஷியா தனித்தொகுப்பிலிடம்பெறாத, கவனத்திற்குரிய சிறுகதைகளுள் 'என்னவன் இராமனல்ல' (சி. சிவாணி) குறிப்பிடத்தக்கதொன்று, யதார்த்த நோக்கு மிகுந்த சமகால பெண்களது பிரச்சினையொன்று (பாலியல் வல்லுறவு) இராமாயண இராமன் பாத்திரத்தை உத்தியாகப் பயன்படுத்தி திறம்படப் பின்னப்பட்டுள்ள இச்சிறுகதை கவனிக்கப்பட வேண்டிய சிறந்ததொரு படைப்பாகும். வயிற்றில் குட்டியைக் சுமந்துள்ள பெண் பூனையொன்றினைக் கருவாகக் கொண்டு பெண்நிலைவாத நோக்கிலெழுந்த 'உயிர்த்திருத்தல்' என்ற சிறுகதையும் (சாரங்கா) மற்றொரு சிறந்த படைப்பாகின்றது.

விஞ்ஞானச் சிறுகதைகள் அருகியுள்ள ஈழத்தில் இக்காலப் பகுதியில் அவ்வாறான பல சிறு கதைகள் வெளிவந்துள்ளமை பற்றியும் கவனத்தில் கொள்வதவசியமாகும். (செங்கை ஆழியான் எழுதியுள்ள) இத்தகைய சிறுகதைகளுள் சேதுபந்தனம் குறிப்பிடத்தக்கதொன்று ஓசோன் துகள்களினால் கி.பி.2050ல் யாழ்–தீவுகள் நான்கு கடலினுள் மூழ்குகின்ற பின்புலத்தில் அச்சிறுகதை நகர்கிறது. வரலாற்று நாவல்களும் – அவை அந்தளவு வரலாற்று ஆதாரங்களை கொண்டுள்ளன என்பது ஆய்வுக்குரிய விடயமெனினும் – இவ்வேளை வெளிவந்திருக்கின்றன. எ–டு, 'ஈழராஜா எல்லாளன்' (செங்கை ஆழியான்) இந் நாவல் வெளிப்படுத்தும் பல விடயங்களுள், "அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மக்களின் மென்மையான

உணர்ச்சிகளைக் கிளறிவிட இனவாதம் எவ்வளவு தூரம் வரலாற்றின் ஆரம்ப காலத்திலும் கைக்கொள்ளப்பட்டுள்ளது" என்பதனை வெளிப்படுத்துவத முக்கியமானது.

வசன வடிவிலான வாழ்க்கை வரலாற்று நூல்களே ஈழத்தில் அரிதாகவே வெளிவருகின்ற ஆரோக்கியமற்ற சூழலில் கவிதை வடிவில் 'நினைவுச் சுவடுகள் (2005) என்று வெளிவந்த நூலின் வரவு குறிப்பிடத்தக்கது. பாரதியாரின் 'சுயசரிதை' அவரது வாழ்க்கையில் நடைபெற்ற முக்கியமான சம்பவங்களை நினைவுகூர்ந்த சூழலில், இந்நூல் இதை இயற்றியவரது (சோ.பத்மநாதன்) வாழ்க்கையில் நடைபெற்ற மறக்க முடியாத விடயங்களை ஆழமான சிந்தனை சார்ந்த நோக்கில் வெளிப்படுத்தியிருப்பது பாராட்டிற்குரியது. எ–டு : பெரியப்பாவினால் தண்டிக்கப்பட்ட ஒருவரது கூற்று

உ–ம் :– "நயினார் அடிச்சா நாலுபேருக்குத் தெரியும் நான் அடிச்சா உலகமெல்லாம் தெரியும்"

ஈழத்திலே ஏறத்தாழ எண்பதுகள் தொடக்கம் 'புனைகதை சாரா எழுத்துக்கள்' பெருமளவு வெளிவருகின்றன. இத்தியாதி எழுத்துக்களுள் உண்மைக் கதைகள் முதன்மையானவை. ஏலவே வன்னிப் பிரதேசத்திலிருந்து இவ்வாறான ஆக்கங்கள் பல வெளிவந்துள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து இத்தகைய ஆக்கங்கள் வெளிவரும் குறுகிய வாய்ப்பு இக்காலப்பகுதியில் ஏற்பட்ட சூழலில் இவ்வேளை வெளிவந்தவற்றுள் எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன. (நாவண்ணன் – 1995) முக்கியமானதொன்று "9.7.95 அதிகாலையிலிருந்து 16.7.95 அதிகாலை வரையிலான நாட்களில் வலிகாமம் மேற்குப்பகுதியில் வசித்த மக்கள் சந்தித்த அவலங்களை இந்த நூல் பதிவு செய்துள்ளதாகக் கூறலாம்.

இக்காலப்பகுதியில் வெளிப்பாட்டு ரீதியான கவனத்திற்குரிய மாற்றல்களும் இடம்பெற்றுள்ளன.

கவிதையைப் பொறுத்தளவில் 'குறும்பா' வடிவம் கவிஞர் சிலரால் கையாளப்பட்டுள்ளது.

எ–டு: <u>புலப்பெயர்வு</u>

"ஆச்சி இங்கே பேசுகிறேன்' என்றாள்
ஆஸ்திரியா போர்த்தி "ஹலோ" என்றாள்

பேச்சு ஒன்றும் புரியவில்லை
பெரிய தம்பி இடை மறித்தான்
'போச்சுதடா தமிழ்' – கிழவி நொந்தாள்"

கைக்கூ வடிவ பயன்பாடும் அதிகரித்துள்ளது. : எ–டு

"நாய்குரைக்கும் இரவு
திடுக்கிடும் தென்னங் குருத்துகள்
விடியலில் தோரணங்கள்"

காற்றே வீசாதே
பூமர நிழலில்
அகதிகளின் கஞ்சிப் பானை

சாய்வு நாற்காலியில்
கண்ணீர்த்துளி
கடவுச்சீட்டு

–இ.சு. முரளீதரன்

'குறள்வெண்பா திறம்படக் கையாளப்பட்டிருக்கின்றது: எ–டு

மாவீரர் மனம்

"நீர்க்காடு கண்ணில் நிரம்பத் தமை வழங்கும்
சாக்காடு பூக்காடு ஆம்"

நாட்டார் பாடல் பயன்பாடு அதிகரித்துள்ளது. எடுத்துக் காட்டாக கவிதையொன்றின் ஆரம்பப்பகுதி:

"அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிய தமிழீழம் கண்டீரோ தம்பி
பருப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
பருத்தித் துறையூரும் கண்டீரோ தம்பி
சீனிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
தெல்லிப்பழையூரும் கண்டீரோ தம்பி
எண்ணெய்ப் பொதி யோடும் வந்தீரோ தம்பி
இணுவிற் பதியூரும் கண்டீரோ தம்பி

சோ. பத்மநாதன்

நெடும் பாடல் அல்லது நவீன காவியங்கள் உருவாகியுள்ளன. எடுத்துக்காட்டுகளாக முற்குறிப்பிட்ட 'நெற்றி மண்' துயரி (மு.பொன்னம்பலம்)

'சிறுகதை' யின் எடுத்துரைப்பு முறையிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

முற்குறிப்பிட்ட 'காலம் ஆகிவந்த கதைகள்' New Journalism எழுத்துமுறையாகக் கருதப்படுகிறது. மரணங்கள் மலிந்த பூமியும் ஒரு விதத்தில் அத்தகையதே.

இவ்வாறே பின் நவீனத்துவம் சார்ந்த எடுத்துரைப்பு முறையும் அமைகின்றது. ஏலவே மட்டக்களப்பு பிரதேச எழுத்தாளர்கள் பலரும் (எ–டு: திசேரா, அம்ரிதாஏயெம், தவராசா, மலர்ச் செல்வன்) திருமலை சார்ந்த எழுத்தாளர்களும் (எ–டு : கௌரிபாலன்) இத்தகைய சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ளனர். இவ்விதத்திலான யாழ்ப்பாணப்பிரதேச எழுத்தாளர்கள் குறைவு என்றே கூறலாம். விதிவிலக்காக இராகவன் இவ்விதத்திலான சிறுகதைகள் எழுத முற்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.

அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்

கிளிநொச்சி மாவட்டம்

ச.மணிசேகரன்
ஆசிரியர்
மட்/மஞ்சந் தொடுவாய் பாரதி வித்தியாலயம்

ஈழத்தில் 80களின் பிற்பகுதியில் ஆரம்பித்த நவீன கலை இலக்கியப் போக்கானது அதே சமயத்திலேயே கிளிநொச்சி மாவட்டத்திலும் உருக் கொள்ளத் தொடங்கியது எனக் கொண்டாலும் 90களிலும் 90களின் பிற்பகுதியிலுமே அதாவது யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி நோக்கிய இடப்பெயர்வின் பின்பே அது உச்சம் பெறுவதைக் காணலாம்.

இங்கு நிர்வாக எல்லைக்காக அமைக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தை இலக்கியத்திற்காகப் பிரித்துப் பார்ப்பது மிகவும் சிக்கலாகத் தெரிகின்றது. இலக்கிய வரலாற்றை எழுத முனைவோர் வன்னிப் பெரு நிலப்பரப்பு என்று நோக்குவதுதான் சிறப்பாகக் கொள்ளப்படும். எனினும் என்னால் முடிந்தளவு கிளிநொச்சி மாவட்டத்தின் நிர்வாக எல்லையை மனதில் கொண்டே இக்கட்டுரையை எழுத முனைந்துள்ளேன்.

ஒரு குடியேற்றத்திட்டமாக ஆரம்பித்த கிளிநொச்சியின் வளர்ச்சியானது சராசரி மனிதனுடைய வியர்வையையும் குருதியையும் அவலத்தையும்

தியாகத்தையும் அவர்களிலிருந்த மகிழ்வையும் புரள்வையும் அதன் எழுச்சியையும் வீழ்ச்சியையும் வரலாறு தமக்களித்த விசித்திரமான அனுபவங்களினூடாகவே இற்றை வரையிலும் பேசும் நெடுங்கதையாகச் செல்கிறது.

நிமிர்ந்து எழுந்தும் சரிந்து வீழ்ந்தும் மீண்டும் எழ முயற்சிப்பதுமான வாழ்வு கிளிநொச்சியின் தனித்துவமாகக் கொள்ளலாம். இங்கு நவீன கலை இலக்கியப் போக்குகளாக நாவல், சிறுகதை, கவிதை என அதன் எல்லைகள் வரிந்து செல்வதைக் காணலாம்.

நாவல் எனும் போது தாமரைச் செல்வி, தமிழ்க்கவி, மலரவன், கா.சுஜந்தன் எனப் பலபேர் நினைவுக்குவருகின்றனர். நாவலிலக்கியத்தைப் பொறுத்தவரை தாமரைச் செல்விக்கு சிறப்பானதொரு இடம் உண்டு. தேர்ந்தெடுத்த கரு கதையம்சம், கதை கூறும் முறைமை என்று தனக்கே உரித்தான சிறப்புள்ளவர். ஈழத்து நாவல் இலக்கியத்திலும் அவரை எடுத்து விட்டு நாவல் இலக்கியத்தை நோக்க முடியாதவாறு சிறப்புப் பெற்றவர். அவருடைய ஒவ்வொரு நாவல்களும் ஒவ்வொரு காலத்தைச் சார்ந்திருக்கின்றது.

"விண்ணில் அல்ல விடிவெள்ளி" நாவல் கிளிநொச்சி பிரதேசத்தில் சாதாரண ஒரு விவசாயக் குடும்பம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒரு போர்க்கால பின்னணியின் மத்தியில் வெளிக் கொணரப்பட்டுள்ளது. இந்திய இராணுவ கால கட்ட போர்க்கால வாழ்வை ஆவணமாக்கியிருக்கின்றது.

அவ்வாறே "வீதியெல்லாம் தோரணங்கள்" நாவல் தமிழ் மக்களின் வாழ்வுக்கான கட்டமைப்பை உருக்குலைத்து எந்நேரமும் ஏது நடக்குமோ என்ற ஏக்க உணர்வு மேலோங்கி மாறி மாறி சாவுகளும் நினைவஞ்சலிகளும் ஹர்த்தாலும் எப்பொழுது பார்த்தாலும் எந்த வீதியைப் பார்த்தாலும் தோரணங்களும் கழற்றப்படாத கறுப்புக் கொடிகளுமாக வாழ்வு நீண்டு செல்வதை பதிவாக்கி உள்ளது.

"தாகம்" போர்க்காலசூழலில் பொருளாதார தடையினூடு வன்னி மக்கள் முகம் கொடுத்த உயிருக்கே உத்தரவாதமற்று வாழ்ந்த அவலத்தை அம்மக்களில் ஒருத்தியாக இருந்து உயிர்த்துடிப்புடன் இலக்கிய கோலங்களாக ஆவணப் படுத்தியுள்ளார்.

"பச்சைவயல் கனவு" நாவல் வரலாற்று ஆவணப்படுத்தலாக விளங்குகிறது. இந்நாவலில் ஒரு மனிதனின் வரலாறு அவன் சார்ந்த மண்ணோடும் மனிதர்களோடும்

சமூகப் பின்னணியோடும் அரசியல் பின்னணியோடும் எவ்வாறு இணைந்திருக்கின்றது என்பதை தெளிவாகவும் திடமாகவும் பதியப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி நிமிர்ந்து எழுந்ததும் சரிந்து வீழ்ந்ததும் மீண்டும் எழுந்ததுமான அதன் வாழ்வு அழகாக நெடுங்கதையாக பதியப்பட்டு ஆவணமாக்கப்பட்டுள்ளது. போராளிகள் படைப்பாளிகளாக மாறி தங்கள் அநுபவங்களை நெடுங்கதைகளாக எமக்குத் தந்துள்ளார்கள். மாவீரராகிவிட்ட போராளி மலரவனின் போர் உலா, புயல் பறவை ஆகிய இரு படைப்புகளும் தமிழ் கவியின் "இனி வானம் வெளிச்சிடும், இருள் இனி விலகும்" ஆகிய படைப்புகளும் இவ்வகை சார்ந்ததே. அது வித்தியாசமானதொரு அனுபவத்தை எமக்குத் தருகின்றது. இவ்வகை சார்ந்த எழுத்தை நிசத்தை நிகழ்வை அனுபவத்தை தங்கள் தங்கள் பட்டறிவுக்கேற்ப எமக்கு ஏதாவதொரு கதை வடிவில் எமக்களித்திருக்கிறார்கள். அதனை எம்மால் கொடுக்க முடியாது. அவர்களாலேயே கொடுக்க முடியும் என்பதனூடாக சிறப்புப் பெறுகின்றது.

போராளி மருத்துவராக விளங்கும் கா.சஜந்தனின் "உறவுகள்" குறுநாவலில் வன்னி மீதான உணவு, மருந்துத் தடை மற்றும் நிவாரண வெட்டு போன்றவற்றால் நேரடியாகவே பாதிப்புக்குள்ளாகியிருக்கின்ற ஆயிரக் கணக்கான குடும்பங்களில் நிலவும் கிளிநொச்சி உட்பட பல தளங்களில் வெற்றி நிலையும் பதிவாக்கப் பட்டிருக்கின்றது. சிறு கதை எனும் போது ஈழத்தில் ஏற்பட்ட அதிரடியான அரசியல் மாற்றங்கள்" இனப் படுகொலை, இனச்சுத்திகரிப்பு போன்ற அவல நிலை இங்கு காத்திரமான சிறுகதைப் படைப்பாளிகளை உருவாக்க முனையலாயிற்று. அவலமும் துயரமும் ஆவேசமும் பொதிந்த சிறுகதைகள் இங்கு எழலாயிற்று. இதற்கு கிளிநொச்சியிலிருந்து வெளிவந்த வெளிச்சம் போன்ற சஞ்சிகைகளும் ஈழநாதம் போன்ற பத்திரிகைகளும் உறுதுணையாகின்றன.

காலம் எமது மண்ணில் வரைந்த துயரத்தையும் அந்த துயருக்குள்ளி லிருந்து மக்கள் உயிர்ப்பு பெற்று வருவதையும் தாமரைச் செல்வி பிரகலதா ஹேமந்(கருணாகரன்) உமாதேவன்(அமரதாஸ்) சு.மகேந்திரன்(மயன்) வளநாடன்.நா.யோகேந்திரநாதன், விவேக், ம.கேந்திரன், பெருமாள் கணேசன் என்று நீளும் பட்டியல்களினூடே பலர் பதிவுகளைச் செய்துள்ள அதே வேளை மலைமகள், கோ.கர்ணன், வசந்தன் என்ற நீண்ட பட்டியல்களினூடே போராளிகள் சிறுகதைப் படைப்பாளிகளாக மாறி சிறுகதை படைத்துள்ளனர்.

இவ்வகையில் வெளிச்சம், சிறுகதைகள் 1,11 தாமரைச் செல்வியின் அரசிகள் அழுவதில்லை பெண்களின் தொகுப்பான கனவுக்கு வெளியோயான உலகு போன்றவைகள். அனேகமாக இவர்களுடைய கதைகள் எல்லாம் போராடும் களத்திலிருந்து போராடும் சக்திகளின் தளத்திலிருந்து விடுதலைப் போராட்டத்தை நடைமுறை போராட்ட வாழ்வுடனும் அனுபவங்களினூடாகவும் இணைந்து நின்று வலுவுடன் பேசுவனவாகவே இருக்கின்றன.

கவிதைகளை நோக்கும் போது பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதன் போக்கைப் பார்க்கலாம். வெற்றிகரமான பல முயற்சிகளினூடாக சிறுகதை நாவல்களை விட பொருளிலும் வடிவத்திலும் வெளிப்பாட்டு முறையிலும் பல புதுமைகளை நிகழ்த்திய பதிய வரவுகளின் போக்கை இங்கு காணலாம். இதில் முதன்யானவரான நிலாந்தன் விளங்குகிறார்.

இவரின் வன்னி மான்மியமும் அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ள மண் பட்டிணங்கள் பாலியம்மன் பள்ளு ஓயாத அலைகள் 111 வன்னி நாச்சியாரின் சாபம், மடுவுக்குப் போதல் ஆகியன தனித் தனி சிறப்புக் கொண்டு ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட புதுமையான வடிவம் தமிழ்ப் படைப்புலகம் பெற்றிராத புதிய முறை அனுபவத்தை இப்படைப்புகள் தர முனைகின்றது.

ஒரு குறிப்பிட்ட வரன் முறைக்குள் நிற்காமல் ஒன்றிலிருந்து மீறி இன்னொன்றிற்குள் இறக்கிவிடாமல் அதிலிருந்து இன்னொன்று பின் அதிலிருந்து பிறிதொன்றாய் இந்த மீறல்களை மிக நுட்பமாகவும் சிறப்பாகவும் அவதானத்துடன் மேற்கொள்ளும் நிலாந்தனின் சிறப்பே தனி.

"ஒரு பொழுது காத்திருத்தல் ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள் ஆகிய கவிதைத் தொகுப்புகளைத் தந்த கருணாகரனும் இயல்பினை அவாவுதல் தொகுப்பைத்" தந்த அமரதாசும் எலும்புக் கூட்டின் வாக்குமூலத்தை தந்த அநாமிகனும் வாழ்வும் போரும் ஒன்றாக் கலந்து விட்ட மண்ணிலிருந்து அவர் அவர்களுக்கேயுரித்தான புதுப்புது மொழியுடனும் அனுபவ வெளிப்பாட்டுடனும் தமது களங்களை விரித்துச் செல்கின்றனர். இவர்களுடன் விவேக் மயன் நா.யோகேந்திரநாதன் என்று தொடர்வோர் பலர்.

போரின் கொடூரமும் அவலமும் வெற்றிச் செய்திகளும் சாதனைகளும் பல

போராளிகளை கவிஞர்களாக்கி அவர்களின் அனுபவங்களை ஆவணங்களாக பதிவு செய்ய வைத்திருக்கின்றது.

பெண்களின் தொகுப்பான எழுதாத உன் கவிதை பல கவிஞர்களின் வெற்றித் தொகுப்பான "ஆனையிறவு" சாவின் ஒலி துயரத்தின் குரலாக "செம்மணி" மற்றும் வானம் வசப்படும் எனப் பல தொகுப்புக்களைகள் குறிப்பிடலாம்.

சிறுகதை கவிதை நாவல் என்பவைகளை விட இசைப் பாடல்கள் குறும் படங்கள் மருத்துவம் உளவியல் சம்பந்தமான அனுபவப் பகிர்வுகள் என்பவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் புதிய போக்கும் நவீன வளர்ச்சிக்கு ஆரோக்கியத்தை தரும் என்பது திண்ணம். உண்மைச் சம்பவங்களை கதைத் தொகுப்புக்களாக ஆக்கும் முயற்சியும் அம்மாளைக் கும்பிடுறானுகள், வில்லுக் குளத்துப் பறவைகள் தொடரும் வளர்ச்சியின் அறிகுறி.

இறுதியாக இவைகளையெல்லாம் தொகுத்து நோக்கும் போது போர் தந்த வாழ்வும் அதன் கொடூரம் வன்மமும் தலைதூக்கி அதற்குள் இருந்து மீண்டும் மீண்டும் உயிர்த்தெழுந்த இந்த படைப்பாளிகளின் அனுபவ வெளிப்பாடுகளும் புதுவகையான பாய்ச்சல்களும் வெளிக் கொணரப்பட்டு பதியப்பட்டுள்ளது.

1) இதனால் தமிழுக்கு வளமூட்டுகிறது. போராட்ட நியாயங்களை எடுத்துரைக்கின்றது. மக்களின் அவல வாழ்வை பதிவு செய்வதுடன் வெளியுலகிற்கு அம்பலப்படுத்துகிறது. மறைமுக அல்லது நேரடியாக அரசியல் பேசுபவையாகவும் எதிர்ப்பிலக்கியமாகவும் கொள்ளப்படத்தக்கவை. தமிழ்த் தேசியத்தின் வலுவான குரலாகவும் போர்க்கால இலக்கியங்களின் பிறப்பிடமாகவும் அதிக எண்ணிக்கையான பெண் படைப்பாளிகளையும் போராளிகள் படைப்பாளிகளாக மாறி தங்கள் தங்கள் வாழ்வனுபவங்களை வெளிப்படுத்துபவர்களாகவும் தமிழ் மக்களின் அவலங்கள் துன்ப துயரங்கள் தெளிவாக ஆவணமாக்கியுள்ளது. புதுப்புது வடிவங்களும் உத்திகளும் கைக்கொள்ளப்படுகிறது. தூய தமிழ் மொழிப் பிரயோகங்களும் உ + ம்:- பொத்தகசாலை, வைப்பகம் புதுப்புது சொற்பிரயோகங்களும் கைக்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஈழத்து ஏனைய பிரதேச இலக்கியபரப்புடன் ஒப்பு நோக்குகையில் நாவலில் ஓரளவான வளர்ச்சிப் போக்கையும் கவிதைகளில் ஒரு புது வகையான பாய்ச்சலுடன் சிறப்பான வளர்ச்சிப் போக்கையும் சிறகதைகளில் சீரான தன்மையுமே காண முடிகிறது எனலாம்.

அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்

மன்னார் மாவட்டம்

கலைவாதி கலீல் (இ.க.நி.சேவை)
முன்னைநாள் உப பீடாதிபதி, விரிவுரையாளர்
தர்க்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி
பத்திரிகையாளர் "நவமணி"

புராதன வரலாற்றுப் பெருமையும் தனித்துவமான பாரம்பரியமும் மன்னார் மாதலத்திற்குண்டு. தென்கிழக்காசியாவின் புகழ் பெற்ற துறைமுகமாகவும் பரந்த நிலப்பரப்பை உள்ளடக்கிய இராஜதானியாகவும் விளங்கிய மாதோட்டம் எனும் மாபெரும் துறைமுகப் பட்டினம் எப்போதோ அழிந்துவிட்டது. தற்போது திருக்கேதீச்சரத்தை அண்டியுள்ள சிறு கிராமம் மட்டுமே மாதோட்டம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

மகாவம்சம், சூழவம்சத்தின் கூற்றுப்படி "மகாதித்த, மகாபுத்து என்ற பெயரிலும் சிங்களக் கல்வெட்டுக்களின்படி, மகாவாற்றி, மான்வெட்ட என்ற பெயரிலும் மாவிட்டபுரம் (கந்தபுராணம்) பெருந்துறை (திருவாசகம்) பலேசிமுண்டல் (பிளினி) சோப்பட்டினம் (பெரிப்புளூஸ்) என்பனவும் மாதோட்டத்தைக் குறிக்கும் சொற்களாவன.

"மன்னார்" என்ற பெயர் வரலாற்றுக்கால முற்பகுதியில் பிரபல்யம்

பெறவில்லை. போர்த்துக்கேயரின் வருகையின் பின்னரே மன்னார் என்ற பெயர் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்தது. தற்போது பெரும் நிலப்பகுதியை அடுத்த 19 மைல் நீளமான சிறுதீவு மட்டுமே மன்னார் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இயக்கர், நாகர், வேடர் என்போரே இலங்கையின் ஆதிக்குடிகளாவார். கி.மு.545ல் விஜயனும் அவனது தோழர்களும் மாதோட்டத்தில் வந்திறங்கிய பொழுது இயக்கரும் நாகரும் வாழ்ந்ததாக அறிய முடிகிறது.

ஆதியில் மன்னார்ப் பிரதேசத்தை நாக, இயக்க மன்னர்களே ஆட்சி செய்ததாக வரலாறுகள் கூறுகின்றன. ஆரிய வம்சம் எனும் புராண நூல் நாக மன்னர்கள் பற்றிய சில குறிப்புகளைத் தருகின்றது. கிறிஸ்துவுக்கு முன்பும் கிறிஸ்துவுக்குப் பின்பும் இவர்கள் ஆட்சி புரிந்ததாக அறிய முடிகிறது. சிங்கள மன்னர்களின் ஆதிக்கத்திலிருந்து மன்னார் விடுபட்டிருந்தது. ஆனால் முத்துக்குளித்தலின் பொருட்டு ஆரியச் சக்கரவர்த்திகளும் சிங்கள மன்னர்களும் போர்களில் ஈடுபட்டதாகவும் அறிய முடிகிறது.

மாதோட்டப் பகுதியில் உள்ள பெரிய குளங்கள் அக்காலப் பகுதியில் மன்னார்ப் பிரதேசம் நெற்களஞ்சியமாக விளங்கியதென்பதையும் அறிய முடிகிறது. பயா–பப் (Boa-Bub) எனப்படும் பெருக்க மரம் அராபியரின் வருகையையும் இப்பகுதி மக்கள் அராபியருடன் மேற்கொண்ட வர்த்தகத்தையும் பறைசாற்றி நிற்கின்றது. அக்கால கட்டத்தில் உலகின் சிறந்த துறைமுகமாக விளங்கிய மாதோட்டத்துறைமுகத்தின் மூலம் முத்து, யானைத்தந்தம், பாக்கு, ஆமைஓடு, வாசனைத்திரவியங்கள் போன்றவை ஏற்றுமதியாகின.

மன்னார் சிலாபத்துறைப் பெருங்கடலில் விளைகின்ற முத்துக்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். இபின்பதூதா என்ற கடலோடி மாதோட்டத்தின் முத்துக்குளித்தல் பற்றிய பெறுமதியான தகவல்களைத் தந்துள்ளார். அக்காலத்து இலங்கை மன்னர்களில் (ஒருவரான பராக்கிரமபாகுவும் எகிப்திய சுல்த்தானும் முத்துக்குளித்தல் பற்றி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பெரிப்புளுஸ், ஸ்ரூயோ போன்ற ஆய்வாளர்களின் குறிப்புகளின் படி மாதோட்டம் உலகின் சிறந்த வாணிப நிலையமாக விளங்கிய மகோன்ன த்துவத்தை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

மேலை நாட்டவரின் வருகையின் பின்னரே மன்னார் என்ற பெயர் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது எனக்கொள்ளலாம்.

சாம்ராஜ்யங்கள் எழுச்சியடைவதும் மண்ணோடு மண்ணாகிப் போவதும் இதிகாச உண்மை. தென்னை, மா, பலா செழித்து வளர்ந்த பிரதேசமாக இருந்தபடியால் இப்பகுதி மாதோட்டம் என்று அழைக்கப்பட்டது.

திருக்கேதீஸ்வரம் மாதோட்டத்தில் பாலாவித் தீர்த்தக்கரையில் அமைந்திருந்த புனித ஸ்தலமாகும். இத்தலத்தில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் பிரியமாக வசித்து வந்ததாகவும் கந்தருவர், தேவர், நாகர், அட்டவசுக்கள், முனிவர் வசித்து வந்ததாகவும் சமய நூல்கள் கூறுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்ட திருக்கேதீச்சரப் பதிகம் மாதோட்டத்தைப் பற்றிப் பல விடயங்களைக் கூறுகின்றன.

இந்தப் பீடிகையோடு, மன்னாரின் இலக்கியப் பங்களிப்பை நோக்குவோம்.

மன்னார் மாவட்டக் கிறிஸ்தவர்களின் தமிழ்த் தொண்டு

கத்தோலிக்க திருநீராட்டுப் பெற்ற புலவர்கள் பலர் மாதோட்டத்தில் வாழ்ந்தார்கள், இவர்கள் சமய நெறிகளையும், ஒழுக்கப் பண்புகளையும், சத்திய உண்மைகளையும், தங்கள் கவிதைகளிலும், பாடல்களிலும் புகுத்தினர். மாந்தைப்பள்ளு, வழிநடைச்சிந்து, கோவிற்பதங்கள், விருத்தங்கள் என்பனவற்றின் வழியாகவும் எண்ணக் கருத்துக்களைப் புலப்படுத்தினர். சில புலவர்களும் அண்ணாவிமார்களும் நாட்டுக்கூத்துக்கள் மூலமும் தம் எண்ணக்கருத்தை வெளியிட்டனர். திருவிழாக் காலங்களில் பாடி, நடித்து, ஆடி ஆனந்தம் பெற்றனர். யாப்பு வழி பிசகாது கவிதைகளைப் பாடியிருக்கின்றனர். தளை தட்டாத வெண்பாக்களையும் குறள் வெண்பாக்களையும் யாத்தளித்திருக்கின்றனர். இவர்கள் கத்தோலிக்க சேவையைப் பரப்ப நாடகங்களாகவும் நாட்டுக்கூத்துக்களாகவும் வட, தென்மோடியிலே பாடி, ஆடி, நடித்து உண்மைகளைத் தெளிவுபடுத்தினார்கள். அவர்கள் பணி தமிழுக்கும் சமயத்திற்கும் செய்த நற்தொண்டாக அமைந்தது. அவர்களின் கவிதைப் படைப்புக்கள் ஏட்டுச் சுவடிகளாக கட்டுப் பெட்டிக்குள் முடங்கிக் கிடக்கின்றன.

இத்தகைய நாட்டுக்கூத்துக்களை எழுதி தயாரித்த புலவர்கள், அண்ணாவிமார்களின் பிரபல்யம் பெற்ற சிலரைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

1) குருகுலநாட்டுத்தேவர் எனப்படும் தியோகு எதிர்மன்னசிங்கம்

2) லோறஞ்சுப்பிள்ளை உபாத்தியாயர்

3) கீத்தாம் பிள்ளை
4) சமரமணவாளன் (தொம்ஜ–வாம்)
5) வெள்ளைப் புலவர் உபாத்தியாயர்
6) சந்தியோகுநாவலர்
7) அருளப்பர் நாவலர்
8) அருணாசலப் புலவர்
9) கபிரியேற் புலவர்
10) நீக்கிலாப் புலவர்
11) மரியானுப் பாவிலர்
12) சூசைப் புலவர்
13) மரிசால் புலவர்

இன்னும் சில புலவர் உளர்.

இவர்கள் அனைவரும் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த மரபு வழிப் புலவர்களே!

இவர்களைப் போலவே சில முஸ்லிம் புலவர்களும் அந்த நாட்களில் கவித்துவச் சாதனைகள் நிகழ்த்தியிருக்கின்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் "விதானைப் புலவர்" என்று அன்போடு அழைக்கப்படும் (எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த) உசைன் கப்புடையார் ஆவார். இவர் எழுதிய "யானைக் காதல்" அல்லது "ய்ானைக் காவல்" என்ற பா நூல் பிரசித்தமானது. அ.ச.தே போல் எருக்கலம்பிட்டியில் வாழ்ந்த விதானைப்புலவரின் மாணவரான பக்கீர்ப்புலவரும் புகழ்பெற்றவர். இவர் ஒரு வரகவியும் கூட. கொண்டச்சியில் வாழ்ந்து வந்த "கொண்டிப்புலவர்" எனப்படும் சரீபுப் புலவர், பண்டாரவெளி, நொத்தாரிசுப் புலவர் ஆகியோர் பிரக்கியாதி பெற்றவர்களாவர்.

இவர்கள் அனைவரும் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த மரபு வழிப் புலவர்களே! இன்று நவீன இலக்கியவாதிகள் என்று சொல்லத்தக்க அளவுக்கு அல்லது எவரும் புலவர் என்று போற்றத்தக்க அளவுக்கு, மன்னார் மாதலத்தில் அங்கொணறும் இங்கொணறுமாகச் சில கவிஞர்கள் காணப்படுகிறார்கள். இன்றைய நவீன இலக்கியவாதிகளிற் பலர் தமது தாயகமான மன்னாரை வாழ்விடமாகக் கொள்ளவில்லை. விசேடமாக முஸ்லீம் மக்கள் கொழும்பு, புத்தளம், பாணந்துறை, குருநாகல் போன்ற பிரதேசங்களிலேயே வசித்துவருகின்றனர். தமிழ் மக்கள் பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளில் வசிக்கின்றனர். இந்தியாவிலும்தான் உள்நாட்டு

அகதிகளும் கணிசமாய் உளர். இப்புலம் பெயர்வில் பல இலக்கியவாதிகளும், கலைஞர்களும், ஆசியர்களும் உள்வாங்கப்பட்டமை. மன்னாரின் கலை, இலக்கிய வளர்ச்சியின் பாரிய வீழ்ச்சியாக அமைந்தது எனலாம்.

மன்னாரின் இலக்கியப் பங்களிப்புக்கள்

மன்னார்ப் படைப்பாளிகளின் இலக்கியப் பங்களிப்புக்கள், புனைகதைகள், கவிதைகள், நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், வானொலிப் பங்களிப்புக்கள் என்று வியாபித்துக்கிடக்கின்றன.

1990ம் ஆண்டுக்கு முன்னர் மன்னாரிலிருந்து கொண்டு இலக்கியம் படைத்த முஸ்லிம் படைப்பாளிகள் 1990ம் ஆண்டு, அக்டோபரில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மன்னாரை விட்டு விரட்டியடிக்கப்பட்ட பின்னர் பல துன்ப துயரங்களுக்கு மத்தியில் தங்களை ஸ்திரப் படுத்திக்கொண்டு பிறமாவட்டங்களில் வாழ்ந்து கொண்டு இலக்கியம் படைத்துவருகின்றனர். வானொலி மற்றும் தொலைக் காட்சிகளிலும் பங்களிப்பு நல்கி வருகின்றனர்.

இந்த வகையில் பிரபல எழுத்தாளர்களான வித்துவான் றஹ்மான் கலைவாதி கலீல், என்.என். ஐயூப், எச்.எம். ஷரீப், மக்கள் காதர், நி.ர்.மத் போன்றோருடன் இளம் எழுத்தாளர்களும், புனைகதை, கவிதை, நாடகம், வானொலி, தொலைக்காட்சி, சினிமா என்று தங்களது கலைத்துறை ஆற்றலை அழுத்தமாக நிறுவினர். இளம் படைப்பாளிகளான பாத்திமாநஸ்வா கலீல், வஹீதா ரஹ்மான், ஹாஜா அலாவுதீன், சுஹைப்-எம்.காசீம், சமூக ஜோதி ரபீக் அபூபக்கர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். பழையவர்களில் பல நூற்களை யாத்ததோடு தொடர்ச்சியாகப் பத்திரிகைகளில் எழுதி வந்த (இறக்கும் வரை) கலையமுதன் இக்பாலும் குறிப்பிடத்தக்கவர். இவர் மரணமடைந்த பின்னரும் இவரது உருவாக்கத்தைத் தொகதி ஒன்று வெளியானது குறிப்பிடத்தக்கது.

சினிமா உலகைப் பொறுத்த அளவில் கொடிகட்டிப் பறந்தவர்கள் இருவர். ஒருவர் பிரபல ஒளிப்பதிவாளராகவும் டைரக்டராகவும் திகழ்ந்த எம்.ஏ. கபூர். மற்றவர் கவிஞர் "சாது" (யூ.எல். ஹமீத்), வித்துவான் ரஹ்மான், எம்.ஏ. கபூர், மக்கள் காதர், கலைவாதி கலீல், பாத்திமா நஸ்வா, வஹீதா ரஹ்மான் ஆகிய இவர்கள் அனைவரும் ஒரே குடம்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கவனிக்கப்பாலது. வித்துவான் ரஹ்மான்,

கவிதை, கட்டுரை, நாடகம் போன்றவற்றிலும் மக்கள் காதர், கவிதை, சிறுகதை, பத்திரிகைச் செய்தி போன்றவற்றிலும் பிரகாசித்தனர். கலைவாதி கலீல் இலக்கியத்தின் பல்வேறு தடங்களிலும் கால்பதித்து நின்றவர். பல புரட்சிகரமான சிறுகதைகளைப் படைத்தளித்தவர் எம்.ஏ. கபூர் சிங்கள மற்றும் ஈழத்துத் தமிழ் சினிமா உலகில் கொடி கட்டிப் பறந்தவர் இன்றும் கூட நஸ்வாவும் வஹீதாவும் கவிதை, சிறுகளைகளைப் படைத்து வருபவர்கள். இவர்களுள் வித்துவானும், கலைவாதியும், வஹீதாவும் நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

மன்னாரிலுள்ள பிரபல கல்லூரிகளும் சஞ்சிகைகளை வெளியிட்டன. அதில் ஆக்கங்கள் படைத்த இளம் படைப்பாளிகள் பிற்காலத்தில் பிரபல எழுத்தாளர்களாக மிளிர்ந்தார்கள். மன்னார் புனித சவேரியார் கல்லூரி, அல் அஸ்ஹர் மகா வித்தியாலயம் இந்துக் கல்லூரி, எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம் போன்றவையும் பேசாலை, வங்காலை போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளும் சஞ்சிகைகள் சிறப்பு மலர்கள் ஆண்டு மலர்கள் வெளியிட்டு வந்தன.

அந்த வகையில் எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலத்தால் வெளியிட்ட "ஆய்கலை" என்ற சஞ்சிகையில் வித்துவான் ரஹ்மான் எம்.கே.எச். முஹம்மது, எஸ்.எச்.நி.ஃ.மத் போன்றோர் எழுதியிருக்கின்றனர். அதிபராக இருந்த எம்.கே.எச்.முஹம்மது இன்று வரலாற்று ஆய்வாளராகத் திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எமது நாட்டில் தமிழ்நாட்டுக்கு இணையாகச் சில நாவல்கள் ஆக்கப்பட்டுள்ள போதிலும் மன்னார்ப் பிரதேசத்தின் நாவல் இலக்கியப் பங்களிப்பு குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இல்லை. தமிழ் கூறு நல்லுலகில் புகழ்க்கொடி நாட்டியுள்ள அ. நா. கந்தசாமி, செ. கணேசலிங்கன், செ.யோகநாதன், செங்கை ஆழியான், கே.டானியல் இவர்களின் முன்னோடியான இளங்கீரன் (இன்னும் சிலர்) போன்றோருடன் ஒப்பிடத்தக்க அளவில் மன்னாரில் எவரும் நாவலாசிரியராக மிளிரவில்லை. இலங்கையில் முதலாவது தமிழ் நாவலைத் (அசன் பேயின்கதை) தந்தவர் ஒரு முஸ்லிமாக (அறிஞர் சித்திலெப்பை) இருந்தும் கூட, இளங்கீரனுக்குப் பிறகு எந்த ஒரு முஸ்லிமும் நாவல் இலக்கியத்தில் காத்திரமான பங்களிப்பை நல்க வில்லை என்றே நான் கூறுவேன்.

ஆயினும், பின் தங்கிய மாவட்டமான மன்னார் மாவட்டத்திலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நாவல் முயற்சி உருவாகித்தான் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. திரு.அரியரட்ணம், வரலாற்று நாவல் ஒன்றைப் படைத்திருக்கிறார். கலையமுதன் இக்பால் "ஒரு கருவண்டு பறக்கிறது" என்ற நாவலை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அவருக்குப் பின்னர் 1978ம் வருடம் ப.சூசைநாயகம் (நாவண்ணன்) "பயணங்கள் தொடர்கின்றன" என்ற நாவலைப் படைத்தளித்திருக்கிறார். 1987ம் ஆண்டு கலைவாதி கலீல் "எங்கிருந்தோ ஒரு ஜீவன்" என்ற மகுடத்தில் ஒரு தொடர் நாவலை "தினகரன்" நாளேட்டில் எழுதி வந்தார். இது அறுபது அத்தியாயங்கள் கொண்டதாகும். மன்னாரைப் பகைப்புலமாக வைத்து எழுதப்பட்ட நாவல் இ.'.தாகும். துர் அதிஸ்டவசமாக இந்நாவல் நூலுருப் பெற முடியாது போயிற்று.

1990 புலப்பெயர்வின் பின்னர் மன்னார் முஸ்லிம்கள் யாரும் நாவல் எழுதியதாக அறிய முடியவில்லை. ஆயினும் தமிழ் எழுத்தாளர்கள் (இந்து, கிறீஸ்தவ அன்பர்கள்) நாவல் எழுதியிருப்பதாகவும் அவை கையெழுத்துப் பிரதியாக இருப்பதாகவும் அறியமுடிகிறது. எனவே புனைகதை இலக்கியத்தில் நாவல் என்ற பிரிவில் மன்னார் மக்களின் பங்களிப்பு குறிப்பிடும் படியாக இல்லை என்றே கூற வேண்டியுள்ளது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

புனைகதையின் மற்றொரு பிரிவான "சிறுகதை"யைப் பொறுத்தவரை மன்னார் மக்களின் பங்களிப்பு ஓரளவு சிறப்பாக அமைந்துள்ளது என்று துணியலாம்.

நவீன புனைகதை இலக்கியத்தைப் படைத்தளிப்பதில் மன்னார் மாவட்டத்தில் இருவர் முன்னோடிகளாகத் திகழ்ந்திருக்கின்றனர். இருவரும் மன்னார்ப்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் நாவண்ணன் (சூசை நாயகம்) மற்றையவர் கலைவாதி கலீல் இருவரும் ஏராளமான சிறுகதைகள் படைத்தளித்திருக்கின்றனர். 1960ம் ஆண்டிலிருந்து எழுதிவருகின்றனர். சூசைநாயகம் பாதுகாவலன் மூலமும் கலைவாதி "இன்ஸான்" (மனிதன்)என்ற வாரஏட்டின் மூலமும் சிறு கதைத்துறைக்குள் கால்பதித்துப் பிரபலமானவர்கள். கலைவாதியின் சிறுகதைகள் இஸ்லாமிய பகைப்புலத்தில் மன்னார் மண் வாசம் கமழும் வண்ணம் எழுதப்பட்டவைகளாகும். அவை புரட்சிகரமானதாகவும் மத ரீதியான (சடங்குகள்) சர்ச்சையைத் தோற்றுவித்தனவாகவும் அமைந்திருந்தன. கண்டனத்திற்கும்

உள்ளாகின. இவரது "ஒரு வெள்ளி ரூபாய்" என்ற சிறுகதைத் தொகுதிக்கு அகில இலங்கை இலக்கிய விருதும் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுகதை ஆய்வாளரான மு.சுந்தரன் பாண்டியன் (B.A.Hons, Dip.in.Ed, M.Phil) என்பார் கலைவாதியின் சிறுகதைகள் பற்றி பின்வருமாறு கூறுகின்றார். "..... இக்கதைகள் மூலமாக உயிரோட்டமான மக்களின் உணர்வுகளையும் இரண்டறக் கலந்த தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகளையும் துல்லியமான மொழி நடையில் அழகுற வடித்துள்ளார். அவரின் முயற்சி என்றென்றும் பாராட்டப்படக்கூடியதாகும். இப்பிரதேசத்தில் நன்கு அடையாளம் காணப்பட்ட ஆரம்ப புனைகதை எழுத்தாளராக கலைவாதி கலீல் அவர்களையே சிறப்பித்துக் கூறமுடியும். தொண்ணூறுகளின் பின்னர் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட அவல வாழ்க்கை அனைவரையும் சின்னாபின்னப்படுத்தி விட்டது"

சிந்திக்க வேண்டிய வாசகம் இவை.

மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த எஸ்.எச். நி.ாமது என்பார் இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும் மூன்று நீதித் தொகுதிகளையும் வெளியிட்டிருக்கிறார். ஒரு பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றியிருக்கிறார்.

எரிகொள்ளி (1989) ஆள் அடையாள அட்டையும் ஐந்து ரூபாய் நோட்டும் (1995) என்பவை இவரது சிறுகதைத் தொகுதிகளாகும். இவரது கதைகளும் யதார்த்தமானவை; மண்வாசம் கமழுபவை; சீர்திருத்தக் கருத்துக்களை முதன்மைப்படுத்துபவை. தமிழகப் பத்திரிகைகளிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"தமிழ்நேசன்" என்ற பெயரில் எழுதிவரும் நேசன் அடிகளார் மன்னார் மண் ஈன்ற எழுத்தாளரும் ஆய்வாளரும் அறிஞருமாவார். சிறுகதை இலக்கியத்திலும் சிறப்பாகத் தடம் பதித்துள்ளார். எடுத்ததை எடுத்த இடத்தில் (1989) மௌனத்தில் பிறந்த தத்துவம் (1989) பெண்மையின் விலை என்ன? (1989) முடிவல்ல ஆரம்பம் (1991) மாதிரி (2006) என்பவை இவரது குறிப்பிடத்தக்க சிறுகதைகளாகும். "பெண்மையின் விலை என்ன?" என்ற சிறுகதை மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு தவறான நடைமுறையை படம் பிடித்துக் காட்டுகிறார். தமிழ் நேசன் இவரது எழுத்தில் நளினமும் நல்ல தமிழ்ச் சொல்லாட்சியும் நிறைந்து காணப்படுகின்றது.

மன்னார்ப் பிரதேசத்தின் மற்றொரு சிறுகதைப் படைப்பாளிதான் நறுவலிக்குளம் எஸ்.டேவிட் தான் சார்ந்த பிரதேச மக்களின் கடினமான உழைப்பையும் உன்னதமான உறவுகளையும் தலை வணங்கக்கூடிய பழந்தமிழ்ப் பண்பாடுகளையும் தான் எழுதிய சிறுகதைகள் மூலம் வெளிப்படுத்தினார். மல்லிகை, வீரகேசரி, தொண்டன், மித்திரன், புதிய உலகம், பாதுகாவலன் போன்ற பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. "வறுமையின் நிறம்" என்ற டேவிட்டின் குறுநாவல் "மித்திரன்" வார ஏட்டில் வெளியாகியது. ஈழத்து இலக்கியப் பரப்பில் சிறுகதை வரலாற்றில் டேவிட்டுக்கு ஓர் இடமுண்டு எனலாம். மன்னாரைப் பொறுத்தவரை சிறப்பான இடமுண்டு எனலாம்.

பேசாலையைச் சேர்ந்த உதயன் என்பவர் முப்பதுக்கும் அதிகமான சிறுகதைகள் படைத்தளித்துள்ளார் என்று அறிய முடிகிறது.

அடம்பனைச் சேர்ந்த திருமதி இராஜம்புஷ்பவனம் ஒரு பல்துறைக் கலைஞர். சிறுகதை, கவிதை, நாடகம் படைப்பதில் வல்லவர். சினிமாத்துறையிலும் ஈடுபாடுண்டு. ஒரு திரைப்படத்திற்குக் கதை வசனமும் எழுதியுள்ளார். சோதிடமும் பார்ப்பார். பெண் விடுதலை, பெண்மையின் ஒழுக்க சீலம் ஆகியவற்றை முதன்மைப்படுத்திப் பல சிறுகதைகள் படைத்துள்ளார். தற்போது உயிருடன் இல்லை. மற்றொரு பெண் எழுத்தாளரான மன்னார்ப் பட்டினத்தைச் சேர்ந்த பாத்திமா நஸ்வாவும் சில சிறுகதைகள் படைத்தளித்துள்ளார். இவரது "உம்மாவுக்காக ஒரு ஜிஹாத்" என்ற சிறுகதை புரட்சிகரமானது.

மேலும் சிலர் இருக்கலாம். அறியக் கூடியதாக இல்லை. மன்னார்ப் பிரதேச எழுத்தாளர்கள் கவிதை இலக்கியத்தில் காட்டிவருகின்ற அக்கறையையும் ஆர்வத்தையும் புனைகதை இலக்கியத்தில் காட்டுவதில்லை என்பது கவலைக்குரியது மன்னார்ப் பிரதேசத்திலிருந்து காத்திரமான நாவல் ஒன்றுகூட அண்மைக் காலங்களில் வெளிவராதிருப்பது கவலைக்குரியதே!

மன்னாரின் கவிதைப் பண்பாடும் பயன்பாடும்

லோரஞ்சுப்புலவர் விதானைப் புலவர், நொத்தாரிசுப் புலவர், பக்கீர்ப்புலவர் போன்ற பெரும் புலவர்களையும் வரகவிகளையும் ஈன்ற மண் மன்னார் மண்ணாகும்.

இவர்கள் வாழ்ந்த காலத்தில் யாப்பிலக்கணம் பிசகாத மரபுக் கவிதைகளும் பாடல்களுமே கோலோச்சின. இந்தச் சிறப்பான தன்மையே நாட்டுக் கூத்துப் பாடல்களிலும் பொதிந்திருந்தன. மன்னாரில் வாழ்ந்த புலவர்களில் பெரும்பாலோர் தளை தட்டாத வகையில் கவிதை பாடக்கற்றிருந்தனர். அதற்கான பயிற்சியைத் தமிழ்ப் பண்டிதர்கள் வித்துவான்களிடத்தில் பெற்றிருந்தனர். நினைத்த மாத்திரத்தில் கவி சொல்லக் கூடிய வரகவிகளும் இக்கால கட்டத்தில் வாழ்ந்திருந்தனர். காலப்போக்கில் மரபுக் கவிதைகளின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்தது. வசனக் கவிதைகளும் புதுக் கவிதைகளும் தமது செல்வாக்கைச் செலுத்தவாரம்பித்தன.

காலத்துக்கு ஏற்றபடி கவிதை தனது போக்கை மாற்றிக் கொள்ளும்; மாற்றிக் கொள்ள வேண்டியது கட்டாயமானதே! "பழையன கழிதலும் புதியன புகுதலும் விழுவது கால வகையினானே" என்று சொல்ல இம் மாறுதல் தவிர்க்க முடியாதது. மிகச்சிறந்த மரபுக் கவிஞரான சுப்ரமணியபாரதி வசன கவிதைகள் எழுதவில்லையா? அதைப்போல....

புதுக்கவிதை மரபுரீதியானதல்ல! அதாவது புதுக்கவிதைக் கென்று ஒரு யாப்புமுறை இல்லை. ஆயினும் கவிஞர்கள் கையாளும் திறத்திற்கேற்பவே புதுக்கவிதை வெற்றி பெறுகிறது.

பழம்பெரும் புலவர்கட்குப் பிற்பகுதியில் இடைக்காலத்தில் வாழ்ந்த புலவர்களும் மரபுக்கவிதைகளையே யாத்தனர். இவர்களுள் நொண்டிப்புலவர், ஹறீபு முஹம்மதுப் புலவர், விடத்தல் தீவு முஹம்மது காசீம் ஆலிம்புலவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நவீன காலத்துப் புலவர்கள், கவிஞர்களை எடுத்துக் கொண்டால் பத்திரிகை எழுத்தாளர்களாகவும் நூல் வெளியீட்டாளர்களாகவும் பல்வேறு ஊடகத்துறைப் பங்களிப்புச் செய்தவர்களாகவும் இருந்த சிலர் நினைவுக்கு வருகின்றனர். இவர்களும் மரணித்துவிட்ட வித்துவான் எம்.ஏ.றஹ்மான், எச்.எம். சரீப் (மன்னார் சரீப்) ஆகியோரோடு கவிஞர் சாது புலவர், குழந்தை, மன்னார் உமா, இராஜம் புஷ்பவனம், க. பாலதேவி, நாவண்ணன். கலைவாதி கலீல், அன்பு ஜவஹர்ஷா, கலையமுதன், எஸ்.எச். நி.ஃமத், சந்தியாப்பிள்ளை, எஸ்.ஜெகன், வீ.எஸ்.சிவகரன் ஞானராசா, வை.கஜேந்திரன், தமிழ்நேசன், பஸ்ரீனா, விக்ரம் மரிய கொறற்றி, முருங்கன் ஜெயா பாலாஜி, மன்னார் மணி, நி.ஃமத்துல்லாஹ், பாத்திமா நஸ்வா, வஹீதா ரஹ்மான்

போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

விடத்தல் தீவைச் சேர்ந்த பாடசாலை அதிபரான சந்தியாப்பிள்ளை, யோசேப் வாஸ் காவியம் என்ற நூலை 2003ம் ஆண்டு வெளியிட்டார். இது ஒரு மரபுக் கவிதை நூலாகும்.

"உறவினர் உற்றார் பெற்றார்.
உடமைகள் இறையே தந்தார்
நறவினைத் தந்த பூப்போல்
நாளை ஓர் பூ தேன் ஈயும்
துறவினைத் துணையாய்ப் பூண்டார்
தூய மா முனிவன் யோ சேவ்
நிறைவினை, இறையில் கண்டார்
நீள் நிலம் அவரைப் போற்றும்"

இவ்வாறு பாடுகிறார் சந்தியாப்பிள்ளை.

நாவண்ணன், மண்ணின் நடப்புகளைத் தனது எழுத்தில் பதிவு செய்வதில் வல்லவர். இவரது கவிதைத் தொகுதியின் மகுடம் "சுனாமிச் சுவடுகள்" அதில் ஒரு கவிதை இவ்வாறு கூறுகிறது.

"எங்களைஅழிக்கும் சிங்களர் போல
தங்கத் தமிழைத் தயவது இன்றி
பங்கப் படுத்த பாதகக் கடலான்
பேயென ஆட்டம் ஆடி முடித்தான்"

எஸ்.ஜெகனுடைய "அவஸ்தைகள்" தொகுதி பல்வேறு செய்திகளைச் சொல்லுகின்றன. இயற்கை, அரசியல், போராட்டம், சமுதாயம், காதல், மன உளைச்சல், ஆகியவற்றைப் பாடு பொருளாகக் கொண்ட இவரது கவிதைகள் எளிமை, இனிமை, உணர்ச்சி பொதிந்தவைகளாகும்.

"யுத்த அரக்கர்கள் என்னைக் கொன்று
என் இலட்சியத்தைப் புதைக்கலாம்!
என் கரங்களைத் துண்டித்து
கறைகளைப் பொசுக்கலாம்!
இன்றோ நாளையோ நான் இறக்கலாம்!
இறப்பில்லாத என் கதைகளும் கவிதைகளும்
கல்லறை மீது பூத்துக் கிடக்கும்.

என்று உணர்ச்சி பூர்வமாகப் பாடுகிறார் ஜெகள். "தமிழ்நேசன்" என்ற பெயரில் எழுதிவரும் நேசன் அடிகளாரின் கவிதைகளும் சிலாகிக்கத்தக்கன.

"தீர்வுகள் இல்லை–அதிர்வுகள் தொடர்கின்றன" என்ற மகுடத்திலான கவதையில் தமிழ் நேசன் இவ்வாறு பாடுகிறார்.

"எங்கள் சுகங்கள் எல்லாம்
சோகங்கள் ஆகிவிட்டன
எங்கள் கதைகள் எல்லாம்
காணாமல் போய்விட்டன."
வாதாடிப் பெற முடியாததை
போராடிப் பெறமுனைந்த
ஒரு மக்களினத்தின்
மௌனக் கதறல் கேட்கிறதா?....."

சிவகரனின் அனுபவமும் அறிமுகமும் நிஜங்கள் என்ற இரண்டு கவிதைத் தொகுதிகளிலும் காத்திரமான கவிதைகள் காணப்படுகின்றன. மனித நேயம், வாழ்வியல் தேடல் ஆதியாம் கருக்கள் இவரிடம் உள்ளன.

"சிந்தையில்லாத மனிதக் கருத்தைவிட
சிலையின் மௌனம் மேலானது" என்கிறார் கவிஞர் வை.கஜேந்திரனின் "துளிகள்" இன்றைய யுத்த அவலங்களைக் கூறுகின்றன.

பஸ்ரீனா வின் "விழுதுகள் தாங்கும் விருட்சங்கள்" என்ற தொகுதி பதிய தலைமுறையின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது.

"விழுதுகளின் கடமைகள்
விருட்சங்களைத் தாங்குதலே
அழுது அவர் சாகில்"

அவலந்தான் உங்களுக்கு, "என்று இவரது ஒரு பாடல் பகருகிறது. ஞானராசாவின் "எதிர்பார்ப்பு" நல்லதொரு கவிதைத் தொகுதி யாகும். பாடு பொருளை இலகுவாகவும் இனிமையாகவும் தெளிவாகவும் கூறுவது இவரது பண்பாகும்.

விக்ரமின் "நிழல் ஒதுங்கிய நிஜங்கள்" கவிஞனின் சிந்தனை மூலம் செதுக்கிய சிற்பமாகும். அவ்வாறே பாடசாலை மாணவியான மரியகொறற்றியின் "செதுக்கிய சிற்பம்" என்ற கவிதைத் தொகுதியிலும் நல்ல கவிதைகள் சில உள்ளன.

தீக்குச்சி கிடைத்தால்
தேசத்தையே எரிப்பவர்கள்

நீங்கள் ஆயுதங்களைவிட
ஆபத்தானவர்கள்" என்கிறார் இளங் கவிஞர்.

மன்னார்ப் பிரதேசத்தின் மூத்த கவிஞர்களில் ஒருவரான எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த எஸ்.எச்.நி.ஃ.மத் ஏராளமான கவிதைகளைப் படைத்திருக்கிறார். இரண்டு கவிதைத் தொகுதிகளையும் வெளியிட்டிருக்கிறார். "வாஊருக்குப் போவோம்" என்ற தொகுதி 1990ம் ஆண்டு மன்னாரிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் அவலங்களைப் பாடுகிறது.

"எங்கள் ஊரில்
எங்கள் சொந்த ஊரில்
நாம் பட்டினியாய்க் கிடந்தாலும்
பரவசமாய்க்கிடப்போம் – வா
ஊருக்குப் போவோம்; என்று உணர்ச்சிபூர்வமாகப் பாடுகிறார் கவிஞர்.
"அந்தக் கறுப்பு மாதத்தின்
கடைசி நாட்களில்தான்
எங்கள் இதயத்தின் துடிப்புகள்
இரட்டிப்பாகின"
"அந்தக் கறுப்பு மாதத்தின்
கடைசி நாட்களில்தான்
எங்கள் நண்பகலும் கூட
நடுநிசியாயின" என்றும் உணர்ச்சிப்பா இசைக்கிறார்.

மற்றொரு மூத்த கலை, இலக்கியப் படைப்பாளியான கல்லவாதி கலீலும் கடந்த ஐம்பது வருடங்களாகக் கவிதை இலக்கியம் படைத்து வருகிறார். இற்றைவரை ஓய்ந்துவிடாமல் எழுதிக் கொண்டே இருக்கிறார். இவர் "புரட்சிக் கவிஞன் கே! என்ற பெயரிலும் புரட்சிதாசன் என்ற பெயரிலும் ஏராளமான கவிதைகளைப் படைத்தளித்திருக்கிறார். இரண்டு கவிதை தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். மரபுக் கவிதைகளையே விரும்பி எழுதி வரும் இவரின் புதுக்கவிதைத் தொகுதிகளாகும் இவை. இவரது "ஓ பலஸ்தீனமே!" என்ற கவிதைத் தொகுதி 1999ம் ஆண்டு வெளியிடப்பட்டதாகும். மன்னார் வாசகர் வட்டம் இதனை வெளியிட்டது. பலஸ்தீனத்தில் நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாகக்

கொண்டு எழுதப்பட்ட கவிதைத் தொகுதியாகும் இது. சிறுவர்களின் "கல்லெறிப்போராட்டமே" கவிதைத் தொகுதியின் கருவறை.
ஒரு கவிதை இவ்வாறு கூறுகிறது.

"உயிர் நீங்கி ஓய்ந்த போதும்
உதிரமே உயிராய் மாறும்
கரம் வீழ்ந்து சாய்ந்த போதும்
குருதியே கரமாய் மாறும்"
"ஒரு கரம் ஓயும் போது
மறுகரம் கல்லை ஏந்தும்
ஓர் உயிர் சாயும் போது
மறு உயிர் கல்லை மாற்றும்!
பச்சிளம் கரங்களுக்கும்
பாரிய வலிமையுண்டே
நிச்சயம் அல்-அக்ஸா
நிச்சயம் பலஸ்தீனம்!

"பிஞ்சின் கரத்தில் அக்கினிக் குஞ்சு" என்ற மகுடத்தில் எழுதப்பட்ட இக்கவிதை "நஜீ-அல்-அலி" என்ற உலகப்புகழ் பெற்ற பலஸ்தீன, கூடார்த்த சித்திரக்காரருடைய (Carricaturist) கருத்தோவியத்துடன் பிரசுரமாகியிருந்தது.

இத் தொகுதியிலுள்ள மற்றொரு கவிதையின் இறுதி அடிகள் இவ்வாறு அமைகின்றன.

"வில்லெடுத்துப் போர் புரிந்தோம்!
"ஷெல்" லடித்துப் போர் புரிந்தோம்
நான்
சொல் லெடுத்துப் போர் புரிவேன்.
நீ-சிறு
கல்லெடுத்துப் போர் புரிவாய்"

புலிகளினால் வடபுல முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட "கறுப்பு ஒக்டோபரின் அவலங்களைப் பற்றிப் பல கவிதைகள் பாடியுள்ளார் கவிஞர்.

"கட்டளை கேட்ட ஒரு கணத்தில்
கதி கலங்கியே உடலமும் தத்தளித்தாட
பொட்டலம் ஒன்றினைத் தூக்கி–அதில்
மட்டும் உருத்தாடை பலவற்றைச் சேர்த்து
கட்டிய ஆடையோ டெழுந்து – கையில்
காசினைக் கொஞ்சம் "பேர்"எலுள் திணித்து
முட்டிய கண்ணீரை தேக்கி – அதை
முழுதுமாய் சென்னிறக் குருதியாய் ஆக்கி ....." என்று தொடர்கிறது அந்தக் கவிதை.

இவ்வாறு புதியவர்கள் சிலரும், பழையவர்களில் கலைவாதி, குழந்தை போன்றோரும் கவிதை இலக்கியம் படைத்து வருவது மன்னார் மாதலத்தைப் பொறுத்தளவில் போதுமானதாக இல்லை என்பதே எனது கணிப்பு. தற்போதைய யுத்த சூழலிலும் கூட மன்னாரின் புனைகதை முயற்சிகள் போதுமானதாக இல்லை என்றே கூறி வைக்க வேண்டியுள்ளது. அதற்கு யுத்த அவலங்களும் ஒரு காரணியாகலாம்.

மன்னாருக்கே உரிய தனித்துவமான நாட்டுக்கூத்துக்கள் தற்போது நடைபெறுவதில்லை. மன்னாரில் பரவலாக நாடகங்களும் நடிக்கப்படுவதில்லை. காரணம் நாட்டுக்கூத்துக் கலைஞர்களுக்கு வயதாகிவிட்டது. அத்தோடு பெரும்பாலானோர் புலம் பெயர்ந்து விட்டார்கள். அவ்வாறே நாடகங்கள் தயாரித்துக் கொண்டிருந்த கலைஞர்களும் புலம் பெயர்ந்து விட்டார்கள். அல்லது மௌனித்து விட்டார்கள் என்றே கூற வேண்டும்.

ஒரு காலத்தில் மன்னார்த் திறந்த வெளியரங்கில் மாதாமாதம் நடைபெற்று வந்த பௌர்ணமி கலைவிழாக்கள் இன்று கனவாய்க் கற்பனையாய்க் காற்றில் கலந்து கரைந்து விட்டன. இப் பௌர்ணமிக்கலைவிழாக்கள் மூலம் நாடகக் கலைஞர்களும் இசைக்கலைஞர்களும் கவிஞர்களும் அறிமுகமானார்கள். மீண்டும் அந்த நாள் மலராதா என்ற ஏக்கமும் எதிர்பார்ப்பும் எம் மத்தியில் உண்டு.

மன்னார் என்றாலே நமது நெஞ்சுக்குள் குறுகுறுக்கும் நாட்டுக்கூத்தும் நாடகமும் அருகிப் போய் கவிதைகள் மட்டுமே எஞ்சியிருப்பதாகக் கருதுகிறேன். புனைகதை இலக்கியம் கூட பெரிதாக வளர்ந்து வந்துள்ளதாகக் கூற முடியாது.

காரணம் புனைகதை படைக்கும் ஆர்வம் (ஆனால் ஆற்றல் உண்டு) மன்னார் இலக்கியவாதிகளிடம் ஏனோ தெரியாது இல்லாமல் போய்விட்டது.

மன்னாருக்கு வெளியே வாழும் மன்னார் மைந்தர்கள் சிலர், சினிமா, தொலைக்காட்சி போன்ற நவீன இலக்கிய முயற்சிகளில் ஓரளவு ஈடுபட்டு வருகிறார்கள் என்பது உண்மையாயினும் புனைகதை இலக்கியத்திற்கான இவர்களது பங்களிப்புப் போதாது என்பதே எனது தீர்ப்பு.